திருக்குறளில் உவமை நயம்



டாக்டர் நாவலர்

இரா. நெடுஞ்செழியன்

தமிழன்னைக்கு நாவலர் சூட்டிய புதிய அணிகலன்

நாவலர் அவர்களின் திருக்குறள் தெளிவுரையானது இனிய, எளிய, தெளிவான நூல் என்பதில் மாறுபட்ட கருத்திற்கு இடமில்லை.

அதுபோன்றே, "உலகியலுக்கு ஒத்த முறையில், உலக மக்கட் சமுதாயத்தோடு பொருந்திய வகையில், இயற்கை நிகழ்வுக்கு முரண்படாத வகையில் தெளிவுரை அமையப் பெறவேண்டும்" என்று ஓர் இடத்தில் அவர் தெரிவித்துள்ள விருப்பத்தையும் முழுமையாக நிறைவேற்றியுள்ளார்.

நாவலர் அமைதியானவர்தான்; ஆனால், அறிவுப் போர் நிகழ்த்த, அவர் எந்தக் காலத்திலும் பின்வாங்கியதில்லை. அதனால் தான், பழகுவதற்கு இனிமையான, நமது மூத்த தலைவர்களில் ஒருவரான டாக்டர் நாவலர், திருக்குறளுக்கு இனிமையான, எளிமையான, தெளிவுரை எழுதியிருப்பது, நமக்கெல்லாம் மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது.

நாவலரின் இந்தச் சீரிய இலக்கிய முயற்சி, அவரைத் திருக்குறள் உரையாசிரியர்கள் வரிசையில், செம்மாந்து நிற்க வழி வகுத்துள்ளது. தமிழ் கற்கும் மாணவர்கள், தமிழ்நூல் திறனாய் வாளர்கள், வள்ளுவத்தை தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலோடு உள்ள அத்துணைப் பேர்களுக்கும் இந்த நூல் சிறந்த விருந்தாக அமையும் என்று உளமார நம்புகிறேன்.

நாவலர் அவர்களின் 'திருக்குறள் தெளிவுரை', திருக்குறளுக்கான புதிய தெளிபொருள் விளக்க உரையாகச் சிறப்பாக எழுதப்பட்டு இன்று என்னால் வெளியிடப்பட்டதை எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

நமது நாவலர் அவர்கள், இதுநாள்வரை பல தமிழ்த் தொண்டுகள் புரிந்தபோதிலும், இன்று அவர் தமிழ் அன்னைக்குச் சூட்டியுள்ள இந்தப் புதிய அணிகலன் என்றென்றும் ஒளிவீசித் தமிழ் உலகில் நிலைத்து நிற்கும்.

- மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா
(நாவலரின் திருக்குறள் தெளிவுரை வெளியீட்டு விழா - சென்னை-18-11-1991)

00160

திருக்குறளில் உவமை நயம்

டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

நாவலர் நெடுஞ்செழியன்
கல்வி அறக்கட்டளை
4/7, மாசிலாமணி தெரு,
சீத்தம்மாள் குடியிருப்பு,
ஆழ்வார்பேட்டை,
சென்னை – 600 018.

நூல் விவரம்

நூல் தலைப்பு : திருக்குறளில் உவமை நயம்

நூல் நுவலும் பொருள் : திருக்குறளின் உவமைச் சிறப்பு

நூலாசிரியர் : டாக்டர் நாவலர்
இரா. நெடுஞ்செழியன்

பதிப்பு எண் : முதற்பதிப்பு

மொழி : தமிழ்

பதிப்புரிமை : நூலாசிரியர் குடும்பத்திற்கு

வெளியிடுவோர் : நாவலர் நெடுஞ்செழியன்
கல்வி அறக்கட்டளை,
சென்னை – 600 018

வெளியீட்டு எண் : 6
(Publication Number)

வெளியீட்டு ஆண்டு : நவம்பர், 2004

பயன்படுத்தப்பட்ட தாள் : 60 ஜிஎஸ்எம் மேப்லித்தோ

நூலின் அளவு : டெம்மி 1 x 8 (21 x 13.7 செ.மீ.)

எழுத்து : 11 பாயிண்ட்

மொத்தப் பக்கங்கள் 176

அச்சகம் : ஏசியன் பிரிண்டர்ஸ்,
சென்னை – 600 014.

விலை : ரூ. 60.00

பதிப்புரை

'ஓண்டூந் தமிழிலெழுந்த முதல் இரு கழக நூல்களும் ஆரியராலழியுண்ட பின்னர் எஞ்சியுள்ள பண்டைத் தமிழ் நாகரிகத்தையும், பண்பாட்டையும் தாங்கி நிற்கும் இருபெரும் தூண்கள் ஒல்காப் பெருமைத் தொல்காப்பியமும், தருக்கற மறையாந் திருக்குறளுமாம். இவற்றுள் முன்னது கற்றோர்க்கன்றி மற்றோர்க்கு ஏலாமையான், பின்னதே பொது மக்கட்கும் புலமக்கட்கும் ஒப்பவேற்கும் முழுமுதல் விழு நூலாம்' என்பர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்.

திருவள்ளுவர் பல நூல்களைக் கற்றவர் என்றும், இல்வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டவர் என்றும், பொதுமையில் நாட்டங் கொண்டவர் என்றும், அறத்தில் தணியா நம்பிக்கை கொண்டவர் என்றும், போலிச் சமய வேடங்களை மூடநம்பிக்கைகளைப் புறக்கணித்து ஒதுக்கியவர் என்றும் அவர்தம் நூலால் அறிகின்றோம். திருவள்ளுவர், பொய்க் கூற்றுகளும், ஊறு பயக்கும் கோட்பாடுகளும் தமிழ் மக்களிடையே பரவி வருவதைத் தடுத்து விலக்கி, அவை மேலும் பதவிப் பாழ்படுத்தாமலிருக்கும் பொருட்டுத் தமிழ் மக்களுக்கு வேண்டப்படும் ஒழுக்க முறைகளை - வாழ்வியல் நெறி முறைகளை அகம், புறப் பாகுபாட்டின் வழிநின்று, அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலிலான ஒரு நூல் செய்து தமிழ்ப் பண்பாட்டை நிலைநிறுத்த முயன்ற பெற்றியராவார்; திருவள்ளுவர் தமிழ் மரபுக் கொவ்வாத அயற் கொள்கைகளை மறுத்தும், தள்ள வேண்டியவற்றைத் தள்ளியும் கொள்ளத்தக்கனவற்றைக் கொண்டும் தமிழ் மரபு கெடாது திருக்குறளை இயற்றினார். திருவள்ளுவர் செய்வன, தவிர்வன முறையில் கருத்துகளைத் தம் நூலுள் கூறிச்

செல்கிறார். செய்யத் தக்கனவற்றைச் செய்தும், செய்யத் தகாதனவற்றை விலக்கியும் வாழ்வதே மக்கட் பண்பு - பகுத்தறிவின் பயனாகும் எனச் சான்றோர் குறிப்பிடுவர்.

'மக்களுக்கு வேண்டப்படும் உறுதிப் பொருள்களை நாடி, அவற்றையெல்லாம் தக்கவாறு தொகுத்துரைக்க ஒருப்பட்ட திருவள்ளுவர்' கால வெள்ளத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் 'நுட்பமுடன் தாங்கருதிய பொருள்களைக் கருதியவாறே எடுத்துரைக்கத் தமிழ் மொழியில் மிகச் சுருங்கிய ,யாப்பாம் குறளைத் தேர்ந்தெடுத்து, நூல் இயற்றுவாராயினர். இதனைத் திருக்குறளுக்குப் பொருளுரை என்றொரு பெயரும் உண்டு என்பது தெளிவுபடுத்துவதாகும். ஆரவாரமான கற்பனை களையும், வேண்டாப் பெருவிளக்கங்களையும், விரித்துரை களையும், பயனற்ற செய்திகளையும் திருக்குறளில் காண இயலாது; உண்மையினை உள்ளார்ந்த மதிப்போடு பின்பற்றத் தக்க அரிய பொருள்களையே அது எடுத்துரைப்பதாகும். சுருங்கிய யாப்பின் அளவும் சுருக்கமாகவே அமைந்தது. இதனால் திருக்குறள், கருத்தாழம், சொற்செறிவு, பொருள் நயம் போன்ற திட்ப நுட்பங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இம்முறையில், 'ஓதற்கு எளிதாய்' அமைந்துள்ள குறளில், நாடும், சமுதாயமும், மக்களும் வாழ்வாங்கு வாழ ஒப்பற்ற உவமைகளின் வாயிலாகத் தாம் கூறவந்த பண்பாட்டு ஒழுகலாற்றினை - வாழ்வியல் நெறிமுறைகளை - நீதிகளை - அறவியல், அறிவியல் கோட்பாடு களைப் படிப்போர் உளங்கொண்டு பயன்பெறும் வகையில் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

அணிகளில் தலையாயது உவமை அணியேயாகும். தொல்காப்பியர் உவமை அணியைச் சிறப்பித்து அதற்கெனத் தனி இயலே அமைத்துள்ளார். தொல்காப்பியர் வகுத்த இலக்கணத்திற்குச் சீரிய இலக்கியமாகத் திருக்குறள் திகழ்கின்றது.

திருக்குறளில் பயின்றுவரும் உவமைகளின் ஈடு இணையற்ற சிறப்பினை யாவரும் எளிதில் படித்துணர்ந்து,

பொருள் விளக்கங் கண்டு, பயன் கொள்வதற்கியலும் வகையில், நாவலர் அவர்கள் தமக்கே உரிய நயமிகு செழுந்தமிழ் நடையில், தாம் ஆசிரியப் பொறுப்பேற்றுத் துவங்கி நடத்தி வந்த **'மன்றம்'** இதழில் கட்டுரைகளாக வழங்கியுள்ளார். அவ்வாறு அவர் மன்றம் இதழில் 9-7-1961 முதல் 9-12-1962 வரையிலான கால அளவில், 'திருக்குறளில் உவமை நயம்' எனும் தலைப்பில் எழுதிய 43 கட்டுரைகள் இப்போது நூல் வடிவம் பெறுகின்றன.

நாவலர் அவர்கள் மாணவப் பருவந்தொட்டே திருக்குறளில் ஈடுபாடு கொண்டிருந்தவராவார். பள்ளியில் பயிலுங்கால் பள்ளி மாணவர்களிடையே தமிழ் இலக்கிய அறிவையும், ஆர்வத்தையும், உணர்வையும் மேம்படுத்தும் பொருட்டு மாணவர்கள் சிலருடன் சேர்ந்து 'திருவள்ளுவர் இளைஞர் தமிழ்க் கழகம்' எனும் அமைப்பினை நிறுவி, அதற்குத் தாம் தலைமை ஏற்று, அக்கழகத்தின் சார்பில் திங்கள்தோறும் சான்றோர்களை அழைத்து அரிய இலக்கியச் சொற்பொழிவுகளை நிகழ்த்த வழிவகுத்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்றபோது பல்கலைக் கழகத் தமிழ் மன்றத்தின் செயலாளராகப் பணியாற்றினார். தாம் மாணவப் பருவத்தில் கலந்து கொண்ட பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் முதலியவற்றிலும், பின்னர் பொது வாழ்வில் ஈடுபட்டதனையடுத்துப் பங்குகொண்ட திருமண நிகழ்ச்சிகள், கழகப் பொதுக் கூட்டங்கள், சட்டமன்ற உரைகள், பிற நிகழ்ச்சிகள் முதலியனவற்றிலும் திருக்குறள் கருத்துகளைத் தவறாது எடுத்துக் கூறிவந்த்வராவார். தனிப்பட்டவர்களுடனான உரையாடல்களிலும் கூடத் தாம் கூற வந்த கருத்துகளை மற்றவர் உளங் கொளச் செய்ய- வலியுறுத்த திருக்குறளை மேற்கோளாகக் காட்டுவதனை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

திருக்குறளிலான நாவலரின் ஆழ்ந்த புலமை, இடையறாத ஈடுபாடு ஆகியவற்றின் விளைவே அவர்தம் 'திருக்குறள் தெளிவுரை' நூலாகும். அந்நூல் இலக்கிய உலகில் நாவலருக்குச் சிறப்பானதோர் இடத்தைப் பெற்றுத் தந்துள்ளதனை யாவரும் அறிவர். நாவலர் அவர்களின் சீரிய திருக்குறள் பணிக்காகத் தமிழ்நாடு அரசு 1992ஆம்

ஆண்டிற்கான திருவள்ளுவர் விருதினை அவருக்கு வழங்கிச் சிறப்பித்தது.

திருக்குறளில் உவமை நயம் எனும் இந்நூலினை வெளியிடுவதில் 'நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை' மிகவும் பெருமை கொள்கின்றது. இந்நூலினை எம் அறக்கட்டளையின் சார்பில் வெளியிட இசைவளித்த நாவலர் அவர்களின் குடும்பத்தினர்க்கு - குறிப்பாக நாவலர் அவர்களின் துணைவியார் டாக்டர் விசாலாட்சி அம்மையார் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். நூலைச் சிறப்புற அச்சிட்டு அளித்த 'ஏசியன் பிரிண்டர்ஸ்' நிறுவனத்திற்கு எம் நன்றி உரியவாகுக.

இந்நூல் நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளையின் 6-வது நூலாக வெளியிடப் பெறுகின்றது. எம் அறக்கட்டளையின் சார்பில் ஏற்கெனவே வெளியிடப் பெற்ற நாவலர் அவர்களின் நூல்களைப் போன்று இந்நூலையும் தமிழ்கூறு நல்லுலகம் விரும்பி ஏற்றுப் போற்றிப் பயன் கொள்ளும் என நம்புகிறோம்.

சை.வே. சிட்டிபாபு
தலைவர், நாவலர் நெடுஞ்செழியன்
கல்வி அறக்கட்டளை.

சென்னை-18.
22.11.04

உள்ளுறை

		பக்கம்
	பதிப்புரை –	3
1.	கண்ணும் புண்ணும் –	9
2.	மாணாக்கனும் ஏழையும் –	13
3.	மணற்கேணியும் கல்வியும் –	16
4.	வட்டாடுதலும் சொல்லாடுதலும் –	19
5.	களர் நிலமும் கல்லாதவரும் –	24
6.	பொம்மையும் கல்லாதவனும் –	28
7.	விலங்குகளும் கல்லாதவரும் –	33
8.	ஊன்றுகோலும் உயர்ந்தோர் உறுதியுரையும் –	36
9.	வைக்கோலும் வாழ்க்கையும் –	41
10.	கொடுங்கையும் ஆன்றோர் துணையும் –	46
11.	நீரின் தன்மையும் மனித அறிவும் –	49
12.	மயிற்பீலியும் மனிதச் செயலும் –	53
13.	நுனிக் கொம்பும் அளவின் எல்லையும் –	58
14.	காக்கை வெல்லுதலும் காலமறிதலும் –	63
15.	பிணிக்கும் கயிறும் காலத்தோடு ஒழுகலும் –	68
16.	ஆட்டுக்கிடாயும் காலம் பார்த்தலும் –	72
17.	கொக்கும் காலங் கருதுவோனும் –	76
18.	முதலையும் இடமறிவோனும் –	80
19.	கப்பலும் இடத்திற்கேற்ற கருவியும் –	84

20.	சேற்றுநிலமும் பகைப்புலமும்	–	88
21.	கரையற்ற குளமும் சுற்றமற்ற மனிதனும்	–	92
22.	காக்கையும் செல்வமுடையவரும்	–	96
23.	அறிவும் புகழும்	–	100
24.	மழையும் செங்கோலும்	–	104
25.	களை எடுத்தலும் கொடியாரைத் தண்டித்தலும்	–	107
26.	நெடுவேலனும் கொடுங்கோலனும்	–	111
27.	மழைத் துளியும் அரசனின் அளியும்	–	114
28.	பண்ணும் கண்ணும்	–	117
29.	மரமும் மனிதனும்	–	120
30.	நீராம்பலும் உள்ளத்துயர்வும்	–	123
31.	யானையும் ஊக்கமுடையாரும்	–	126
32.	அஞ்சும் யானையும் அடங்கும் மனிதனும்	–	129
33.	குன்றா விளக்கும் குடியும்	–	133
34.	மரக்கலமும் மடிதுயிலும்	–	136
35.	வாளாண்மையும் வேளாண்மையும்	–	139
36.	மாடும் மனிதனும்	–	142
37.	மணமலரும் கற்றறிவாளரும்	–	145
38.	பசுமண்பானையும் வஞ்சகப் பொருளாளனும்	–	148
39.	அச்சாணியும் ஆற்றலுடையாரும்	–	151
40.	தீ எச்சமும் வினைக்குறையும்	–	156
41.	மதயானையும் செய்வினையும்	–	161
42.	தீக்காய்வாரும் அமைச்சரும்	–	167
43.	அணிகலனும் அமைச்சனும்	–	171

1

கண்ணும் புண்ணும்

கல்வியின் சிறப்பையும் பயனையும், ஏற்றத்தை யும் எழிலையும் உணர்த்த வந்த வள்ளுவப் பெருந்தகையார், கற்றோன் ஒருவனையும் கல்லாதான் ஒருவனையும் நம் முன் கொண்டுவந்து நிறுத்துகிறார். இருவரையும் பார்க்கும்படி நம்மைக் கேட்டுக் கொள்கிறார். நாமும் இருவரையும் ஏற இறங்கப் பார்க்கிறோம்.

இருவருடைய முகங்களையும் உற்று நோக்கும்படி வள்ளுவர் கூறுகிறார். நாமும் அப்படியே செய்கிறோம். இருவருடைய கண்களையும் கூர்ந்து கவனிக்கும்படியும், அவற்றுக்கிடையே என்ன வேறுபாடு தெரிகிறது என்று கண்டறிந்து கூறும்படி யும் கேட்டுக்கொள்ளுகிறார். நாம் இருவருடைய கண்களையும் மாறிமாறிப் பார்க்கிறோம். இருவருடைய கண்களும் தோலும் தசையும் உடையனவாய், நீர்ப்பசை வற்றாது, நெகிழ்ந்து, ஒளி உமிழ்ந்துகொண்டிருப்பதைக் காண்கிறோம். இருவருடைய கண்களும் ஒரே மாதிரியாகத்தான் காட்சியளிக்கின்றன; அவற்றுக்கிடையில் வேறுபாடு எதுவும் தென்படவில்லையே என்கிறோம்.

உடனே, வள்ளுவர் ஓர் ஏட்டுச்சுவடியை எடுத்து, அதனைக் கற்றோன் கையில் கொடுக்கிறார். அவன் அதனை வாங்கிக் கண்ணால் பார்த்து, வாயால் படித்து, மனத்தால் கருத்துகளை வாங்கி, அவற்றின் உண்மைத் தன்மையையும் நுண்பொருளை

யும் பழுதற அறிந்து, மிகத் தெளிவாய் விளக்கிக் கூறுகிறான். பிறகு, அந்த ஏட்டுச் சுவடியை வாங்கிக் கல்லாதான் கையில் கொடுக்கிறார், வள்ளுவர். அவன் அந்த ஏட்டுச்சுவடியைக் கையால் தடவிக்கொண்டு அப்படியே நிற்கிறான். அவனுடைய கண்கள் மட்டும் சுவடியைப் பார்க்கின்றன; ஆனால், அவனது வாய் மட்டும் அசையவில்லை. ''இருவர் கண்களுக் கிடையே உள்ள வேறுபாடு இப்பொழுதாவது புரிகிறதா?'' என்று புலவர் பெருமான் நம்மைப் பார்த்துக் கேட்கிறார்.

நாமும், "ஆமாம், ஒரு வேறுபாடு தெரிகிறது" என்கிறோம். "என்ன வேறுபாடு தெரிகிறது?" என்று கேட்கிறார், வள்ளுவர். கற்றவனுடைய கண்கள் சுவடியைப் பார்க்கின்றன. பார்ப்பது மட்டுமன்றிக் கருத்துகளைப் பருகும் தன்மையையும் பெற்றிருக் கின்றன; ஆனால், கல்லாதவனுடைய கண்கள் சுவடியைப் பார்க்கின்றனவேயன்றி அவற்றுக்குப் படிக்கவோ, படித்துக் கருத்துகளைப் பருகவோ தெரியவில்லை என்கிறோம்.

பின்னர், வள்ளுவர், கல்லாதவனின் உடலில் தென்படும் புண் ஒன்றைச் சுட்டிக்காட்டி, அந்தப் புண்ணிற்கு முன்னால் ஏட்டுச்சுவடியைப் பிரித்துக் காட்டும்படி நம்மிடம் கூறுகிறார். நாம் அவர் கூறியவாறே சுவடியைப் பிரித்துப் புண்ணிற்கு எதிரிலே நீட்டுகிறோம். "புண் என்ன செய்கிறது?" என்று வினாவுகிறார். "ஒன்றும் செய்யவில்லை, அப்படியேதான் அசையாமல் இருக்கிறது" என்கிறோம். "கல்லாதவனுடைய முகத்திலே உள்ள கண்ணுக்கும் அவனுடைய உடலிலே உள்ள புண்ணுக்கும் இந்த வகையில் என்ன வேறுபாடு தென்படுகிறது" என்று கேட்கிறார். "ஒரு வேறுபாடும் தெரியவில்லை; கல்லாதவனுடைய கண்ணும் சுவடியைப் படிக்கவில்லை, அவனது புண்ணும் படிக்கவில்லை; கல்லாதான் உடலிலே காணப்படும் புண்ணும், அவனது முகத்திலே காணப்படும்

கண்ணும் இந்த வகையிலே ஒன்றுதான்" என்று உரைக்கின்றோம்.

வள்ளுவப்பெருந்தகை கற்றோனைச் சுட்டிக் காட்டி, "இவன் கல்வி என்னும் கண்ணுடையவன், எனவே, இவனைக் கற்றோன் என்று அழைப்பீர்!" என்றும், கல்லாதவனைச் சுட்டிக்காட்டி, "இவன் கல்வி என்னும் கண் இல்லாதவன், குருடன்: முகத்தில் இரு புண் உடையவன். எனவே, இவனைக் கல்லாதவன் என்று அழைப்பீர்!" என்றும் அறிவுரை பகர்கிறார்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (குறள் – 393)

(கண்ணுடையவர் என்று உயர்த்திச் சொல்லப் படுபவர், கற்றவரே; முகத்திரண்டு புண்ணுடையவர் என்று இழித்துச் சொல்லப்படுபவர், கல்லாதவரே.)

வள்ளுவர், கல்லாதவனுடைய முகத்திலே காணப்படும் கண்ணுக்கு, உடலிலே காணப்படும் புண்ணை உவமையாகக் காட்டியுள்ளார்.

உடலிலே காணப்படும் புண்ணும் படிக்காது; முகத்திலே காணப்படும் கண்ணும் படிக்காது.

உடலில் உள்ள புண் எப்படிப் படித்தறிந்து அகக் கண்ணுக்கு உணர்த்தும் திறனற்று விளங்கு கிறதோ, அப்படியே கல்லாதான் முகத்திலே உள்ள கண்ணும் படித்தறிந்து அகக்கண்ணுக்குத் தெரிவிக்கும் திறனற்றது.

காலங்கடந்த – இடங்கடந்த – கருத்துகளையும் கண்டு, கருத்தை வளர்ப்பதால் கற்றோரின் கண், கண் என்று வழங்கப்படுகிறது. அந்தத் தன்மையை இழந்த காரணத்தால் கல்லாதாரின் கண் புண் என்று வழங்கப்படுகிது.

புண், நோவு தரும்; அதுபோலக் கல்லாதவரின் கண் காணவேண்டிய முறையின்படி நூலறிவைக் கண்டு கருத்தை வளர்க்காமல் தவறான வழியிலும் தூண்டி வருத்தம் விளைவிப்பதால் புண் ஆகிறது.

கல்வியுடைமைக்குக் கண்ணையும், கல்வியின்மைக்குப் புண்ணையும் உவமை கூறினார் வள்ளுவர் என்றும் கொள்ளலாம்.

கண், வேண்டப்படுகின்ற ஒன்று; புண், வேண்டப்படாத ஒன்று. கண், இன்பம் பயக்கும்; புண், துன்பந்தரும். கண், மூடிக் காக்கப்பட வேண்டிய சிறந்த ஒன்று; புண், திறந்து அகற்றப்பட வேண்டிய இழிந்த ஒன்று. கண், எழிலை உணர்த்துவது; புண், இழிந்த சீழை வெளிப்படுத்துவது. கண், பயன் தருவது; புண், இடுக்கண் கொடுப்பது. எனவே, கண் எப்படிப் பயன்படுகின்ற ஒன்றாக இருக்கின்றதோ, அப்படி, கற்றோர் உலகத்தார்க்குப் பயன்படுபவர் ஆவார்கள் என்பதும், புண் எப்படித் துன்பம் தருகின்ற ஒன்றாக இருக்கிறதோ அப்படிக் கல்லாதார் உலகத்தார்க்குத் துன்பம் கொடுப்பவர்கள் ஆவார்கள் என்பதும் வள்ளுவரின் கூற்றால் உணரப் படுவனவாகும்.

திருமணம்

மலர், தோட்டத்திலேயே இருக்கும்போது மணம் வீசுவதைக்காட்டிலும், அதனைப் பறித்து நுகரும்போது தான், அந்த 'நுகர்தல்' என்னும் தொழிலின் விளைவாக 'மணம்' ஏற்படுகிறது. அதுபோல் ஓர் ஆணும் பெண்ணும் தனித்தனியே இல்லாமல் ஒன்றாக - மணமகனும் மணமகளுமாக இணையும்போதுதான் அந்த 'இணைதல்' என்னும் 'தொழில்' விளையும்போதுதான் 'மணம்' ஏற்படு கின்றது. இது வாழ்விலே உண்டாகின்ற சிறந்த நிகழ்ச்சி என்பதால் 'திருமணம்' என்று வழங்கப்பெறுகிறது. இன்னும் சொல்லப்போனால், 'மணத்தல்' என்ற சொல்லுக்கு 'ஒன்று சேர்தல்', 'இணைத்தல்' என்பவைதாம் பொருள்களாகும்.

— நாவலர்

2

மாணாக்கனும் ஏழையும்

வள்ளுவர் பணம் படைத்த பணக்காரனையும் பார்க்கிறார்; அவன் எதிரிலே, அவனது பணத்தை விரும்பி, அவனிடுகிற குற்றேவல்களைச் செய்து, கை கட்டி, வாய் பொத்தி, கூனி, தலை வணங்கி நிற்கும் ஏழையையும் பார்க்கிறார்.

மற்றோர் இடத்தில், கல்வியறிவு மிகுந்த ஆசிரியரையும் பார்க்கிறார்; அவர் எதிரிலே, அவரது கல்வியறிவை விரும்பி, அவரிடுகிற பணிகளைச் செய்து, கை கட்டி, வாய் பொத்தி, கூனி, தலை வணங்கி நிற்கும் மாணாக்கனையும் பார்க்கிறார்.

பணக்காரன் முன்னால் ஏழை எப்படிக் காட்சியளிக்கிறானோ, அப்படித்தான், ஆசிரியரின் முன்னால் மாணாக்கன் காட்சியளிப்பதையும் காணுகிறார்.

மாணாக்கனுக்கு ஏழையை உவமையாக்கி ஒப்பிட்டுக் காட்டுகிறார்; அத்தோடு நில்லாமல், அதே நிலையில் வேறுபடுத்தியும் காட்டுகிறார். காட்சியில் ஏழையும் மாணாக்கனும் ஒரே தன்மையினராகக் காணப்பட்டாலும், நிலையில் இருவரும் முழுக்க முழுக்க வேறுபடுகின்றனர் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். நிலையைப்பொறுத்து எடுத்துக் கொண்டால் ஏழையின் நிலை மிகமிக இழிந்த நிலையாகும் என்றும், கற்கும் மாணாக்கனின் நிலை மிகமிக உயர்ந்த நிலையாகும் என்றும் உணர்த்துகிறார்.

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர் (குறள் – 395)

(செல்வம் மிகுந்த பணக்காரன் முன்னால் ஒன்றுமில்லாத ஏழை நிற்பதைப்போல, ஆசிரியரின் முன்னால் ஆசையால் தாழ்ந்து நின்றாலும் கல்வி கற்றவர்கள் உயர்ந்தோராகவே கருதப்படுவர்; அந்த நிலைக்கு நாணிக் கல்வி கற்காதவர்கள் எப்பொழுதும் இழிந்தோராகவே கருதப்படுவார்கள் என்பது வள்ளுவப்பெருந்தகையாரின் அறிவுரையாகும்.)

கல்லாதவர் இழிந்தவராவர் என்று உணர்த்தப் பட்டிருப்பதால் கற்றார் உயர்ந்தவராவர் என்பது தானே பெறப்படுகின்றது.

தன்னுடைய வாழ்க்கையை நல்லதாக்கிக் கொள்ள, ஏழை, பணக்காரனிடத்தில் எப்படிப் பொருளைப் பெரிதும் விரும்பி ஏங்கிக் கிடக்கி றானோ, அப்படியே கல்வி கற்கும் மாணாக்கன், தன்னுடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்ள, கல்வியறிவு செறிந்த ஆசிரியரிடத்தில் கல்வியறிவைப் பெற, பெரிதும் விரும்பி ஏங்கிக்கிடக்க வேண்டும் என்பதை வற்புறுத்துகிறார், வள்ளுவர்.

பணக்காரன் முன் பொருள் பெறும் ஆசையால் ஒருவன் தாழ்ந்து நிற்பது இழிவைக் காட்டுவதாகும்; ஆனால், கற்றார்முன் கல்வி பெறும் ஆசையால் ஒருவன் தாழ்ந்து நிற்பது உயர்வைக் காட்டுவதாகும்.

பணக்காரன் முன் பொருள் பெறும் ஆசையை விட்டுவிட்டு, ஒருவன் தாழாமல் நிற்பது உயர்வைக் காட்டுவதாகும்; ஆனால், கற்றார் முன் கல்வி பெறும் ஆசையை விட்டுவிட்டு ஒருவன் தாழாமல் நிற்பது இழிவைக் காட்டுவதாகும்.

செல்வர் முன்னே செல்வம் இல்லாதவர்கள் எப்படி அடங்கி, ஒடுங்கி, வணங்கி, தாழ்ந்து, இழிந்து நிற்கிறார்களோ அதைப் போன்றதுதான் கல்வி யுடையார் முன் கல்வியில்லாதார் நிற்பதுமாகும் என்னும் பொருள்பட, உடையார் முன் ஏக்கற்று

இல்லார் எப்படிக் கடையரோ, அப்படியே, கற்றார் முன் ஏக்கற்றுக் கல்லாதவரும் கடையரேயாவார்கள் என்று கூறுவதுமுண்டு.

பொய்யாய மானத்தை விரும்பி மெய்யாய கல்வியை இழந்தவர்கள், பின்னர் எப்பொழுதும் அறிவுடையராக ஆக வழி ஏற்படாதாகையால், அப்படிப்பட்டவர்கள் கடையரேயாவர் என்று கூறினார். இது காரணம்பற்றித்தான் 'பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே' (ஆசிரியருக்குக் கீழ்ப் படிதலாகிய நிலை குறித்துச் சினங்கொள்ளாமல், கல்வி கற்பது சால நலம் பயப்பதாகும்) என்று புறநானூற்றுச்செய்யுளும் கூறுகிறது.

கற்றாரது உயர்வையும் கல்லாதாரின் இழிவையும் உணர்த்த, 'உடையார்முன் இல்லார்' உவமையை எடுத்து வள்ளுவர் கையாண்டிருக்கும் திறன் போற்றிப் பாராட்டி மகிழ்வதற்குரியதாகும்.

நிந்திப்பினும் புகழினும் ஐயப்பாடே

பிறர் நம்மை நிந்திக்கும்போது, நாமே நம்மீது ஐயப்பாடு கொள்ளவேண்டி வரும்; பிறர் நம்மைப் புகழும்போது நாம் அவர்களைப்பற்றி ஐயப்பாடு கொள்ள வேண்டி நேரிடும்.

— நாவலர்

3

மணற்கேணியும் கல்வியும்

கடும் வெயில் எரிக்கும் கொடுமையான கோடை காலம். நீர் நிலைகளெல்லாம் வறண்டு கிடக்கின்றன. நிலப் பரப்பெல்லாம் வெடித்துக் கழனிகளெல்லாம் காய்ந்து காணப்படுகின்றன. பசுமை நிறைந்த மரங்களெல்லாம் பட்டை உரிந்து நிற்கின்றன.

அகன்ற பெரிய ஆறு. அதில் நீரற்றுப்போய்க் கொதிக்கும் தொந்தி மணல் எங்கணும் பரந்து காணப்படுகிறது. வள்ளுவர் ஆற்றின் கரைமேல் நடந்து போய்க்கொண்டிருக்கிறார். வறட்சியால் வாட்டமுற்ற மக்கள், குடிநீர் வேண்டி, ஓட்டினையும் குடத்தினையும் ஏந்தி ஆற்று மணலில் இறங்குகின்றனர். அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதை வள்ளுவர் உற்றுக் கவனிக்கிறார். மக்கள் தாம் ஏந்தி வந்த ஓடுகளால் மணலைப் பறித்தெடுத்து ஊற்றினைத் தோண்டுகிறார்கள். ஆழத் தோண்டத் தோண்ட நீர் ஊறுகின்றது. தாம் கொண்டுவந்த குடங்களில் நிரப்புகிற அளவுக்கு நீர் வேண்டுமே என்று கருதி, மேலும் மேலும் ஆழப்படும்படி ஊற்றினைத் தோண்டுகிறார்கள். ஆழப்படுத்த ஆழப்படுத்த ஊற்றினில் நீர் மேலும் மேலும் சுரக்கின்றது. தோண்டத்தோண்ட ஊறும் நீரை மக்கள் தம் குடங்களில் சேந்திக்கொள்கின்றனர்.

இந்தக் காட்சியைக் கண்ணுற்று நிற்கும் வள்ளுவருக்கு, கல்வியின் நினைவு ஏற்படுகின்றது. தோண்டத்தோண்ட ஊற்றானது நீரைத் தருவது,

பயிலப்பயிலக் கல்வி, அறிவினைக் கொடுப்பதற்கு ஒத்திருப்பதை உணர்கிறார். ஊற்றினை மக்கள் எவ்வளவுக்கு ஆழமாகத் தோண்டுகிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு நீர் சுரப்பதையும் அறிகிறார்; அதுபோலக் கல்வியினை மக்கள் எவ்வளவுக்கு எவ்வளவு ஆழ்ந்து பயிலுகிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு அறிவு ஊறுவதையும் உணர்கிறார்.

கல்வியானது ஊற்றாகவும், பயிலுதலானது தோண்டுதலாகவும், நீரானது அறிவாகவும் வள்ளுவருக்குப் படுகின்றன. பட்டதைக் குறள் வடிவில் உலகிற்கு உணர்த்துகிறார்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (குறள் – 396)

(மணலின்கண்ணே உள்ள கேணி, தோண்டிய அளவிற்கு ஊறும்; அதுபோல, மக்களுக்கு அறிவு, கற்ற அளவிற்கு ஊறும்.)

மணற்கேணி தொட்டலின்மூலம் ஏற்படுவது; கல்வி கல்லுதல் மூலம் ஏற்படுவது. தொட்டல் என்பதும் கல்லுதல் என்பதும் தோண்டுதல் என்னும் பொருளையே தருவனவாகும்.

மணற்கேணியைத் தோண்டிக்கொண்டேயிருந் தால்தான், நீர் ஊறிக்கொண்டேயிருக்கும்; அதுபோலக் கல்வியைப் பயின்றுகொண்டேயிருந்தால்தான், அறிவு ஊறிக்கொண்டேயிருக்கும். தோண்டாமல் விட்டால், மணற்கேணியின் பக்கம் சரிந்து நீரை மூடிவிடும்; அதுபோலப் பயிலாமல் விட்டால் மறதி அறிவை மறைத்துவிடும். நீர் வற்றாமல் இருப்பதற்கும் மேலும் மேலும் ஊறி எழுவதற்கும் மணற்கேணியைத் தோண்டிக்கொண்டே இருக்கவேண்டியது எவ்வளவு இன்றியமையாத ஒன்றாக இருக்கிறதோ, அவ்வளவு இன்றியமையாத ஒன்றுதான் அறிவு குறையாமலிருப்ப தற்கும், மேலும் மேலும் வளர்ச்சியுறுவதற்கும் கல்வியைப் பயின்றுகொண்டேயிருக்க வேண்டியதும் ஆகும்.

திருவள்ளுவரின் இந்தக் கருத்தை அடிப்படை யாகக்கொண்டுதான் 'வாக்குண்டாம்' ஆசிரியர் "நீரளவேயாகுமாம் நீராம்பல், தாங்கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு" என்று குறிப்பிட்டார். நீர் நிலையிலுள்ள நீர் எந்த அளவுக்கு உயருகிறதோ அந்த அளவுக்குத் தாமரையும் உயர்ந்து நிற்பதைப் போல, எந்த அளவுக்கு ஒருவர் நூல்களைப் பயிலு கிறாரோ, அந்த அளவுக்கு அவரது நுண்ணறிவும் பெருகியிருக்கும் என்பது, இதனால் உணர்த்தப் படுகிறது.

இறைக்க இறைக்க மணற்கேணி ஊறும் என்னும் கருத்தை, கொடுக்கக் கொடுக்கப் பெருஞ்செல்வம் பெருகும் என்னும் கருத்தோடு ஒப்பிட்டுப் 'பழமொழி' என்னும் நூல் "இறைக்க ஊறும் மணற்கேணி, ஈயப் பெருகும் பெருஞ்செல்வம்" என்று கூறுவது கூர்ந்து கவனிக்கத்தக்கதாகும்.

திருவள்ளுவப்பெருந்தகையார் மணற்கேணியைக் கல்விக்கு ஒப்பிட்டுக் காட்டியிருப்பது எவ்வளவு சாலப் பொருத்தமாக அமைந்திருக்கிறது என்பது உணர்ந்து மகிழ்வதற்குரியதாகும்.

சிறப்படை பெற்ற குறள்

'திரு' என்னும் சொல் தமிழில் பத்தொன்பது வகையான பொருள்களை உணர்த்தும் சிறந்த சொல்லாகும் என்பர். பத்தொன்பது வகையான சிறந்த பண்புகளையும் உள்ளடக்கிய அந்த அடைமொழியைப் பிற்காலத்தவர் குறளுக்கு இட்டிருப்பதற்குக் காரணமே, அதன் தன்னேரில்லாத் தனிச் சிறப்புக் கருதியேயாகும். திருக்குறளுக்கு முதலில் 'முப்பால்' என்னும் பெயரும். பின்னரே 'அறம்', 'திருக்குறள்', 'பொதுமறை', 'பொய்யா மொழி' போன்ற பெயர்களும் ஏற்படலாயின என்று ஆராய்ச்சி அறிஞர்கள் கூறியுள்ளனர்.

— நாவலர்

4

வட்டாடுதலும் சொல்லாடுதலும்

ஆன்றோரும் சான்றோரும் கூடியிருக்கும் பேரவையின்கண் எழுந்து நின்று சொற்பொழிவாற்ற வேண்டும் என்ற வேணவா, பொதுவாக, எல்லோர்க்கும் இருக்கிறது. ஆனால், அந்த ஆவலை நிறைவேற்றிக்கொள்ளுகிற அளவுக்கு, அறிவோ ஆற்றலோ, துணிவோ ஊக்கமோ அனைவர்க்கும் இருப்பதில்லை. மிகமிகச் சிலர்க்குத்தான் ஊக்கமே ஏற்படுகிறது. அப்படியே ஊக்கம் ஏற்பட்டாலும், அவர்கள் அனைவர்க்குமே துணிவு பிறப்பதில்லை. அப்படியே அவர்களுள்ளும் மிகச்சிலர்க்குத் துணிவு பிறந்தாலும், அவர்கள் எல்லோர்க்கும் ஆற்றல் இருப்பதில்லை. அப்படியே அவர்களுள்ளும் மிகச் சிலர்க்கு ஆற்றல் ஏற்பட்டாலும், அவர்கள் அனைவர்க்குமே போதிய அறிவு இருப்பதில்லை; அவர்களுள்ளும் மிகச்சிலர்க்குத்தான் போதிய அறிவு இருக்கிறது. அப்படியே மிகச்சிலர்க்குத்தான் போதிய அறிவு இருக்கிறது என்றாலும், அவர்கள் எல்லோர்க்குமே நூலறிவு இருப்பதில்லை. அப்படியே அவர்களுள்ளும் மிகமிகச் சிலர்க்குத்தான் நூலறிவு இருக்கிறது என்றாலும், அவர்கள் அனைவர்க்குமே நிரம்பிய நூலறிவு இருப்பதில்லை. அவர்களுள்ளும் மிகமிகச் சிலர்க்குத்தான், எதிர்பார்க்கப்படும் – ஆன்றோரும் சான்றோரும் விரும்பும் நிரம்பிய நூலறிவு இருக்கும்.

பல்வேறு வகைப்பட்ட நெறியினாலும் நிறைவுற்ற நூல்களை ஐயமறக் கற்ற கற்றோர்கள், ஊக்கத்

தோடும் துணிவோடும் ஆற்றலோடும் அரங்கம் ஏறிச் சொற்பெருக்காற்றத் தொடங்கினால், அவையில் கூடியிருக்கும் ஆன்றோரும் சான்றோரும் பெரிதும் மகிழ்ந்து, கேட்டு, திளைத்து இன்புறுவார்கள். நிறைவுற்ற நூல்கள் பலவற்றையும் கற்காவிட்டாலும், ஏதேனும் ஒரு துறைபற்றிய நூலையாவது ஐயந் திரிபறக் கற்ற கற்றோர்கள் சொற்பொழிவாற்ற முயன்றால், சான்றோர்கள் அத்தகைய சொற் பொழிவை விரும்பிக் கேட்க ஒருப்படுவார்கள். ஆனால், ஒருவன் நிரம்பிய நூலறிவைப் பெறாத கல்லாதவனாய்க் காட்சியளித்து, அவன் எவ்வளவு தான் ஊக்கத்தோடும் துணிவோடும் ஆற்றலோடும் பேசும் திறனைப் பெற்றிருந்தாலும், சான்றோர் அவனுடைய சொற்பொழிவை ஒரு பொருட்டாய் மதிக்கமாட்டார்கள். இதனைப் பொதுவாக உலகியலில் கண்டு வருகிறோம்.

கல்வி அறிவே இல்லாத, கல்லாதவர்கள் சிலர் அவையின்கண் எழுந்து நின்று பேச விரும்புகின்றனர்; அப்படியே பேசவும் செய்கின்றனர். அப்படிப்பட்ட வர்களுடைய பேச்சில் எடுப்பும் இருப்பதில்லை, தொடுப்பும் இருப்பதில்லை, முடிப்பும் இருப்பதில்லை; முன்னுக்குப்பின் தொடர்பும் இருப்பதில்லை; ஒரு கருத்தோடு மற்றொரு கருத்து பொருந்தி வருவது மில்லை; ஒரு சொல்லோடு மற்றொரு சொல் பொருத்தமாகச் சேர்ந்து நிற்பதுமில்லை. முன்னுக்குப் பின் முரண்பாடுகள்மட்டும் எல்லா வகையிலும் நிரம்ப இருப்பதுண்டு; இப்படியாக உளறிக்கொட்டு பவர்கள் இருக்கிறார்கள்.

நூலறிவு இல்லாமல் – அதுவும் நிரம்பிய நூலறிவு இல்லாமல் – அரங்கம் ஏறிச் சொற்பொழிவாற்ற முயலுபவன் எவனாக இருந்தாலும், அவன் எவ்வளவு துணிவோடு பேசும் ஆற்றல் பெற்றவனாக இருந்தபோதிலும், வேறு யார் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், வள்ளுவர் மட்டும் அவனை ஒரு சொற்பொழிவாளனாக ஒப்புக்

கொள்வதே இல்லை. அவன் என்னதான் வாயினின்றும் சொற்களை உதிர்த்தாலும், அந்தச் சொற்களைத் திருவள்ளுவர் ஏற்றுக்கொள்வதே இல்லை. ஏனெனில், அந்தச் சொற்களுக்கு மதிப்பே இல்லை என்கிறார். "ஏன் அந்தச் சொற்களுக்குத் தாங்கள் மதிப்புக் கொடுப்பதில்லை" என்று வள்ளுவரைக் கேட்டால், அதற்கு அவர், சதுரங்கக் கட்டம் வரையாமல் கழற்சிக்காய்களை உருட்டிக் கொண்டிருக்கும் ஒருவனைச் சுட்டிக்காட்டி, "அவனுக்கும் இவனுக்கும் ஒரு வேறுபாடும் இல்லை" என்று கூறுகிறார்.

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். (குறள் – 401)

(சதுரங்கக் கட்டம் வரையாமல், உருண்டைக் காய்களை ஒருவன் உருட்டுவது போன்றதுதான், அறிவு நிரம்புவதற்கு ஏதுவாகிய நூல்களைக் கல்லாது ஒருவன் சான்றோரவையின்கண் ஒன்றனைச் சொல்லுவது. அரங்கு-சூது, சதுரங்கம்; வட்டாடுதல் - உருண்டை உருட்டுதல்; கோட்டி கொளல் - அவையின்கண் ஒன்று சொல்லுதல்.)

ஆராய்ந்து பார்த்தால், திருவள்ளுவரின் கூற்றுப்படி, கல்வி கற்காதவன் சொல்லும் சொல்லும், சதுரங்கக்கோடு வரையாதவன் உருட்டும் காயும் ஒத்திருத்தலை நன்கு காணலாம். ஒரு வரைமுறை யோடு வரையப்படும் சதுரங்கக் கட்டத்தில், ஒரு முறையோடு காய்களை நகர்த்திக்கொண்டு சென்றால்தான், அந்தந்தக் கட்டத்தில் நிற்கும் காய்கள் பெறவேண்டிய மதிப்பைப் பெற்று நிற்கும்; முறையோடு வகுக்கப்பட்டுள்ள கட்டங்களில், முறையோடு காய்களை நகர்த்தாமல், பொதுவாக வெற்றிடத்தில் காய்களை உருட்டினால், அவற்றுக்கு ஒரு மதிப்பும் ஏற்படுவதில்லை. அதுபோல, ஒரு வரைமுறையோடு கற்கப்பட்ட கல்வியறிவை அடிப்படையாகக்கொண்டு, அதன் துணையில் சொற்களைச் சொல்லிக்கொண்டே போனால்தான்,

அந்தச் சொற்கள் பெறவேண்டிய மதிப்பையும் பெறும், உணர்த்த வேண்டிய பொருளையும் உணர்த்தும்.

சதுரங்கம், வரைமுறைப்படுத்தப்பட்ட கட்டங் களைப் படிப்படியாகக் கொண்டது; அதுபோல, கல்வி, வரைமுறைப்படுத்தப்பட்ட நூல்களின் அறிவைப் படிப்படியாகக்கொண்டது.

பகடைகளை முறையோடு உருட்டுவது, காய்களை முறையோடு நகர்த்தக் காரணமாகின்றது; அதுபோல, கருத்துகளை முறையோடு கோப்பது, சொற்களை முறையோடு சொல்லக் காரணமாகின்றது.

சதுரங்கக் கட்டங்களின் வழிமுறையில் மதிப்புள்ள காய்கள் நகருகின்றன; அதுபோல, நூலறிவின் வழிமுறையில் பொருளுள்ள சொற்கள் வெளிப்படுகின்றன.

சதுரங்கக் கட்டங்களின் வழியே செல்லும்போது தான், காய்கள் பெறவேண்டிய மதிப்பைப் பெறுகின்றன; அதுபோல, நூலறிவின் வழியிலே செல்லும்போதுதான் பெறவேண்டிய பொருளைச் சொற்கள் பெறுகின்றன.

சதுரங்கக் கட்டமின்றிப் பொதுவாகக் காய்களை ஒரு தொடர்பும் இல்லாமல் நகர்த்தும்போது காய்களுக்கு மதிப்பே ஏற்படுவதில்லை; அதுபோல, நூலறிவின்றிப் பொதுவாகச் சொற்களை ஒரு தொடர்பும் இல்லாமல் சொல்லும்போது, சொற்களுக்குப் பொருளே ஏற்படுவதில்லை. எனவே தான் வள்ளுவப்பெருந்தகையார், கல்லாதான் சொல்லும், சதுரங்கக் கட்டத்திலில்லாத காயும் ஒன்றுதான் என்று குறிப்பிட்டுள்ளார்.

சுருங்கக் கூறினால், சதுரங்கக்கோடு இல்லாமல் சதுரங்கம் ஆடுவோம் என்பது எப்படிக் கேலிக்குரிய ஒன்றோ அப்படியே கேலிக்குரிய ஒன்றுதான் நிரம்பிய கல்வியறிவில்லாமல், சான்றோர் அவையில் பேசுவோம் என்பது ஆகும்.

"கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக் கல்லாச் சிறாஅர் நெல்லிவட் டாடும்" (கொல்லன் பொன்னைத் தேய்த்துப் பார்ப்பதற்குப் பயன்படுத்தும் கட்டளைக்கல்லைப் போன்று சதுரங்கள் அமைந்த சதுரங்கக்கோடு இழைத்துக் கல்வி கற்காச் சிறுவர்கள், நெல்லிக்காய்களைக்கொண்டு சதுரங்க ஆட்டம் ஆடும்) என்னும் 'நற்றிணை' அடியிலிருந்து கட்டளை போன்ற சதுரங்களை அரங்காகப் பயன்படுத்துதலும், நெல்லிக்காய்களை உருண்டைக் காய்களாகப் பயன்படுத்துதலும் தெரியவருகின்றன.

இராசராச சோழன்

1945இல் நாங்கள் ஒரு நாடகப் போட்டி நடத்தி, அதில் பரிசுக்குரிய திரு. அரு. இராமநாதன் அவர்கள் எழுதிய 'இராசராச சோழன்' நாடகத்தினைத் தேர்ந் தெடுத்தோம். அடுத்த வாரத்திலேயே 'திராவிட நாடு' இதழில் இராசராச சோழனைப்பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று வெளியாயிற்று. ஆனால், கட்டுரை எழுதியவரின் பெயர் குறிக்கப்படவில்லை. அக் கட்டுரைக்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்து நான் கடிதம் எழுதினேன். அதற்கு அண்ணா அவர்கள் எழுதிய விடையில், அக்கட்டுரையை எழுதியவர் நாவலர் நெடுஞ்செழியன் என அறிவித்திருந்தார்கள். அதில், "உங்கள் நாடகத்திற்குப் பயனுடையதாக இருக்கட்டுமெனக் கருதியே நெடுஞ்செழியன் அவர்களை நான் எழுதும்படி கேட்டுக்கொண்டேன்" என்றும் குறிப்பிட்டிருந்தார்கள்.

— தி.க., சண்முகம்

5

களர் நிலமும் கல்லாதவரும்

பொதுவாக நிலத்தை இருபெரும் வகையாகப் பாகுபடுத்திக் கூறுவதைப் பார்க்கிறோம். பயிர் விளைவிப்பதற்கு ஏற்றதாக விளங்கும் நிலத்தை 'விளைநிலம்' என்கிறார்கள்; எந்தப் பயிரும் விளைவிப்பதற்குத் தகுதியற்றதாக விளங்கும் நிலத்தைக் 'களர்நிலம்' என்கிறார்கள்.

விளைநிலத்தில் நன்செய்ப் பயிரையோ புன்செய்ப் பயிரையோ நிலத்தின் தன்மைக்கேற்ப எளிதில் விளைவிக்கலாம். ஆனால், களர் நிலத்தில் எவ்வளவுதான் பாடுபட்டாலும், எந்தவிதமான பயிரையும் அறவே விளைவிக்க முடியாது.

விளைநிலத்தில் பெய்கின்ற மழைநீர், பயிரை விளைவிப்பதற்கு உறுதுணையாக இருக்கும்; ஆனால், களர்நிலத்தில் பெய்கின்ற மழைநீர் எதற்கும் பயன் பட்டாமல் நிலத்தில் அப்படியே சுவறிப்போய்விடும்.

விளைநிலத்தில் விதைக்கப்படுகின்ற வித்து, பயிராய் வளர்ந்து, மணிகளை ஈந்து, கோரிய பலனைத் தரும்; ஆனால், களர்நிலத்தில் விதைக்கப் படும் வித்து வளரவும் வளராது, மணிகளையும் ஈனாது. கோரிய பலனையும் தராது என்பது மட்டுமன்றி, விதைத்த விதையையே அந்த நிலம் தின்று, அழித்து ஒழித்துவிடும்.

"நிலத்துக்கு அணி என்ப நெல்லும் கரும்பும்" என்பதற்கிணங்க, விளைநிலம் பார்ப்பதற்கு அழகு நிறைந்து கண்ணுக்குக் குளிர்ச்சியாய்க் |காணப்படும்;

ஆனால், களர் நிலம் பார்ப்பதற்கு வறட்சியாய்க் கண்ணுக்கு அருவருப்பாய்க் காணப்படும்.

விளைநிலம் உலகோர்க்கு உணவுப்பொருள்களை ஈந்து, உலகோரின் மதிப்பைப் பெற்றுத் திகழும்; ஆனால், களர் நிலம் உலகோர்க்கு எவ்விதத்திலும் பயன்படாமல், உலகோரின் மதிப்பை இழந்து விளங்கும்.

விளைநிலத்தின் விலைப்பெறுமானம் மிகவும் அதிகமாகும்; ஆனால், களர் நிலத்தினை விலை கொடுத்து வாங்க யாரும் ஒருப்படார்.

விளைநிலத்துக்கும் களர் நிலத்துக்கும் இடையே எவ்வளவு வேறுபாடு இருக்கிறதோ, அவ்வளவு வேறுபாடு கற்றவருக்கும் கல்லாதவருக்கும் இடையிலே இருக்கின்றது என்பதைக் குறிப்பால் உணர்த்தி, கல்லாதவருக்குக் களர் நிலத்தை ஒப்பிட்டுக் காட்டுகிறார், திருவள்ளுவப்பெருந்தகையார்.

உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர். (குறள் – 406)

(கல்லாதவர், உயிரோடு இருக்கிறார்கள் என்று சிலர் குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு வாழ்பவர் களேயல்லாமல், தமக்கும் பிறர்க்கும் பயன்படாமை யால், விளையாத களர் நிலத்தோடு ஒப்பிட்டுச் சொல்லத்தக்கவராவர்.

மாத்திரை – அளவு; களர் – ஒன்றும் விளையாத உவர் நிலம்.)

கல்லாதவருக்குக் களர் நிலத்தை ஒப்பிட்டுக் காட்டுவதன்மூலம், கற்றவர்க்கு விளைநிலத்தைக் குறிப்பால் உணர்த்துகிறார் திருவள்ளுவர் என்று நாம் கொள்ளவேண்டும்.

விளைநிலத்தில் மண்வளம் இருக்கும்; அதுபோலக் கற்றவரிடத்தில் கல்வி வளம் இருக்கும். விளைநிலம் மதிப்பில் உயர்ந்து விளங்கும்; அதுபோல, கற்றவரின் மதிப்பும் உயர்ந்து விளங்கும். விளைநிலம் உணவுப் பொருளை ஈந்து உலகோரை உய்விக்கும்;

அதுபோல, கற்றவர் கல்வியறிவினை ஈந்து உலகோரை உய்விப்பர். விளைநிலம் தான் பெற்ற வித்தை மண்வளத்தின் மூலம், ஒன்றுக்குப் பத்தாக, நூறாக, ஆயிரமாக, இலட்சமாக, கோடியாகப் பெருக்கிக் காட்டும்; அதுபோலக் கற்றவர், தாம் பெற்ற உலகியல் கருத்தைக் கல்வி வளத்தின்மூலம், பல மடங்காய்ச் சிறப்புறப் பெருக்கிப் பயன்படத்தக்க வகையில் காட்டுவர். விளைநிலமும், நிலத்தில் விளைந்த பயிரும் உலகோரால் மிகவும் பாராட்டி வரவேற்கப்பெறும்; அதுபோல, கற்றவரும், அவரிடம் குடிகொண்டிருக்கும் கல்வித்திறனும் உலகோரால் பெரிதும் பாராட்டி வரவேற்கப்பெறும்.

விளைநிலத்துக்கும் கற்றவருக்கும் இடையில் எப்படி ஒருமைப்பாடு காணப்படுகிறதோ, அது போலவே களர் நிலத்துக்கும் கல்லாதவருக்கும் இடையிலே ஒருமைப்பாடு காணப்படுகிறது. இதைத் தான் வள்ளுவர் பெருமான் சுட்டிக்காட்டுகிறார்.

களர் நிலத்தில் மண்வளம் இருக்காது; அது போலவே, கல்லாதவரிடத்தில் கல்வி வளம் இருக்காது. களர் நிலத்தை யாரும் மதிக்கமாட்டார் கள்; அதுபோல, கல்லாதவரையும் யாரும் மதிக்க மாட்டார்கள். களர் நிலம் உணவுப்பொருளையும் தராது, உலகோரையும் உய்விக்காது; அதுபோல, கல்லாதவர் கல்வியறிவினைத் தரும் திறனையும் பெற மாட்டார்கள், உலகோரையும் உய்விக்கமாட்டார்கள். களர் நிலம் தன்னிடம் இடப்பட்ட வித்தைத் தின்றழித்து விடும்; அதுபோல, கல்லாதவர் தம்மிடம் அறிவிக்கப் பட்ட கருத்தைச் சீர்குலைத்துச் சிதற்டிப்பர். களர் நிலம் உலகோரால் மிகவும் வெறுக்கப்படும்; அதுபோலவே, கல்லாதவரும் உலகோரால் மிகவும் வெறுக்கப்படுவர். களர்நிலம், நிலம் என்னும் பெயரை மட்டுமே பெற்றுக் காட்சியளிக்கும்; அதுபோலக் கல்லாதவர், உயிருள்ள மனிதர் என்னும் பெயரை மட்டுமே பெற்றுக் காட்சியளிப்பர். களர் நிலத்தால் யாருக்கும் ஒரு

பலனும் கிடைக்காது; அதுபோல, கல்லாதவராலும் யாருக்கும் எவ்விதப் பலனும் கிடைக்காது. களர்நிலம் உலகத்தவர்க்கு இருந்தாலும் ஒன்றுதான், இல்லாமற்போனாலும் ஒன்றுதான்; அதுபோல, கல்லாதவர் உலகத்தவர்க்கு இருந்தாலும் ஒன்றுதான், மறைந்தொழிந்தாலும் ஒன்றுதான்.

மேற்கூறப்பட்ட காரணங்கள்பற்றிதான், வள்ளுவப்பேராசிரியர் களர்நிலம் 'உள்ளபடியே இருக்கிறது' என்ற அளவிலேயே உலகோரால் மதிக்கப் படும்; அதுபோல, கல்லாதவர் 'உயிரோடு இருக்கிறார்' என்ற அளவிலேயே உலகோரால் மதிக்கப்படுவர் என்று கூறியுள்ளார்.

வள்ளுவப்பெருந்தகையார் கல்லாதவரை எந்த அளவுக்கு வெறுக்கிறார் என்பதையும், அக்கல்லாதவர் எதற்கும் பயன்படமாட்டார் என்பதை எப்படி உணர்த்துகிறார் என்பதையும், களர் நிலத்தை உவமையாகக் காட்டுவதிலிருந்து நன்கு அறிந்து கொள்ளலாம்.

6

பொம்மையும் கல்லாதவனும்

நாம் பொதுமக்கள் கூடுகின்ற சில பொது அவைகளுக்குப் போகிறோம். அங்கெல்லாம் சான்றோரும் சாலாரும், கற்றோரும் கல்லாதவரும், பணக்காரர்களும் ஏழைகளும் என்று பல்வேறு வகைப்பட்டவர்களும் கூடுகின்றனர். கூட்டத்தில் வந்து உட்காருபவர்கள் ஒவ்வொருவரையும் நன்கு கவனிக்கிறோம்.

ஒருவர் அழகான தோற்றப் பொலிவோடு, விலை மதிப்புள்ள - கண்ணைக் கவரும் - வண்ண உடைகள் உடுத்திக்கொண்டு, எழில்மிக்க பொன்-வைர அணிகளை அணிந்துகொண்டு, தலையிலே நறுமணத் தைலம் மணக்க, முகத்திலே நறுமணப்பொடி கமழ, உடைகளிலே நறுமணம் வீச, காலிலே அழகான காலணி விளங்கக் கையிலே பொற்பூண் கட்டிய தடி திகழ அவையின் நடுவே வந்து உட்காருகிறார். எல்லோரும் அவரது தோற்றப் பொலிவைக் கண்டு வியப்படைந்து, அவரையே உற்று நோக்கி வேடிக்கை பார்க்கிறார்கள். நாமும் வியப்புணர்ச்சியோடு வேடிக்கை பார்க்கிறோம். "அவர் யார்?" என்று பக்கத்திலிருப்பவரை வினாவுகிறோம். அவர் ஒரு செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவரென்றும், சிறு குழந்தையிலிருந்து சீராட்டிப் பாராட்டி வளர்க்கப் பட்டவர் என்றும், எழுத்துகளைக் கூட்டிப் படித்த படிப்பைத்தவிர வேறு படிப்பு எதையும் அவர் படித்தவரல்லர் என்றும், முன்னோர்கள் ஈட்டி வைத்துவிட்டுப்போன சொத்துகள் ஏராளம்

இருக்கின்றன என்றும், அவர் தமது அறிவையோ ஆற்றலையோ பயன்படுத்திப் பொருள் ஈட்ட வேண்டிய நெருக்கடி நிலைமை ஏற்படவே இல்லை என்றும், அதனால் அவர் தமது அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்த வேண்டிய இன்றியமை யாமையோ, அவற்றைப் பெருக்கிக்கொள்ள வேண்டிய இன்றியமையாமையோ ஏற்படவில்லை என்றும், அவர் தம்மை அழகுபடுத்திப் பார்த்துக் கொள்வதைத் தவிர வேறு எந்த ஒரு வேலையையும் வைத்துக் கொண்டிருக்கவில்லை என்றும் கூறுகிறார்கள்.

சிறிது நேரம் கழித்து ஒருவர் அவைக்குள் நுழைகிறார். அவரைக் கண்டதும் கூடியிருந்த அனைவரும் கையொலி எழுப்பி, 'வாழ்க! வாழ்க!' என்று வாழ்த்தொலி முழக்கிப் பெருத்த ஆரவாரத் தோடு வரவேற்கிறார்கள். அமைதியாய் உட்கார்ந் திருந்து வரவேற்பதை மறந்துவிட்டு ஆர்வமிகுதியினால் சிலர் எழுந்து நின்று, துள்ளிக் குதித்து வரவேற்கத் தலைப்படுகிறார்கள். அப்படி ஆரவாரம் ஏற்படுகிற அளவுக்கு வருகிறவர் யார் என்று அறிய நாமும் இடித்துப் புடைத்து எழுந்து, முண்டியடித்து முயன்று எட்டிப் பார்க்கிறோம். ஒருவர் அழகற்ற தோற்றத் தோடு, தலைமயிரெல்லாம் எண்ணெய்ப்பசையற்று வறண்டுபோய்க் கலைந்து கிடக்க, கசங்கிய - கிழிந்து போன - தையல்கள் போடப்பட்ட - அழுக்கேறிய உடைகளை அணிந்துகொண்டு, காலிலே காலணி யில்லாமல், கையிலே கடியாரம் இல்லாமல், பையிலே பேனா இல்லாமல், தம்முடைய உடைகளைப்பற்றியோ, தம்முடைய தோற்றத்தைப் பற்றியோ கவலைப்படாமல் வந்துகொண்டிருக்கிறார். ''இவர் யார்'' என்று பக்கத்திலுள்ளவர்களை வினாவுகிறோம். ''இவர்தாம், இன்றைய வரவேற்பிற் குரிய சிறப்பு விருந்தினர்'' என்று கூறுகிறார்கள். ''இவரா அவர்! எவ்வளவோ அழகாய்த் தோற்றப் பொலிவோடு இருப்பார் என்றல்லவா எண்ணி னோம்! அவ்வளவு பெரும் புகழும் பெயரும் பெற்றவர், நேரில் பார்க்கும்போது, தோற்றத்தில் மிக

எளிமையாகக் காணப்படுவார் என்று கனவிலும் கருதவில்லையே!'' என்று திகைப்போடு கூடிய வியப்புணர்ச்சியை வெளிப்படுத்துகிறோம். அவரது கல்வியறிவின் மேம்பாட்டையும், அவர் தம் கல்வி யறிவின் துணைகொண்டு எழுதித் தள்ளியிருக்கிற சீரிய நூல்களைப்பற்றியும், அவர் செய்து காட்டி யிருக்கிற செயல்திட்டங்கள்பற்றியும், அவர் ஆற்றியுள்ள அரும்பணிகள்பற்றியும், அவரது ஆற்றல், திறமை பற்றியும் கேள்விப்பட்டிருக்கிற நமக்கு, அவரது தோற்றம் முதலில் திகைப்பையும், பிறகு வியப்பையும் தருகிறது.

நுண்ணிய நூலறிவோடு கூடிய கற்றவர்கள், எவ்வளவுதான் தோற்றப்பொலிவு அற்றவர்களாகக் காணப்பட்டாலும், அவர்களை உலகோர் பெருமிதத் தோடு வரவேற்றுப் பூரிப்படைவார்கள் என்பதையும், நூலறிவு சிறிதுகூட அற்ற கல்லாதவர்கள் எவ்வளவு தான் தோற்றப்பொலிவோடு சிறந்து காணப் பட்டாலும், அவர்களை உலகோர் மதிக்கவோ மகிழ்ந்து வரவேற்கவோ முன்வர மாட்டார்கள் என்பதையும் மேற்சுட்டிக் காட்டப்பட்டது போன்ற அவைகளில் கண்கூடாகக் காண்கிறோம்.

நூலறிவு சிறிதும் அற்றுத் தோற்றப்பொலிவோடு காட்சி தரும் கல்லாத ஒருவனை நமக்கு அறிமுகப் படுத்த வந்த வள்ளுவப்பெருந்தகையார், அவனைச் சுதையில் அழகாகச் செய்யப்பட்ட பொம்மைக்கு ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று. (குறள் – 407)

(மிக நுண்ணியதாய், மாட்சிமைப்பட்டுப் பல நூல்களிலும் ஊடுருவிக் கற்ற அறிவு இல்லாதவ னுடைய எழுச்சியுற்ற தோற்றமும் அழகும் சுதையால் மாட்சிமைப்படச்செய்த பொம்மையினுடைய எழுச்சியுற்ற தோற்றமும் அழகும் போலும் ஆகும்.

நுண் - நுண்ணிய; மாண் - மாட்சிமை; புலம்- அறிவு; எழில் - எழுச்சி; புனை - செய்த; பாவை- பொம்மை)

எழில்மிக்க பொம்மையின் அழகுக்கு எந்த அளவுக்கு எப்படிப்பட்ட மதிப்பை உலகோர் அளிப்பார்களோ, அதே அளவுக்கு அப்படிப்பட்ட மதிப்பை மட்டுந்தான் எழில்மிக்க கல்லாதவனின் அழகுக்கு உலகோர் அளிப்பார் என்று திருவள்ளுவர் அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார்.

பொம்மை பார்ப்பதற்கு அழகாக இருக்கும், அது தானே செய்யக்கூடிய செயல் எதுவும் இல்லை; அதுபோல, கல்லாதவன் பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் அவன் தானே செய்யக்கூடிய செயல் எதுவும் இல்லை. பிறர் எப்படி எப்படி ஆட்டுகிறார் களோ அப்படியெல்லாம் பொம்மை ஆடும்; அதுபோல, அறிவுடையோர் எப்படி எப்படி ஆட்டுகிறார்களோ அப்படியெல்லாம் கல்லாதவனும் ஆடுவான். பொம்மைக்கு உட்ல்ழகு உண்டு; ஆனால், உணர்வழகு இல்லை. அதுபோலக் கல்லாதவனுக்கு உடலழகு இருக்கக்கூடும்; ஆனால், உணர்வழகு இருப்பதில்லை. பொம்மை புனையப்படுவதன்மூலம் மிக்க அழகைப் பெறுகிறது; அதுபோலக் கல்லாத வனும் ஆடை அணிகளைப் புனைந்துகொள்வதன் மூலம் மிக்க அழகைப் பெறுகிறான். பொம்மையை வேடிக்கை பார்க்க மட்டுமே திரும்பிப் பார்ப்பார்கள்; அதுபோலக் கல்லாதவனை வேடிக்கை பார்க்க மட்டுமே திரும்பிப் பார்ப்பார்கள். பொம்மையால் காட்சி அளவால் மகிழ்ச்சி ஏற்படுவதைத் தவிர, மக்களுக்கு வேறு எந்த விதப் பலனும் ஏற்படாது; அதுபோலவே, கல்லாதவனால் காட்சியளவால் மகிழ்ச்சி ஏற்படுவதைத் தவிர, மக்களுக்கு வேறு எந்த விதப் பலனும் ஏற்படுவதில்லை.

தோற்றப்பொலிவால் ஏற்படும் அழகு, வேண்டப் படும் நலங்களுள் ஒன்றுதான் என்றாலும், கல்வியறிவு இல்லாத இடத்தில் அந்த நலம் இருந்தும் ஒன்றுதான்,

இல்லாமலிருப்பதும் ஒன்றுதான். கல்வியறிவு இல்லாத இடத்து அந்த நலத்திற்குச் சிறப்பு ஏற்படாது என்பதைத்தான், வள்ளுவப் பெருந்தகையார் குறிப்பால் உணர்த்துகிறார். அதனால் தான், எழில்மிக்க பொம்மையை ஒப்புவமையாகக் காட்டுகிறார். கல்லாதவனுக்கு எழிலும் இல்லை யென்றால், அவன் எழில்மிக்க பாவை அளவுக்குக் கூட மதிக்கப்படாமல், வெறும் மண்ணுக்குச் சமமாகத்தான் மதிக்கப்படுவான் என்பதும் வள்ளுவர் கூற்றிலிருந்து பெறப்படுகின்றது.

திட்டமும் தீர்மானமும்

இந்தி பொது மொழியாகத் தகுதி இல்லை என்பதைப் பல்வேறு காரணங்கள் காட்டி நிறுவிய. நாவலர். "இன்றைய நிலையில் தமிழக மக்களுக்கு - திராவிடருக்கு- தேவைப்படும் மொழிகள் இரண்டுதாம்; ஒன்று, அடிப்படை அறிவு பெற; அது தமிழ். மற்றொன்று. உலகியல் அறிவு பெற; அது ஆங்கிலம். (மொழிப் போராட்டம். பக். 95) என்று அழுத்தந்திருத்தமாக அறிவித்துள்ளார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பேரறிஞர் அண்ணாவின் தலைமையின்கீழ். தமிழகத்தின் சட்டமன்றத்தில் 'இருமொழிக் கொள்கை' தீர்மானமாகக் கொண்டுவரப்பட்டது. இருபதாண்டுகளுக்கு முன்பு தமிழைப் பேணிக் காக்க நாவலர் தீட்டிய தம் திட்டத்தைத் தாம் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்தில் செயற்படுத்திக் காட்டிவிட்டார்.

— டாக்டர் க. த. திருநாவுக்கரசு, (1970)

7

விலங்குகளும் கல்லாதவரும்

உயிரினங்களுள் 'மக்கள்' என்றும் 'மாக்கள்' என்றும் இருபிரிவுகளைக் குறிப்பிடுகிறார்கள், மேலோர். எந்தப் பிரிவை 'ம்க்கள்' என்றும், எந்தப் பிரிவை 'மாக்கள்' என்றும் குறிப்பிடுகிறார்கள் என்று ஆராய்ந்து பார்த்தால், காணல் - கேட்டல் - முகர்தல்-சுவைத்தல்-தொடுதல் என்னும் ஐம்புல னறிவை மட்டுமே கொண்டிருக்கிற உயிரினமாகிய விலங்கினத்தை 'மாக்கள்' என்றும், அப்படிப்பட்ட ஐம்புலனறிவோடு, நல்லது தீதுபற்றிச் சிந்தித்துப் பார்த்துச் செயலாற்றுகிற பகுத்தறிவை ஆறாவது அறிவாகப் பெற்றிருக்கிற உயிரினமாகிய மாந்த ரினத்தை மக்கள் என்றும் வழங்குகிறார்கள்.

விலங்கினங்கள் உள்ளது சிறத்தல் (Evolution), சூழ்நிலைத் தொடர்பு, பழக்கம் ஆகியவற்றின் காரண மாக ஏற்படுகின்ற இயற்கை அறிவிலே வளர்ந்து வருவனவாகும். ஆனால், மக்களினத்தார் மேற் சுட்டிக்காட்டிய இயற்கையறிவோடு, முயன்று பெறும் பகுத்தறிவாகிய செயற்கையறிவையும் கூடுதலாகப் பெற்று வளர்ந்து வருபவர்கள் ஆவார்கள். விலங்கினங்கள் இயற்கையறிவின் வழியே மட்டும் இயற்கையாக இயங்கும் தன்மையனவாகும்; ஆனால், மக்களினத்தார் இயற்கைப் பொருள்களைத் தம் அறிவு, ஆற்றல் ஆகியவற்றின் துணைகொண்டு, இயன்றவரையில், செயற்கைப் பொருள்களாக மாற்றியமைத்து, ஒழுங்குபடுத்தி அதன் வழியேயும் இயங்கும் தன்மையுடையவராவர். சுருங்கக் கூறினால்,

இயற்கையைச் செம்மைப்படுத்தி ஒழுங்குபடுத்தும் 'ஒழுக்க அறிவு' விலங்கினத்திற்கு இல்லை; அந்த 'ஒழுக்க அறிவு' மக்களினத்திற்கு மட்டுமேதான் உண்டு.

மக்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலே எவ்வளவு ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் காண்கிறோமோ அவ்வளவு ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்குமிடையிலே வள்ளுவப்பெருந்தகையார் காண்கிறார்.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர். (குறள் – 410)

(விலங்கோடு வைத்துக் காணும்போது மக்கள் எத்துணை அளவுக்கு அறிவிலும் பண்பிலும் ஒற்றுமை வேற்றுமையுடையவரோ, அத்துணை அளவு ஒற்றுமை வேற்றுமைகளைக் கல்லாதவரோடு வைத்துக் காணும்போது விளங்கிய நூல்களைக் கற்றவர்கள் உடையவராவர்.)

விலங்கினத்துக்கும் மக்களினத்துக்கும் இடையே எப்படிப்பட்ட நிலை நின்று வேறுபடுத்திக் காட்டுகிறதோ, அப்படிப்பட்டதொரு நிலை கல்லாதவருக்கும் கற்றவருக்கும் இடையே இருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது என்பதை வள்ளுவப் பேராசிரியர் சுட்டிக்காட்டுவதோடு விலங்கினத்தைக் கல்லாதவருக்கும், மக்களைக் கற்றவருக்கும் உவமையாக்கிக் காட்டுகிறார்.

விலங்கினங்கள் ஐம்புலனறிவாகிய இயற்கை அறிவு வழி இயங்குவன; அதுபோலக் கல்லாதாரும் ஐம்புலனறிவோடு இயங்குபவர்களாவார்கள். கல்லாதார்க்குச் சூழ்நிலைத் தொடர்பு, பழக்கம் ஆகியவற்றைப் பொறுத்துச் செயற்கை அறிவாகிய பகுத்தறிவு ஏற்படக்கூடும் என்றாலும், அது கற்றார்க்கு அமைந்திருப்பதைப் போன்று பயன்படக் கூடிய பகுத்தறிவாக அமையாதாகையால், அது இருந்தும் இல்லாத ஒன்றாகவே கருதப்படும். எனவே தான், ஐம்புலனறிவோடு மட்டும் காணப்படும்

விலங்கினமும், அதே ஐம்புலனறிவோடு விளங்கும் மக்களினமும் ஒரே வகையில் வைத்து எண்ணப்படக் கூடியனவாகும் என்கிறார், பொய்யாமொழியார்.

விலங்கினங்கள் இயற்கை வழி நடப்பன; அதுபோல, கல்லாதவர்கள் பழக்கவழி நடப்பவர்கள். விலங்கினங்களுக்குத் தாமாகச் சிந்தித்து எதையும் செய்ய இயலாது; அதுபோலக் கல்லாதவர்களுக்கும் தாமாகச் சிந்தித்து எதையும் செய்ய இயலாது. விலங்கினங்கள் உண்ணும்; ஓசைகளைக் கேட்கும்; பொருள்களை முகரும்; பிறவற்றைப் பார்க்கும்; பொருள்களைக் காலாலோ கையாலோ முகத்தாலோ கொம்பாலோ வாயாலோ நாக்காலோ தொட்டுணரும்; அதுபோலக் கல்லாதவர்களும் உண்ணுவர், கேட்பர், முகருவர், பார்ப்பர், தொட்டுணர்வர். விலங்கினங்கள் நூல்களைப் படிக்கா; அதுபோலக் கல்லாதவரும் நூல்களைப் படிக்கார். விலங்கினங்களுக்கு விழுமிய வாழ்க்கையை நடத்தத் தெரியாது; அதுபோலக் கல்லாதவர்களுக்கும் விழுமிய வாழ்க்கையை நடத்தத் தெரியாது.

அறிவிலும் ஆற்றலிலும் பண்பிலும் மக்கள் எப்படி விலங்கினங்களைவிட மிகச்சிறந்த நிலையில் வைத்து எண்ணப்படுகிறார்களோ, அதுபோலவே, நூலறிவு, சீரிய ஆற்றல், சிறந்த பண்பு ஆகியவற்றில் கற்றோர், கல்லாதவர்களைக்காட்டிலும் மிக்கோராகவும் விளங்குகிறார்கள்.

நூலறிவு அற்றவர்களை வள்ளுவர் எவ்வளவு கடுமையாக இழித்துரைக்கிறார் என்பதைத்தான், அவர் கல்லாதவருக்கு உவமையாக விலங்குகளைக் காட்டுவது உணர்த்துகிறது.

கற்றவர்களை மட்டுமேதான் மக்களாக மதிக்க வேண்டும் என்பதையும், கல்லாதவர்களை விலங்குக்கு ஈடாக வைத்து எண்ணவேண்டும் என்பதையும் திருவள்ளுவர் உணர்த்தும் பாங்கு போற்றி மகிழ்வதற்குரியதாகும்.

8

ஊன்றுகோலும் உயர்ந்தோர் உறுதியுரையும்

மனிதன் எந்த வகையில் உயர்ந்தவனாகிறான் என்று கேட்டால், மனிதன் ஆறாவது அறிவாகிய பகுத்தறியும் அறிவைக் கொண்டவன், பறவை யினங்கள், மற்ற விலங்கினங்கள் ஆகியவற்றிற்குப் பகுத்தறியும் அறிவு இல்லை, எனவேதான், மனிதன் உயிர்வகைகளுள் மிக உயர்ந்தவனாகக் கருதப் படுகிறான் என்று உலகோர் பொதுப்படையாக, மேலெழுந்தவாரியாக விளக்கம் தருகிறார்கள். ஆனால், மிக நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால் பறவையினங்களும் விலங்கினங்களும் உள்ளது சிறத்தல், சூழ்நிலைத் தொடர்பு, வாழ்வதற்கான போராட்டம், பழக்க அறிவு ஆகியவற்றின் காரணமாக ஓரளவான பகுத்தறிவை இயற்கையாகக் கொண்டிருக்கத்தான் செய்கின்றன.

இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்கிற மிகச்சிறந்த முழு அறிவு பெற்றிருக்கும் ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய பகுத்தறிவு நூறு பங்கு என்று ஒப்புக்காக ஒரு கணக்கை வைத்துக் கொண்டால், எல்லோருக்குமே நூற்றுக்கு நூறு பங்கு பகுத்தறிவு இருப்பதில்லை. இருக்கவேண்டிய பகுத்தறிவில் எண்பது பங்கு பகுத்தறிவை மட்டும் கொண்டிருப்பவர்களைப் பொதுவாகப் 'பேரறிவாளி கள்' என்கிறோம்; அறுபது பங்கினை மட்டுமே கொண்டிருப்பவர்களை 'அறிவாளிகள்' என்கிறோம்;

ஐம்பது பங்கினை மட்டுமே கொண்டிருப்பவர்களைச் 'சராசரி மனிதர்கள்' என்கிறோம்; நாற்பது பங்கு உடையவர்களை 'முட்டாள்கள்' என்றும், முப்பது பங்கு உடையவர்களைப் 'படுமுட்டாள்கள்' என்றும், இருபது பங்கு உடையவர்களை 'அடி முட்டாள்கள்' என்றும் வழங்குகிறோம். சாதாரணமாக, ஒரு குருட்டுக் கணக்கைப் போட்டுப் பார்த்தால், குருவிக்கு இரண்டு பங்கு பகுத்தறிவும், காக்கைக்கு மூன்று பங்கு பகுத்தறிவும், அதுபோலக் கிளிக்கு நான்கு பங்கும், பன்றிக்கு ஐந்து பங்கும், மாட்டுக்கு எட்டுப் பங்கும், நாய்க்குப் பத்துப் பங்கும், அல்சேசியன் நாய்க்குப் பன்னிரண்டு பங்கும், காவல் துறையினரின் நாய்க்குப் பதினைந்து பங்கும், சாதாரண குரங்குக்குப் பதினெட்டுப் பங்கும், கொரில்லாக் குரங்குக்கு இருபது பங்கும் இருக்கக்கூடும். மனிதனுக்கும் விலங்குக்கும் பகுத்தறிவு முறையே கூடக் குறைய இருக்கலாமே ஒழிய, மனிதனுக்கு மட்டுந்தான் பகுத்தறிவு உண்டு, விலங்குக்கு அறவே இல்லை என்று சொல்லிவிட முடியாது. அப்படியானால், பின் எந்த வகையில் மனிதன் சிறப்புடையவனாகக் கருதப்படுகிறான் என்று கேட்கத் தோன்றும். இயற்கையின் நிலையையும் ஆற்றலையும் ஒழுங்குபடுத்துகிற அறிவு மனிதனுக்கு மட்டுந்தான் உண்டு; அப்படிப்பட்ட ஆற்றல் விலங்கினத்திற்கோ, பறவையினத்திற்கோ இல்லை; அவை உள்ளது சிறத்தல், பழக்க அறிவு ஆகியவற்றின் வழி நடப்பனவேயல்லாமல், இயற்கையைத் தம் விருப்பத்திற்கு ஏற்பத் தம் வழிக்கு மாற்றி வைத்துக்கொள்ளும் திறன்படைத்தவையல்ல. ஆனால், மனிதன் இயற்கையின் நிலையையும், ஆற்றலையும் தன்னால் இயன்ற அளவுக்குத் தன் விருப்பத்திற்கு ஏற்ப, தன் வழிக்கு மாற்றியமைத்து ஒழுங்குபடுத்திக்கொள்ளும் திறன் பெற்றவன் ஆவான். அந்த 'ஒழுங்கு' என்ற சொல்லின் அடிப்படையாகப் பிறந்த ஒன்றுதான் 'ஒழுக்கம்' என்ற சொல். ஒழுக்கம் மனிதனுக்குத் தனியான விழுப்பத்தைப் பயக்கிற

காரணத்தால்தான் வள்ளுவர் அதனை உயிரைக் காட்டிலும் சிறப்பாகப் பேணிக் காக்கப்பட வேண்டிய ஒன்று என்கிறார்.

பொதுவாக, விலங்குகளுக்கு இயற்கையாக உள்ள சினம் - சீற்றம், வெறி - கொடுமை போன்ற பண்புகளைக் குறைத்துக்கொள்ளவோ, அன்பு, ஆவல், ஈவு, இரக்கம், போன்ற பண்புகளைப் பெருக்கிக் கொள்ளவோ தெரியா. ஆனால், குறையில்லாத அறிவையும், தூய பண்பையும் கொண்டிருக்கிற சான்றோர்கள் குறைக்க வேண்டிய-அடக்கவேண்டிய-நீக்கவேண்டிய தீய பண்புகளைக் குறைத்தும் அடக்கியும் நீக்கியும், கொள்ளவேண்டிய - பெருக்க வேண்டிய - காக்க வேண்டிய நல்ல பண்புகளைக் கொண்டும் பெருக்கியும் காத்தும் சிறப்பான வாழ்வு வாழும் திறன் படைத்தவர்களாவார்கள்.

நன்மை தீமை, இன்பதுன்பம், நிறைகுறை ஆகியவற்றின் தன்மைகளையும் வேறுபாடுகளையும் உணர்ந்து, நன்மை, இன்பம், நிறை ஆகியவற்றைப் பெருக்கியும், தீமை, துன்பம், குறை ஆகியவற்றை நீக்கியும் வாழத் தெரியாத மக்கள் துன்பத்தில் உழல்வதைப் பார்க்கிறோம். நீக்கவேண்டியவைகளை நீக்கியும், பெருக்கவேண்டியவைகளைப் பெருக்கியும் வாழக்கூடிய ஒழுக்க நெறியை நன்கு உணர்ந்த சான்றோர்கள் அமைதியான இன்ப வாழ்வை நடத்திச் செல்வதைப் பார்க்கிறோம். அப்படி ஒழுக்கத் தால் உயர்ந்து வாழும் சான்றோர்கள் கண்டறிந்து கூறும் உறுதியுரைகள் வாழத்தெரியாதவர்களுக்கு வழி காட்டியாகவும் பெருந்துணையாகவும் அமைகின்றன.

ஒழுக்கமுடையார் கூறுகின்ற உறுதியுரைகள், வாழத்தெரியாமல் வாழ்க்கையில் தவறுபவர்களுக்கு எப்படிப் பயன்படுகின்றன என்பதை வள்ளுவப் பெருந்தகையார், வழுக்குகின்ற நிலத்தில் நடந்து செல்பவர்களுக்கு ஊன்றுகோல் எப்படிப் பயன்படு கிறதோ அப்படி அவை பயன்படுகின்றன என்று அழகானதோர் உவமையின்மூலம் கூறி விளக்கம் தருகிறார்.

இழுக்க லுடையுழி ஊற்றுக்கோ லற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல் (குறள் – 415)

(ஒழுக்கமுடையவரது வாயிலிருந்து பிறக்கின்ற சொற்கள், வழுக்கல் உடைய சேற்று நிலத்திலே ஊன்றுவதற்குப் பயன்படும் ஊன்றுகோல்போல உதவுவனவாகும்.

வாய்ச்சொல் என்பதற்கு வாயிலிருந்து பிறக்கின்ற சொற்கள் என்றும் கொள்ளலாம், வாய்மையை நிலை நிறுத்தும் உண்மைச் சொற்கள் என்றும் கொள்ளலாம்.)

ஒழுக்கமுடையாரின் வாய்ச்சொல்லை, வழுக்கு நிலத்திலே ஊன்றப்படும் ஊன்றுகோலுக்கு ஒப்பிட்டு, ஊன்றுகோலை உவமைப்பொருளாக வள்ளுவர் காட்டியிருக்கும் திறம் மிகவும் போற்றுதற்குரியதாகும்.

வழுக்கல் உடைய சேற்று நிலத்தை வாழத் தெரியாதவர்களின் வாழ்க்கைக்கும், சேற்று நிலத்தில் நடந்து செல்பவர்களை வாழத்தெரியாமல் தவித்திடு வோர்க்கும், ஊன்றுகோலை ஒழுக்கமுடைய உயர்ந்தோரின் வாய்ச்சொல்லுக்கும் வள்ளுவர் ஒப்பிடுகிறார்.

சேற்று நிலம் இயற்கையாகவே வழுக்கும் தன்மையைக் கொண்டது; அதுபோல, மனித வாழ்க்கை இயல்பாகவே தவறும் தன்மையுடையது. சேற்று நிலம் நடந்து செல்பவர்களை எங்கே வழுக்கி விடும், எங்கே வழுக்கிவிடாது என்பது முன்கூட்டித் தெரியாது; அதுபோல, வாழ்க்கை மக்களை எங்கே தவறவிடும், எங்கே தவறவிடாது என்பது முன்கூட்டித் தெரியாது. வழுக்கும் நிலத்தைக் கடக்கவேண்டிய இன்றியமையாமை ஒருவருக்கு ஏற்பட்டே தீருகிறது; அதுபோலத் தவறும் வாழ்க்கையை ஈடேற்ற வேண்டிய இன்றியமையாமை ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டே தீருகிறது. வழுக்கு நிலத்தில் வழுக்கி விழாமல் இருக்க ஊன்றுகோல் ஒன்றை உதவியாக எடுத்துச் செல்ல வேண்டிய கட்டாயம் ஒருவருக்கு

ஏற்படுகிறது;. அதுபோல, வாழ்க்கையில் தவறிவிடாமல் இருக்க உயர்ந்தவர்களின் உண்மையுரைகளை உதவியாகக் கொண்டுசெல்ல வேண்டிய கட்டாயம் ஒவ்வொருவருக்கும் ஏற்படுகிறது. ஊன்றுகோல் ஒருவரை விழாமல் தாங்கிக்கொள்ளும் உறுதி படைத்தது; அதுபோல, உயர்ந்தோரின் உண்மை யுரைகள் ஒவ்வொருவரையும் தவறிவிடாமல் காத்துக் கொள்ளும் உறுதி படைத்தவை. ஒருவர் சேற்றில் வழுக்கி விழும்போது ஊன்றுகோல் உறுதுணையாக நின்று உதவும்; அதுபோல, வாழ்க்கையில் தவறி விழும்போது ஒழுக்கமுடையாரின் உண்மையுரைகள் உறுதுணையாக நின்று உதவும். ஊன்றுகோல் இல்லாவிட்டால் சேற்றில் ஏற்படும் வழுக்கலில் நடந்துசெல்வோர் வீழ்ச்சியுற்றே தீருவர்; அதுபோல, ஒழுக்கமுடையாரின் உறுதியுரைகளை மேற்கொள்ளா விட்டால் வாழ்க்கையில் ஏற்படும் தவறுகளினால் உயிர் வாழ்வோர் ஒவ்வொருவரும் வீழ்ச்சியுற்றே தீருவர். இப்படிப்பட்ட காரண விளக்கங்களை அடிப்படையாகக்கொண்டு தான், வள்ளுவப் பெருந்தகையார் உயர்ந்தோரின் உறுதியுரைக்கு ஊன்றுகோலை உவமையாக்கிக் காட்டியுள்ளார். இது பெரிதும் வியந்து பாராட்டுவதற்குரியதாகும்.

9

வைக்கோலும் வாழ்க்கையும்

ஒருவர் தமக்கும் பிறர்க்கும் உவகை, மகிழ்ச்சி, சிரிப்பு, இன்பம் முதலியவை ஏற்படக் காரணமாக இருக்கும் இயற்கை நிகழ்ச்சிகளையும், செயற்கை நிகழ்ச்சிகளையும் நன்மை பயக்கும் வினைகள் என்கிறோம். ஒருவர் தமக்கும் பிறர்க்கும் வெறுப்பு, அருவருப்பு, வருத்தம், துக்கம், துயர், துன்பம் முதலியவை ஏற்படக் காரணமாக இருக்கும் இயற்கை நிகழ்ச்சிகளையும் செயற்கை நிகழ்ச்சிகளையும் தீமை பயக்கும் வினைகள் என்கிறோம்.

தமக்கும் பிறர்க்கும் இன்பம் பயக்கும் வினை களையே அறிவுடையோர் வற்புறுத்துகின்றனர். தமக்கும் பிறர்க்கும் துன்பம் பயக்கும் வினைகளை அறவே களைந்தெறியும்படி அவர்கள் கூறுகின்றனர். தமக்கு மட்டும் துன்பம் பயந்து, பிறர்க்கு இன்பம் பயக்கும் வினைகளை அவர்கள் எப்பொழுதும் பெருமிதத்தோடு வரவேற்கின்றனர். தமக்கு மட்டும் இன்பம் பயந்து, பிறர்க்குத் துன்பம் பயக்கும் வினைகளை அவர்கள் எப்பொழுதும் மிகக் கடுமையாக எதிர்க்கின்றனர்.

ஒருவன் இன்பம் பயப்பதற்குக் காரணமான வினைகளைப் பொதுவாக எல்லோர்க்கும், குறிப்பாகப் பிறர்க்குச் செய்யும்போது, அவன் அறத்தை - அதாவது கடமையைச் செய்கிறான் என்று கருதப்படுகிறான். அவன் துன்பம் பயப்பதற்குக்

காரணமான வினைகளைப் பொதுவாக எல்லோர்க் கும், குறிப்பாகப் பிறர்க்குச் செய்யும்போது, அவன் மறத்தை - அதாவது குற்றத்தைச் செய்கிறான் என்று கருதப்படுகிறான்.

ஒருவன், இன்பம் பயக்கும் வினைகளைச் செய்வதற்கு, அதாவது நன்மைகள் செய்வதற்கு அன்பு, அருள், ஈவு, இரக்கம், பரிவு .முதலிய பண்புகள் காரணமாக அமைகின்றன. அவனே துன்பம் பயக்கும் வினைகளைச் செய்வதற்கு அதாவது குற்றங்கள் செய்வதற்கு அன்பு வழி அமையாக் காமம், தானே வெகுண்டெழும் சினம், தன்னிலை மறந்த மயக்கம், நன்மையோடு அமையாத மானம், அளவுக்கு மீறிய மகிழ்ச்சி, கடுமையான வெறியுள்ளம் முதலிய பண்புகள் காரணங்களாய் அமைகின்றன.

ஒவ்வொருவரும் குற்றம் ஏற்படுவதற்குக் காரணமாக விளங்கும் தீய பண்புகளைக் குறைக்க வும், அறவே நீக்கவும் முயலவேண்டும் என்றும், இல்லையாயின் குற்றங்கள் பல ஏற்பட்டு, அக்குற்றங் களே அவரவருடைய வாழ்வை அழிக்கும் இறுதிப் பகையாக அமைந்துவிடும் என்றும் ஆன்றோர்கள் கூறி வைத்தனர்.

குற்றம் ஏற்பட இருக்கிறது, அப்படிக் குற்றம் ஏற்படக் காரணமாக இருக்கும் நிலை தவிர்க்கப் பட்டால்லன்றிக் குற்றம் ஏற்பட்டே தீரும், குற்றம் ஏற்பட்டால் கேடு வந்தே தீரும் என்பதை உணர்ந்து, ஒருவன், குற்றம் ஏற்படுவதற்குக் காரணமான நிலையை நீக்கித் தன்னைக் காத்துக்கொள்வதற்கான வழியைத் தேடத் தவறினால், சிறிய அளவில் வரும் கேடு பெரிய அளவில் வளர்ந்து, அவனை மீள முடியாதவனாக ஆக்கி, அவனுக்குப் பேரிழப்பைத் தரும்.

வரக்கூடிய கேட்டைத் தடுத்து நிறுத்தித் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளும் வகை

தெரியாத ஒருவனுடைய வாழ்க்கை, எப்படிக் கெட்டொழியும் என்பதை வள்ளுவப்பெருந்தகையார், அழகான உவமை ஒன்றன்மூலம் விளக்கிக் காட்டுகிறார். சிறிய நெருப்புப்பொறி படும் வைக்கோற்போர் எப்படி விரைவில் வெந்து சாம்பலாகி அழியுமோ, அப்படியே சிறிய கேடு ஒன்று நுழையும் ஒருவனது வாழ்க்கையும் விரைவில் கெட்டு அழியும் என்று குறிப்பிடுகிறார்.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். (குறள் – 435)

கேடு வருவதற்கு முன்னரே அக்கேட்டினின்றும் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளாதவனின் வாழ்க்கை, தீயின் முன்னர் வைக்கப்பட்ட வைக்கோல் போல அழியும்.

(வைத்தூறு – வைக்கோல்)

பற்ற வரும் தீயினைப் பற்ற வரும் கேட்டிற்கும், வைக்கோற்போரினை வாழ்க்கைக்கும் உவமைகளாக வள்ளுவர் குறிப்பிடுகிறார். வாழ்க்கையைக் காப்பவனுக்கு வைக்கோற்போரினைக் காப்பவனை உவமையாகப் பெற வைக்கிறார்.

தீ சிறு பொறியாகத்தான் இருக்கும்; அது போலக் கேடு சிறிய அளவுடையதாகக்கூட இருக்கும். சிறு தீ என்றாலும், அது பெரிய வைக்கோற்போரை விரைவில் அழிக்கும்; அதுபோல, சிறு கேடு என்றாலும், அது நீண்ட வாழ்க்கையை அழித் தொழிக்கும். வைக்கோல்கள் திரள் திரளாக ஒன்று சேர்ந்து பெரும் போராகிறது; அதுபோலச் சிறுகச் சிறுகக் கட்டிக் காத்து அமைக்கப்பெறுவது நீண்ட வாழ்க்கையாகிறது. வைக்கோற்போரில் தன்னாலும் தீ வைக்கப்படலாம்; பிறராலும் வைக்கப்படலாம்; அதுபோல வாழ்க்கைக்குக் கேடு தன்னாலும் வந்து சேரலாம், பிறராலும் வந்து சேரலாம். தீ பிறரால்

வைக்கப்படாமல் தடுத்தும், தன்னால் வைக்கப் படாமல் தன்னைத்தானே காத்தும் தீரவேண்டும்; அதுபோலக் கேடு பிறரால் இழைக்கப்படாமல் தடுத்தும், தன்னால் இழைக்கப்படாமல் தன்னைத் தானே காத்தும் தீரவேண்டும். வைக்கோற்போரில் தீ பற்றிவிட்டால், அது எவ்வளவு விரைவாகப் பரவுகிறது என்பது மேற்போக்காகப் பார்க்கும்போது தெரியாது, அதுபோல வாழ்க்கையில் கேடு ஏற்பட்டு விட்டால் அது எவ்வளவு விரைவாகச் சூழ்கிறது என்பது மேற்போக்காகப் பார்க்கும்போது தெரியாது. தீ வைக்கோலில் பற்றிவிட்டால் அதனை அணைப்பது அவ்வளவு எளிதன்று; அதுபோலக் கேடு வாழ்க்கை யில் ஏற்பட்டுவிட்டால் அதனைத் தடுப்பது அவ்வளவு எளிதன்று. தீ வைக்கோற்போரின் உரு வத்தையே மாற்றிச் சாம்பலாக்கிவிடும்; அதுபோலக் கேடு வாழ்க்கையின் அமைப்பையே மாற்றி ஒன்று மில்லாமல் ஆக்கிவிடும். வைக்கோற்போரில் தீயைப் பற்ற விட்டுவிட்டு வாளா இருப்பவன் ஏமாந்தவன் ஆவான்; அதுபோல, வாழ்க்கையில் கேட்டைடப் .புக விட்டுவிட்டு வாளா இருப்பவன் ஏமாந்தவன் ஆவான். தீ வைக்கோற்போரில் படாமல் பாதுகாக்க வேண்டியது எப்படி ஒருவனது இன்றியமையாத பணி ஆகிறதோ, அப்படியே வாழ்க்கையில் கேடு வந்து சூழாமல் பாதுகாக்க வேண்டியது இன்றியமையாத பணி ஆகிறது.

சிறு தீப்பொறி வைக்கோற்போரை எவ்வளவு எளிதாக - விரைவாக - உறுதியாக - நிலையாக அழித்தொழித்துவிடுமோ, அதுபோலச் சிறிய கேடு என்றாலும் அது வாழ்க்கையை மிக ள்ளிதாக - விரைவாக - உறுதியாக - நிலையாக அழித்தொழித்து விடும் என்பதையும், தீப்பொறி வைக்கோற் போரிடத்து நெருங்காமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது எவ்வளவு இன்றியமையாததோ,

அவ்வளவு இன்றியமையாதது வாழ்க்கையில் கேடு சூழாதபடி பாதுகாத்துக்கொள்ள வேண்டியதும் ஆகும் என்பதையும் வள்ளுவப்பெருந்தகையார் உணர்த்தும் மாட்சி வியந்து போற்றுவதற்குரியதாகும்.

'வெள்ளம் வருமுன்னே அணை போட வேண்டும்', 'பருத்திப் பொதிக்கு ஒரு நெருப்புப் பொறி', 'கடுகத்தனை நெருப்பும் போரைக் கொளுத்தி விடும்', 'ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி பிரை' என்பன போன்ற பழமொழிகள் வள்ளுவரின் கருத்தினை நன்கு வலியுறுத்துவனவாகும்.

கொடுங்கையும் ஆன்றோர் துணையும்

'தவறு செய்வது மனித இயற்கை' என்பது ஆங்கில நாட்டுப் பழமொழி. 'யானைக்கும் அடி சறுக்கும்' என்பது தமிழகத்துப் பழமொழி. ஒருவர் எவ்வளவுதான் அறிவையும் ஆற்றலையும் தகுதியையும் திறமையையும் உடையவராக இருந்த போதிலும், சிறிதளவுள்ள அறிவுக்குறைவு, ஆற்றல் குறைவு, தகுதிக் குறைவு, திறமைக் குறைவு ஆகியவற்றின் காரணமாகத் தவறுதல்கள் ஏற்பட்டே தீரும் என்பது உலக இயற்கையாக இருந்து வருவதைப் பார்க்கிறோம். எனவேதான், தம்மைக் காட்டிலும் அறிவிலும் ஆற்றலிலும் தகுதியிலும் திறமையிலும் மிக்க சீரியவர்களை, ஒவ்வொருவரும், குறைகள் ஏற்படும்போது நாடி, அந்தச் சீரியவர் களின் அறவுரைகளையும் உதவிகளையும் பெற்றுத் தவறுதல்கள் ஏற்படாதவாறு தவிர்க்க வேண்டியது இன்றியமையாக் கடமையாகும் என்று ஆன்றோர்கள் கூறுகிறார்கள்.

சிறந்த அறிவுடைய பெரியோர்களின் துணை, அவ்வப்போது கிடைக்கப்பெறாவிட்டால், அறிவுக் குறையுடைய மக்களிடத்தில் குறைகள் காணப் படுவதும், பிறகு தவறுதல்கள் ஏற்படுவதும், அவற்றின் காரணமாகத் துன்பங்கள் நிகழுவதும் இயற்கையாகி விடுகின்றன. வந்த துன்பங்களை நீக்கவும், வரக்கூடிய துன்பங்களை வராமல் முன்னறிந்து காக்கவும் வல்லமைபடைத்த பெரியோர்களின் துணை கிடைக்கப்பெறுமேயானால், மேற்குறிப்பிட்டவாறு,

துன்பங்கள் நிகழ வழி ஏற்படாது. இது காரணம் பற்றித்தான் சான்றோரின் துணை ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத ஒன்று என்று ஆன்றோரால் வலியுறுத்திக் கூறப்படுகிறது.

ஆன்றோரின் துணை எப்படி இன்றியமையாது தேவைப்படுகிற ஒன்று என்பதை, வள்ளுவப் பெருந்தகையார் இரண்டு உவமைகள்மூலம் விளக்கிக் காட்டுகிறார். அந்த இரண்டு உவமைகளையும் ஒரே குறளில் வைத்து விளக்கிக் காட்டும் திறன்தான் மிகவும் போற்றுவதற்குரியதாக அமைந்திருக்கிறது.

முதலிலார்க் கூதிய மில்லை மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை. (குறள் – 449)

(முதல் இல்லாத வணிகருக்கு மிச்சமில்லை; கட்டடத்தைத் தாங்கும் கொடுங்கையைப் போல், துன்பங்களைத் தாங்கும் துணைவரில்லாதவர்க்குச் சலிக்காது நிற்கும் நிலை இல்லை. மதலை – கொடுங்கை.)

முதலோடு கூடிய வணிகரையும், கொடுங்கை யோடு கூடிய கட்டடத்தையும் பெரியோர்களின் துணையைப் பெற்று நிற்கும் ஒருவருக்கு உவமை களாகக் கூறுகிறார், குறள் பேராசிரியர்.

முதல் இல்லாமல் வணிகருக்கு மிச்சமில்லை. கொடுங்கை இல்லாமல் கட்டடம் நிலைத்ததில்லை; அவை போலப் பெரியோரின் துணையில்லாமல் ஒருவர் வாழ்ந்ததில்லை.

வணிகருக்கு முதல் எவ்வளவு முக்கியமோ, கட்டடத்துக்குக் கொடுங்கை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமான ஒன்று வாழ்பவருக்குப் பெரியோரின் துணையுமாகும்.

முதலை நம்பித்தான் வாணிகம் நடைபெறும், கொடுங்கையை நம்பித்தான் கட்டடம் மேலெழும்பும்; அவைபோல ஆன்றோர்களின் துணையை நம்பித்தான் ஒருவர் வாழ முடியும்.

முதல் குறைந்து போனாலும், அற்றுப் போனாலும் வாணிகம் வீழும்; கொடுங்கை சரிந்தாலும் நீங்கினாலும் கட்டடம் வீழும்; அவை போலப் பெரியோர்களின் துணை குறைந்தாலும் அகன்றாலும் ஒருவரின் வாழ்வு வீழும்!

முதல், வணிகருக்கு மேன்மேலும் பெருகக் கூடிய ஒன்று, அதுபோலப் பெரியோர்களின் துணை யும் வளரக்கூடிய ஒன்று. முதல் போடப்பட்டுச் சீராகச் செய்யப்படும் வாணிகம், மிச்சத்தைத் தரும்; அதுபோலச் சீராகப் பெறப்படும் ஆன்றோரின் அறிவுரைகளால் வளர்க்கப்படும் வாழ்வு, பலனைத் தரும்.

கொடுங்கை கட்டடத்தைத் தாங்கும்; அதுபோல ஆன்றோரின் அறிவுரைகள் ஒருவரின் வாழ்வைத் தாங்கும்.

பெரியோர்களின் அறிவுரைகள் இரண்டு பணிகளைச் செய்கின்றன. ஒரு பணி வாழ்வைக் காப்பாற்றுவதாகும்; மற்றொரு பணி வாழ்வை வளர்ப்பதாகும். வாழ்வைக் காப்பாற்றுதலாகிய பணிக்குக் கொடுங்கையையும், வாழ்வை வளர்ப்ப தாகிய பணிக்கு முதலையும் உவமைகளாக்கிக் கூறுகிறார், வள்ளுவர்.

கொடுங்கையானது கட்டடத்திற்கு எப்படி இன்றியமையாததாய், உறுதி பயப்பதாய் அதனை நிலை நிறுத்துவதாய்த், தாங்கிக்கொள்வதாய் அமைந்திருக்கிறதோ, அப்படியே ஆன்றோரின் அறிவுரை இன்றியமையாததாய், உறுதி பயப்பதாய், நிலை நிறுத்துவதாய், தாங்கிக்கொள்வதாய் ஒருவரின் வாழ்வுக்கு அமைந்திருக்கிறது என்னும் கருத்துத் தோன்ற திருவள்ளுவப் பெருந்தகையார் கூறியிருக்கும் பாங்கு நினைந்து நினைந்து மகிழ்வதற்குரியதாகும்.

11

நீரின் தன்மையும் மனித அறிவும்

மனிதன், 'உள்ளது சிறத்தல்' (Evolution) என்னும் முறைக்கேற்ப, மனித இனத்திற்கே உரிய அறிவையும் - பண்பையும் - பழக்கத்தையும் இயற்கை யாகக் கொண்டிருக்கிறான் என்றாலும், சூழ்நிலையும், அச்சூழ்நிலையிலே உள்ளவர்களின் தொடர்பும் அவனது அறிவையும் - பண்பையும் - பழக்கத்தையும் பெருமளவுக்குத் தம் போக்கில் உருவாக்குகின்றன என்பதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

மனிதன் வாழும் நிலத்தின் தன்மை, அந்நிலத்திலுள்ள தட்பவெப்பநிலை, அந்நிலத்தில் ஏற்படும் பருவகாலம் ஆகியவற்றைப் பொறுத்து, மனிதனின் அறிவு, பண்பு, பழக்கம் ஆகியவற்றில் இடத்திற்கு இடம் வேறுபாடுகள் தென்படுவதைப் பார்க்கிறோம். அறிவைப் பொறுத்து அவ்வளவு மிகவான வேறுபாடு தோன்றாது என்று வைத்துக் கொண்டாலும், பண்பு - பழக்கங்களைப் பொறுத்து மிகவான வேறுபாடுகள் காணப்படவே செய்கின்றன.

ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஒரு குறிப்பிட்ட தட்பவெப்ப நிலையில், ஒரு குறிப்பிட்ட பருவ காலத்தில் வாழும் மனிதனை எடுத்துக் கொண்டாலும், அவன் நல்லவனாக அல்லது தீயவனாக வாழ வழி ஏற்பட்டு விடுகிறது. காரணம் அவனது அறிவையும் - பண்பையும் - பழக்கத்தையும் மாற்றி அமைக்கக்கூடிய இரு வேறு இனத்தார் அவனைச் சூழ வாழ்கிறார்கள். நல்லறிவும்,

நற்பண்பும், நற்பழக்கமும் கொண்ட சான்றோரினமும், தீய அறிவும், தீய பண்பும், தீய பழக்கமும் கொண்ட சிற்றினமும் அவனைச் சுற்றியிருக்கின்றன. அவன் சான்றோரினத்தோடு தொடர்புகொள்வானேயானால், அச்சான்றோரது அறிவும், பண்பும், பழக்கமும் அவனிடம் படிந்து, அவன் நல்லவனாகக் காட்சியளிக்கிறான்; அவன் சிற்றினத்தோடு தொடர்புகொள்வானேயானால், அச்சிற்றினத்தாரின் தீய அறிவும், தீய பண்பும், தீய பழக்கமும் அவனிடம் படிந்து அவன் தீயவனாகக் காட்சியளிக்கிறான்.

அறநெறிகளை அறிந்து, நல்லறிவாலும், தூய பண்பாலும் சிறந்த சான்றோர், வந்த துன்பத்தைப் போக்கிக்கொள்ளவும், மேலும் துன்பம் வராத வண்ணம் தம்மைக் காத்துக்கொள்ளவும் திறன் பெற்றுச் செந்நெறி வாழ்க்கை அமைத்துக்கொள்கின்றனர். அத்தகையவர்களோடு ஒருவன் தொடர்பு கொள்வானேயானாலும் அல்லது அத்தகையவர்களைச் சூழ்நிலையில் பெற்றிருப்பானேயானாலும் அவர்களது அறிவும், பண்பும் அவனுக்கு ஏற்பட்டு, அவன் நல்லவனாகத் திகழ வழி ஏற்படும். அறநெறிகளைப் புறக்கணித்துத் தீய அறிவையும், தீய பண்பையும்கொண்ட சிற்றினத்தார், வந்த துன்பத்தைப் போக்கிக்கொள்ளவும் தெரியாது, மேலும் துன்பம் வராதவண்ணம் தம்மைக் காத்துக் கொள்ளவும் தெரியாது இடர்ப்பட்டுக் கொடுநெறி வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றனர். அத்தகையவர்களோடு ஒருவன் தொடர்புகொள்வானேயானாலும் அல்லது அத்தகையவர்களைச் சூழ்நிலையில் பெற்றிருப்பானேயானாலும், அவர்களது தீய அறிவும், தீய பண்பும் அவனுக்கு ஏற்பட்டு, அவன் தீயவனாகத் திகழ வழி ஏற்படும்.

ஒருவன் நல்லவர்களோடு சேர்ந்தால் நல்லவனாகிறான்; அவனே தீயவர்களோடு சேர்ந்தால் தீயவனாகிறான். இந்தக் கருத்தை ஓர் உவமையின் மூலம் விளக்கிக்காட்ட வரும் வள்ளுவப் பெருந்

தகையார், நீரையும் அது சேரக்கூடிய நிலத்தையும் நம்முன் எடுத்துக்காட்டுகிறார்.

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு. (குறள் – 452)

(நீரானது தான் சேர்ந்த நிலத்தினது இயல்பாலே, தன் தன்மை திரிந்து அந்நிலத்தினது தன்மையதாக ஆகும். அதுபோல, மாந்தர்க்கு, அவர்தம் அறிவும், அவர் தாம் சேர்ந்த இனத்தினது இயல்பாலே, தம் தன்மை திரிந்து அவ்வினத்தினது தன்மையதாக ஆகும்.)

நீரை மாந்தர்க்கும், நீரின் தன்மையை மாந்தரின் அறிவுக்கும், நிலத்தின் இயல்பை இனத்தின் இயல்புக்கும் உவமைகளாக்கிக் காட்டுகிறார் வள்ளுவப் பேராசிரியர்.

நீருக்குள்ள இயல்பான தன்மையோடு நீர் வானின்றும் இறங்கி வந்தாலும், எந்த வகையான நிலத்தில் சேருகிறதோ, அந்த வகையான நிலத்தின் தன்மையை அது அடைகிறது; அதுபோல மனிதன், மனிதனுக்குரிய இயல்பான தன்மையோடு இவ்வுலகில் வந்து பிறந்தாலும், எந்த வகையான இனத்தோடு சேருகிறானோ அந்த வகையான இனத்தின் தன்மையை அவன் அடைகிறான்.

நீரானது உவர் மண்ணோடு சேர்ந்தால் உப்புக் கரிக்கிறது; சுவை மண்ணோடு சேர்ந்தால் இனிக்கிறது. அதுபோல, மனிதன் தீயினத்தோடு சேர்ந்தால் தீயவனாக ஆகிறான்; நல்லினத்தோடு சேர்ந்தால், நல்லவனாக ஆகிறான்.

நீரானது செந்நிலத்தில் பாய்ந்தால், செம்மை நிறத்தைப் பெறுகிறது; கரிய நிலத்தில் பாய்ந்தால் கருமை நிறத்தைப் பெறுகிறது. அதுபோல மனிதன் நல்லவர்களோடு தொடர்புகொண்டால் நற் பழக்கத்தைப் பெறுகிறான்; தீயவர்களோடு தொடர்பு கொண்டால் தீய பழக்கத்தைக் கொள்கிறான்.

நிலத்தின் இயற்கையால் நீரின் சுவையும் நிறமும் மாறும்; அதுபோல இனத்தின் இயல்பால் மனிதனின் அறிவும் பழக்கமும் மாறும்.

உடலுக்கு ஆக்கந்தரும் கனிப்பொருள்களும், சுவையும் கலந்த நீர் மனித சமூகத்திற்கு நன்மையும், இன்பமும் பயக்கும். அதுபோல சமூகத்திற்கு ஆக்கந் தரும் நல்லறிவும், நற்பழக்கமும்கொண்ட மனிதன், மனித சமூகத்திற்கு நன்மையும், இன்பமும் பயப்பான். தீய கிருமிகள் கலந்த நீர் மனித சமூகத்திற்குக் கேட்டையும், துன்பத்தையும் தரும். அதுபோல தீய அறிவும், தீய பழக்கமும்கொண்ட மனிதன், மனித சமூகத்திற்குத் தொல்லையையும், துன்பத்தையும் தருவான்.

''பன்றியொடு கூடினால், கன்றும் மலம் தின்னும்'' என்னும் பழமொழி மேற்சொல்லப்பட்ட கருத்தினைத் தெளிவுபடுத்திக் காட்டுவதாகும்.

நிலத்தின் இயல்பால் எப்படி நீரின் தன்மை வேறுபட்டுக் காணப்படுகிறதோ, அப்படியே இனத்தின் இயல்பால் மனிதனின் அறிவும் வேறுபட்டுக் காணப்படும் என்று வள்ளுவப் பெருந் தகையார் கூறுவது எண்ணி எண்ணி மகிழ்வதற்குரிய தாகும்.

12

மயிற்பீலியும் மனிதச் செயலும்

எந்த ஒரு செயல் நிகழ்வதாக இருந்தாலும், அதற்கு ஒரு அளவு தேவைப்படுகிறது. நிகழும் நிகழ்ச்சி எண்ணப்படும் எண்ணமாக இருந்தாலும் சரி, அது மொழியப்படும் சொல்லாக இருந்தாலும் சரி, அது செய்யப்படும் செயலாக இருந்தாலும் சரி, அந்த நிகழ்ச்சி அழகானதாகவும், அருமையான தாகவும், இன்பம் பயப்பதாகவும், ஏற்றம் மிக்கதாக வும், நன்மை தருவதாகவும், வெற்றி கொடுப்ப தாகவும் இருக்க வேண்டுமென்றால், அதற்கு ஓர் அளவு இருக்கிறது.

மனத்தில் எழும் விருப்பத்தை, எதைப் பொறுத்தும், அதனதற்கு ஏற்றவாறு, ஓர் அளவோடு நிறுத்த வேண்டியிருக்கிறது; அப்படிக்கில்லாமல் எதைப் பொறுத்தும் அளவுக்கு மீறிய வகையில் விருப்பங்கொள்ளத் தலைப்பட்டால், அந்த விருப்பம் நிறைவேற முடியாம்ல் ஆகி, அதுவே ஒருவருக்கு வருத்தமும், வாட்டமும், வேதனையும், வெறுப்பும், தொல்லையும், துயரமும் தரத்தக்க ஒன்றாக அமைந்து விடும்.

ஏதேனும் மொழிவதாக வைத்துக்கொண்டாலும், ஆளைப்பொறுத்து - இடத்தைப் பொறுத்து - காலத்தைப் பொறுத்து - சூழ்நிலையைப் பொறுத்து ஓர் அளவோடு சொற்களைச் சொல்ல வேண்டி யிருக்கிறது. ஓர் அளவோடு நிறுத்தாமல், அளவுக்கு மீறிய முறையில், சொற்களை மடமடவென்று,

வாயில் வந்தபடி கொட்டினால், அதனால் எதிர்தரப்பிலுள்ளவர்களிடமிருந்து வெறுப்பும், பகையும், தொல்லையும், துயரமும், இன்னலும், இழப்பும், இன்ன பிறவெல்லாம் ஏற்படக்கூடும்.

எந்த ஒரு செயலைச் செய்வதாக வைத்துக் கொண்டாலும், அதனை ஓர் அளவோடு செய்து முடிக்க வேண்டியிருக்கிறது, அளவோடு செய்யாமல் அளவுக்கு மீறிய முறையில் செய்தால், அதனால் ஏற்படும் இடுக்கண்களும், இடையூறுகளும், தொல்லைகளும், துயரங்களும், இன்னல்களும், இழப்புகளும் பலப்பலவாகும். உணவுப்பண்டங்களில் உப்போ - உறைப்போ - புளிப்போ - துவர்ப்போ - கார்ப்போ - கைப்போ அளவுக்குமீறி சேர்க்கப்பட்டு விட்டால், பிறகு அப்பண்டங்களை வாயில் வைக்க வழியேற்படாது; அளவுக்கு மீறிய வகையில் அறுசுவைகளும் சேர்க்கப்பட்ட அப்பண்டங்கள் சுவையும் தரா; இனிமையும் பயக்கா; இன்பமும் சேர்க்கா; பயனும் கொடுக்கா. அளவோடு கூடிய சுவையான உணவாக இருந்தபோதிலும், அதனையும் ஓர் அளவோடுதான் உட்கொள்ள வேண்டியிருக்கிறது; அளவுக்கு மீறினால் அது தெவிட்டல் தருகிறது; அசீரணம் உண்டாக்குகிறது. அளவோடு விழித்திருந்து, அளவோடு தூங்க வேண்டியிருக்கிறது. அளவுக்குமீறி விழித்திருந்தால், அதனால் பிணி ஏற்படுகிறது; அளவுக்குமீறித் தூங்கிக்கொண்டிருந்தால், அதனால் சோம்பல் தன்மையும், செயலற்ற தன்மையும் ஏற்படுகின்றன. அளவோடு பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது; அளவுக்கு மீறினால் கடன்பட்டுத் தொல்லைகள் பலவற்றிற்கு ஆளாக வேண்டியிருக் கிறது.

இப்படியாக எந்த ஒரு செயலை எடுத்துக் கொண்டாலும், ஒவ்வொரு செயலுக்கும், ஒவ்வொரு அளவு இருக்கிறது. அந்த அளவு அறிந்து அதன்படி நடப்பதுதான் முறையாகிறது. அப்படிக்கில்லாமல் அளவுக்கு மீறிய முறையில் நடந்துகொண்டால் ஏற்படும் இடுக்கண்கள் ஏராளம் ஆகின்றன.

எந்த ஒரு செயலையும் அளவு அறிந்து செய்ய வேண்டும்; அளவு அறியாமல் அளவுக்கு மீறிய முறையில் செய்தால், அதனால் கேடு சூழும் என்பதை வள்ளுவப் பெருந்தகையார் ஓர் அழகான உவமையின்மூலம் விளக்கிக்காட்டுகிறார். அவர் ஒரு சரக்கு ஏற்றும் வண்டியையும், அதில் சரக்காக ஏற்றப்படும் மயிற்பீலியையும் உவமைப் பொருள் களாகக்கொண்டு, விளக்க நினைக்கும் கருத்தைத் தெளிவாக்கிக் காட்டுகிறார்.

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் (குறள் – 475)

(மயிற்பீலி ஏற்றப்பட்ட வண்டியும் அச்சுமுறிந்து கெடும், அந்த மயிற்பீலியை அவ்வண்டி பொறுக்கும் அளவில்லாமல் மிகுதியாக ஏற்றினால். பீலி-மயிலின் இறகு; சாகாடு – வண்டி; இறும் – அற்றுப்போகும்; சால – மிகுதியாக; பெயின் – பெய்தால், ஏற்றினால்)

உலகத்தில் மிக நொய்யவாகக் காணப்படுகின்ற பொருள்களில் ஒன்றாகிய மயிற்பீலியைக் கட்டுக் கட்டாக ஒரு வண்டியில் ஏற்ற முனைந்து, அப்படி ஏற்றப்படும் கட்டுகள் ஓர் அளவோடு அமையாமல், அளவுக்கு மீறிய வகையில் மிகவாக ஏற்றப்படுமே யானால், அவற்றை ஏற்றிச் செல்லுகின்ற வண்டி, அவற்றின் பளு தாங்கமுடியாமல், அச்சு முறிந்து கெட்டு விழுவே செய்யும் என்று வள்ளுவப் பேராசிரியர் உணர்த்துகிறார்.

இந்தக் குறளில் சிறப்புக்குரிய செய்தி ஒன்று என்னவென்றால், திருவள்ளுவர் உவமானத்தைக் கூறி, உவமேயத்தைக் கூறாமல் படிப்போர் தாமே சிந்தித்துப் பெற்றுக்கொள்ளுமாறு, அதனை விட்டு விடுகிறார். உவமானம் காட்டப்பெறுகின்ற ஒன்றாகவும், உவமேயம் பெறப்படுகின்ற ஒன்றாகவும் அமைந்து கிடக்கின்றன. இப்படி உவமானத்தை உணர்த்தி உவமேயத்தைப் பெறும்படி செய்கின்ற சிறப்பைத்தான் 'பிறிது மொழிதல்' என்னும் அழகு

என்பார்கள்; இதனையே 'நுவலாநுவற்சி' என்றும், 'ஒட்டு' என்றும்கூடக் கூறுவர்.

அளவுக்கு மீறிய மயிற்பீலி ஏற்றப்பட்டால், எப்படி வண்டி அதனைத் தாங்கமாட்டாமல் அச்சு முறிந்து கெட்டு வீழுமோ, அதுபோல, எந்த ஒரு செயலும், இடம், பொருள், ஏவல் முதலியவற்றை அறியாமல், அளவுக்கு மீறிய வகையில் செய்யப் படுமேயானாலும், அதனால், அச்செயலின் நோக்கம் நிறைவேறாமல் இடையிலேயே கெட்டொழியும் என்பது பெறப்படும்.

மிக நொய்யவாகிய பொருள்களிலே ஒன்றாகிய மயிற்பீலியை, மயிற்பீலிதானே என்று கருதிக் கொண்டு, அதனை மேலும் மேலும் வண்டியில் அடுக்கிக்கொண்டே போனால், அது ஓர் அளவில் பெருஞ்சுமையாக ஆகி, அந்த அளவையும் தாண்டி அந்த மயிற்பீலி மேலும் மேலும் ஏற்றப்படுமே யானால், வண்டி மிக அழுத்தமானதாக இருந்த போதிலும், வண்டியானது அந்த அளவுக்குமீறிய சுமையைத் தாங்கமுடியாததாக ஆகி, அந்த வண்டி அந்த நொடியிலே முறிந்து விழவும் கூடும். 'பீலிபெய் சாகாடும்' என்ற சொற்றொடரில் 'சாகாடும்' என்ற சொல்லில் 'உம்'மையைச் சேர்த்து வள்ளுவர் கூறியிருப்பதற்குக் காரணம் வண்டியின் வலிமையை யும், பீலியின் நொய்மையையும் புலப்படுத்துவ தற்காகும்.

வண்டியின் அச்சு எவ்வளவு பளுவைத் தாங்கும் என்பதை அறிந்துகொள்ளாமல், அளவுக்கு மீறிய வகையில் மயிற்பீலியைக் கண்ணை மூடிக்கொண்டு ஏற்றினால், அதனால் வண்டியின் அச்சு எப்படி முறிந்து வீழுமோ, அப்படியே பகைவரின் எதிர்ப்பை எந்த அளவுக்கு நாம் தாங்குவோம் என்பதை அறியாமல், மேலும் மேலும் பகையை வளர்த்துக் கொண்டே போனால், அளவுக்குமீறிப் பெருகிடும் பகை நம்மை அழித்தே திரும் என்பது பெறப்படுவ தாகும். வண்டியின் அச்சினை ஆளுக்கும்,

மயிற்பீலியை அந்த ஆளுக்கு எதிராக மூண்டெழும் பகைக்கும், மயிற்பீலியின் மிகுதியின் காரணமாக அச்சு முறிவதைப் பகை மிகுதியின் காரணமாக ஆள் அழிந்துபடுவதற்கும் உவமைகளாக வள்ளுவப் பெருந்தகையார் கூறினார் என்றும் கொள்ளலாம்.

எந்தச் செயலும் அளவோடு இடம் - பொருள்-ஏவல் - காலம் அறிந்து செய்யப்பட வேண்டும் என்பதும், அளவுக்கு மீறிய வகையில் செய்யப்படும் செயல் கெடும் என்பதும் இக்குறளால் வலியுறுத்தப் படுகிற கருத்தாகும். "அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சாகும்" என்னும் பழமொழி ஈண்டு நினைவுகூரத் தக்கதாகும்.

பண்டைத் தமிழகத்தில் மயிற்பீலிகள் வெளி நாடுகளுக்குக் காவிரிப்பூம்பட்டினம் போன்ற துறைமுகப்பட்டினங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப் பட்டதால், வண்டிகள் மயிற்பீலிகளை ஏற்றிக்கொண்டு துறைமுகப்பட்டினம் நோக்கிச் சென்றிருக்கக் கூடும். அப்படி வண்டியில் மயிற்பீலிகள் ஏற்றிச் செல்லப் படும் காட்சியைத் திருவள்ளுவர் கண்ணாரக் காண வாய்ப்புகள் இருந்திருக்கும். அதனால்தான் அந்த உவமையை உரிய இடத்தில் அவர் எடுத்துக் கையாண்டிருக்கிறார் என்று எண்ணவும் இடமிருக்கிறது.

இந்தக் காலத்தில் வைக்கோலை ஏற்றிச் செல்லும் வண்டிகள், பளு தாங்கமாட்டாமல் சில வேளைகளில் அச்சு முறிந்து விழும் காட்சியைச் சாலைகளிலே ஆங்காங்குப் பார்க்கிறோம். அப்படிப் பட்ட காட்சியைப் பார்த்திருக்கிற நமக்கு, வள்ளுவர் உணர்த்தும் உவமை, படிக்கப் படிக்க இன்பம் ஊட்டுகின்ற ஒன்றாக இருக்கிறது என்றால், அது மிகையாகாது.

நுனிக் கொம்பும் அளவின் எல்லையும்

பொதுவாக எந்தச் செயலைச் செய்வதாக இருந்தாலும், நான்கு நிலைகள் பெரும் போக்காகத் தென்படும். (1) செயலை அளவோடு செய்துமுடித்தல். (2) செய்யவேண்டிய செயலை அளவோடு செய்யாமல் அரைகுறையாகச் செய்து விடுதல். (3) செய்யவேண்டிய செயலை அளவுக்கு மீறிய வகையில் செய்தல். (4) செய்யவேண்டிய செயலை அளவை மீறமுடியாத நிலையிலும் செய்ய முயலுதல்.

அளவோடு செயலைச் செய்து முடிக்கிற முதல் நிலையில் ஒருவருக்குக் கோரிய பலன் கிட்டுவதைக் காண்கிறோம். செயலை அரைகுறையாகச் செய்து இடையிலே விட்டுவிடுகிற இரண்டாவது நிலையில், கோரிய பலன் முழுவதும், கிட்டாமற் போவதோடு, இடையூறுகளும், இழப்புகளும் ஏற்பட்டு விடுகின்றன. செயலை அளவுக்கு மீறிய வகையில் செய்யும் மூன்றாவது நிலையில், செயலின் நோக்கம் கெட்டழிந்து விடுகிறது. அளவுக்கு அப்பால் ஏதொன்றும் செய்ய முடியாத நான்காவது நிலையில் ஏதேனும் செய்ய முற்படும்போது செய்பவரது நேரம், நினைப்பு, உழைப்பு, பொருள் ஆகியவை அனைத்தும் பாழாவதோடு, அவரே அந்த முயற்சியில் அழிந்து போக வேண்டி நேரிட்டாலும் நேரிடுகிறது.

அளவுக்கு மீறிய வகையில் ஒரு செயலைச் செய்யும்போது செயலின் நோக்கம் பாழ்படுகிறது;

ஆனால் அளவுக்குமீறி எதுவும் செய்யமுடியாத நிலையில் ஏதேனும் செய்ய முற்படும்போது, செய்பவரே பாழாக வேண்டி நேரிடுகிறது.

நாம் நடந்துகொண்டே போகிறோம். எதிரில் பெரிய ஆழமான கிணறு ஒன்று தென்படுகிறது. போய்க்கொண்டே இருக்கிறோம். நமக்குக் கிணற்றின் கைப்பிடிச் சுவர் தட்டுப்படுகிறது. அந்த அளவோடு நாம் நின்றுவிட வேண்டும் என்பதை அந்தச் சுவர் உணர்த்துகிறது. அந்த அளவைத்தாண்டி அப்பால் நாம் நடந்து செல்ல முடியாது என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது. அப்படித் தெரிந்திருக்கும் நாம் அந்த அளவோடு நின்றுவிடுவதுதான் அறிவுடைமை. அதை விட்டுவிட்டு மேலும் சிறிது நடந்துதான் பார்ப்போமே என்று காலடியை எடுத்துக் கிணற்றுக்குள் வைத்தால், நாம் நின்ற நிலையில் நிற்கமுடியாமல் தலை குப்புறச் சாய்ந்து, சுழன்று கிணற்றுக்கு அடியில் போய்விடுவோம். பிறகு உயிர்தப்பிப் பிழைப்பது அரிதாகிவிடும். கண்கெட்ட குருடரும், இருட்டில் நடந்து செல்வோரும் அளவுக்கு மீறி அடியெடுத்து வைத்துப் பாழுங்கிணற்றில் அறியாது வீழ்ந்து மடிவதைப் பொதுவாக உலகில் பார்க்கிறோம். அப்படி அளவை மீற வழியில்லாமல், அளவோடு நிறுத்தப்பட வேண்டிய செயல்கள், உலகியல் வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் எண்ணிறந்தன எதிர்ப்படுகின்றன. அளவை மீறினால் அழிவு உறுதியாக ஏற்படும் என்று தெரிந்திருந்தும், அளவை மீறிச் செயலாற்றும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுத் தமக்குத்தாமே அழிவைத் தேடிக்கொள் கின்றனர். அப்படிப்பட்டவர்க்கு அழகான உவமை ஒன்றைக் கண்டறிந்து கூறுகிறார், பொய்யாமொழிப் புலவராகிய வள்ளுவப் பெருந்தகையார். வள்ளுவர் மரம் ஒன்றையும், அதில் ஏறும் ஒருவரையும் உவமைப் பொருள்களாகக் கொள்கிறார்.

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும். (குறள் – 476)

(ஒரு மரக்கோட்டினது நுனிக் கிளையின் கண்ணே ஏறி நிற்கும் ஒருவர், தம் ஊக்கத்தின் மிகுதியால், அவ்வளவினைக் கடந்து மேலும் ஏற முயலுவாராயின், அந்த ஊக்கம் அவரது உயிருக்கு இறுதியாய் முடியும்.

நுனி – முனை; கொம்பர் – கிளை; இறந்து – கடந்து; ஊக்கின் – ஊக்கத்தோடு முயன்றால்)

ஒருவன் ஒரு மரத்தின்மேல் ஏற நினைந்து, அடிக்கிளையிலிருந்து மேல் கிளைக்குத் தாவி, பிறகு மேல் கிளையிலிருந்து நுனிக்கிளைக்குத் தாவி, அதற்கு அப்பால் மேலே தாவமுடியாது என்பது தெரிந்திருந்தும், அதைப்பற்றிக் கவலைப்படாமல், தன்னால் மேற்கொண்டும் தாவமுடியும் என்னும் ஊக்க மிகுதியால் தாவிப்பார்க்க முயலுவானே யானால், அவன் பிடிப்பதற்கும் நிலைத்து நிற்பதற்கும் பற்றுக்கோடு ஏதுமின்றித் தரையில் விழுந்து உயிரை விடுவான்; அவனது அளவுக்கு மீறிய முயற்சி அவனது உயிருக்கு முடிவைக் கொண்டுவந்து சேர்க்கும் என்று திருவள்ளுவப் பேராசிரியர் உவமானம் ஒன்றைச் சொல்லி உவமேயத்தைப் பெற வைக்கிறார். பெறப்படும் உவமேயம் என்ன வென்றால், ஒரு குறிப்பிட்ட செயலை, ஒரு அளவோடுதான் செய்ய வேண்டும், அளவுக்கு மீறினால் அழிவு கட்டாயம் வந்தே தீரும் என்று தெரிந்திருந்தும், அளவுக்குமீறித் தன் ஊக்கத்தின் மிகுதியால், அந்தக் குறிப்பிட்ட செயலைச் செய்ய முயலுவானேயானால், அவனால் அந்தச் செயலையும் செய்ய முடியாமல் போவதோடு, அவனும் அழிந்து போவான் என்பதாகும்.

'பீலிபெய் சாகாடும்' என்ற குறளில் உள்ளதைப் போன்றே இக்குறளின்மூலமும், உவமானத்தைச்

சொல்லி உவமேயத்தைப் பெறவைக்கும் 'பிறிது மொழிதல்' அல்லது 'நுவலா நுவற்சி' அல்லது 'ஏட்டு' என்னும் அழகு முறையைப் பொய்யாமொழியார் கையாளுகிறார்.

மரத்தைச் செய்யப்படுகிற செயலுக்கும், கிளையின் நுனியை செயலின் முடிந்த அளவுக்கும், மரத்தில் ஏறுபவரைச் செயலைச் செய்பவருக்கும், கிளையின் நுனியைக் கடந்து தாவ முயலுதலைச் செயலின் முடிந்த அளவைக் கடந்து, முடியாத நிலையில், மேற்கொண்டும் முயலுதலையும், கீழே விழுந்து உயிர்விடுதலை செயலைச் செய்ய முடியாமல் முயற்சியிலேயே அழிந்துபோதலையும் உவமைகளாக ஆக்கிக் காட்டுகிறார் குறளாசிரியர்.

'பீலிபெய் சாகாடும்' என்னும் குறளில் அளவுக்கு மீறிச் செயல் செய்யக்கூடாது என்றார் வள்ளுவப் பெருந்தகையார். 'நுனிக்கொம்பர் ஏறினார்' என்னும் இந்தக் குறளில் அளவோடு செயலை நிறுத்த வேண்டும் என்கிறார். சில செயல்களை அளவுக்கு மீறிச் செய்யக்கூடாது என்கிறார்; வேறு சில செயல்களை அளவோடு நிறுத்தவேண்டும் என்கிறார். இரண்டுவித செயல்களிலும் 'அளவோடு செய்யப்பட வேண்டும்' என்பதுதான் கருத்து என்றாலும், ஒன்றில் 'அளவு மீறக் கூடாது' என்கிறார், மற்றொன்றில் 'அளவோடு நிறுத்தவேண்டும்' என்கிறார். ஏன் இப்படி இருவகைப்படுத்தி வள்ளுவர் கூறுகிறார் என்றால், அளவுக்குமீறிச் செயலாற்ற வழியுள்ளவற்றில் 'அளவை மீறக்கூடாது' என்கிறார்; அளவை மீற வழியே இல்லாதவற்றில் 'அளவோடு நிற்க வேண்டும்' என்கிறார். மயிற்பீலியை அளவுக்கு மீறியும் வண்டியில் ஏற்ற முடியும்; அப்படி ஏற்றினால் வண்டியின் அச்சு முறிந்து செயல் பாழ்படும். எனவேதான் இத்தகைய செயலைப் பொறுத்து 'அளவுக்கு மீறக்கூடாது' என்று கூறுகிறார். மரத்தின்

உச்சாணிக் கொம்பின் நுனிக்கு அப்பால் ஏற வழியில்லை; அப்படி ஏறினால் ஏறுபவனின் உயிருக்கே இறுதியான முடிவு ஏற்பட்டுவிடும்; எனவேதான் இத்தகைய செயலைப் பொறுத்து 'அளவோடு நிறுத்தப்படவேண்டும்' என்கிறார்.

எதையும் அளவோடு செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்த வந்த வள்ளுவப் பெருந்தகையார், நுனிக்கொம்பு ஏறுவோரை உவமைப் பொருளாகக் கொண்டு விளக்கிக் காட்டுவது, போற்றிப் பாராட்டி மகிழ்வதற்குரியதாகும்.

தலைசிறந்த சொல்லாராய்ச்சியாளர்

சொல்லாராய்ச்சியாளரிடையே ஒரு தலைசிறந்த சொல்லாராய்ச்சியாளர் நாவலர் பெருமான். அவர் ஆக்கிப் படைத்த சொற்கள் பல பழந்தமிழ்ச் சொற்களோடு சொற்களாக நம் கால மறுமலர்ச்சித் தமிழில் வழங்குகின்றன. சிவபெருமானின் உடுக்கையிலிருந்துதான் தமிழ்ச் சொற்கள் தோன்றின என்று கூறுவர் புராணத் தமிழர். வருங்காலத் தமிழர் நம் நாவலர் பெருமானின் நாவினின்றும் பல தமிழ்ச் சொற்கள் புதியதாய்ப் பிறந்தன என்று கட்டாயம் பாராட்ட இயலும். வேட்பாளர், பட்டறிவு முதலிய இத்தகைய பல சொற்களை நம் காலம்வரை தமிழர் நா அறியாது; நாவலர் நாவசைவின் பின்னரே தமிழர் நாவில் அச்சொற்கள் நடமாடிப் புதுத் தமிழ் வளங்கொழிக்கின்றன.

— பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார்

காக்கை வெல்லுதலும் காலமறிதலும்

பகைமை என்பது எல்லாத் துறைகளிலும், எல்லா நிலைகளிலும், எல்லாத் தரத்தினரிடத்தும் பொதுவாகக் காணப்படக்கூடிய ஒரு தீப்பண்பாகும். பகைமை யாரிடத்தில் காணப்பட்டாலும், எந்த இடத்தில் காணப்பட்டாலும், எந்த நிலையில் காணப்பட்டாலும், எந்த நேரத்தில் காணப்பட்டாலும் அது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றேயாகும் என்பது, உலகப் பேரறிவாளர்கள் பலராலும் பொதுவாக வற்புறுத்தப்படுகின்ற ஒன்றாகும்.

அறச்செயலுக்கு மாறான மறச்செயலைப் பொறுத்தும், இன்செயலுக்கு மாறான வன் செயலைப் பொறுத்தும், நன்மைக்கு மாறான தீமையைப் பொறுத்தும், இன்பத்திற்கு எதிரான துன்பத்தைப் பொறுத்தும், நீதிக்கு மாறான அநீதியைப் பொறுத்தும் ஒருவருக்கு ஏற்படும் பகைமை உணர்ச்சியை உலகப் பெரியோர்கள் வெறுப்பதில்லை; மாறாக அத்தகைய பகைமையுணர்ச்சி வெற்றிபெற வேண்டும் என்றே விரும்புவர்.

பொதுவாக மற்றத் துறைகளில் ஏற்படும் பகைமை யுணர்ச்சியைப்பற்றிக் கவலைப்படாமலும், பொருட்படுத்தாமலும் இருந்துவிடலாம்; ஆனால், ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் ஏற்படும் பகைமை யைப்பற்றிக் கவலைப்படாமலோ, பொருட் படுத்தாமலோ யாரும் இருந்துவிட முடியாது. மற்றவரின் பகைமையால் தம் நாடு அழிவையோ –

அடிமை நிலையையோ - இன்னலையோ -இழப்பையோ காணக்கூடாது என்றே எவரும் கருதுவர். தம் நாட்டிற்கு இன்னலையும், இழப்பையும் ஏற்படுத்த விரும்பும் பகை நாட்டின் பகைமை நீக்கப்பட வேண்டும், அல்லது குறைக்கப்படவேண்டும், அல்லது குலைக்கப்படவேண்டும், அல்லது பகை நாடு அடக்கப்பட வேண்டும், அல்லது அது அடிமைப் படுத்தப்பட வேண்டும், அல்லது அது அழிக்கப்பட வேண்டும் என்றே நாட்டுப்பற்றுக் கொண்ட எவரும் எண்ணுவர்.

ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் அரசன் அல்லது தலைவன், பகை நாட்டின் பகைமையைக் குறைக்கவோ - போக்கவோ - அந்த நாட்டினை அடக்கவோ - அடிமையாக்கவோ - அழிக்கவோ முற்படும்போது அப்படிப்பட்ட முயற்சிகள் வெற்றி பெற வேண்டும் என்றே நாட்டினர் அனைவரும் விரும்புவர்.

நியாயமான முறையில் ஏற்படும் பகைமை உணர்ச்சியின் காரணமாக, ஒரு நாட்டின் அரசன் அல்லது தலைவன் பிற பகைநாட்டின்மீது படையெடுக்கும் போது, காலம் - இடம் - பொருள் - ஏவல் ஆகியவற்றைக் கவனிக்க வேண்டியது இன்றியமையாததாக இருக்கிறது. வள்ளுவப் பெருந்தகையார் ஒரு வினையைச் செய்ய முற்படும் அரசன், முதலில் தான் எடுத்துக்கொண்ட வினையின் வலிவையும், தனக்கிருக்கும் வலிவையும், பகைவர்க்கு இருக்கும் வலிவையும், தனக்கும் மாற்றார்க்கும் கிடைக்கக்கூடிய துணைவலிவையும் கணக்கிட்டுக்கொண்டு, மாற்றாரைக் காட்டிலும் மிகவாகத் தனக்குக் கிடைக்கக்கூடிய வலிவைக் கண்டறிந்துகொண்டு பகைவர்மீது படையெடுக்க வேண்டும் என்று கூறுகிறார். அப்படிப் படை யெடுக்கும்போதுகூட போரிடக்கூடிய காலமும், இடமும் தனக்கு உறுதுணையாக நிற்கின்றனவா என்று பார்த்துக்கொண்டு மாற்றாரின்மீது பாய

வேண்டும் என்கிறார். பகைவரின் படையைச் சூழ்ந்து கொள்ளக்கூடிய வசதியும், பகைவரின் படைக்கு நெருக்கடி நிலைமையும் ஏற்படக்கூடிய இடமாகப் பார்த்து, அங்குப் பகைவரின் படையை முறியடிக்க முயலவேண்டும் என்றும் அப்படி முயன்றால் வெற்றி உறுதி என்றும் கூறுகிறார். அது போலவே தனக்கு உறுதுணையும், பகைவர்க்கு நெருக்கடியும் தரக்கூடிய காலம் ஏற்படக்கூடும். அப்படிப்பட்ட காலத்தின் வரவை எதிர்பார்த்திருந்து, அந்தக் காலம் வந்தவுடன் பகைப் படையின்மீது பாய முற்படவேண்டும் என்கிறார். தனக்கு நெருக்கடியும், பகைவர்க்கு உறுதுணையும் புரியக்கூடிய காலத்தில் படை யெடுக்கக் கூடாது என்கிறார்.

ஒரு நாட்டின் அரசன் அல்லது தலைவன் தனக்கு உறுதுணை புரியக்கூடிய காலம் அறிந்து போரிடப் புறப்பட வேண்டும் என்பதை, வள்ளுவப் பெருந்தகையார் காக்கையையும், கூகையையும் உவமைப் பொருள்களாகக்கொண்டு தெளிவாக விளக்கிக் காட்டுகிறார்.

பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. (குறள் – 481)

(தன்னைக்காட்டிலும் வலிவுடையதாகிய கோட்டானைக் காக்கையானது பகற்பொழுதின்கண் வெல்லும்; அதுபோலப் பகைமையை வெல்லக் கருதும் அரசர்க்கு அதற்கு ஏற்றகாலம் இன்றியமை யாததாகும்.

கூகை – கோட்டான்; இகல் – பகைமை)

காக்கையானது பகற்பொழுது வரும் வரையில் காத்திருந்து, பகற்பொழுது வந்தவுடன் கோட்டானை எதிர்த்து அழித்தொழிக்க எப்படி முற்படுகிறதோ, அதுபோலத் தமக்கு வலிவும், பகைவர்க்கு நலிவும் தரக்கூடிய காலம் வரும்வரையில் காத்திருந்து, அந்தக் காலம் வந்தவுடன் பகைவர்மீது பாய்ந்து, அவர்களை அழித்தொழிக்க அரசர்கள் முற்பட வேண்டும் என்று வள்ளுவர் தெளிவுபடக் கூறுகிறார்.

காக்கை பகற்பொழுதில் உலாவிடும் பறவை; கோட்டானோ இரவுப்பொழுதில் உலாவிடும் பறவை. காக்கைக்குப் பகற்பொழுதில் கண் நன்றாகத் தெரியும், இரவுப் பொழுதில் அவ்வளவு நன்றாகத் தெரியாது; கோட்டானுக்கோ இரவுப் பொழுதில் கண் நன்றாகத் தெரியும், பகற்பொழுதில் அவ்வளவு நன்றாகத் தெரியாது. காக்கை பகற்பொழுதில் வலிவோடு திகழும். கோட்டானோ இரவுப் பொழுதில் வலிவோடு திகழும், காக்கை இரவுப் பொழுதில் வலிவுகுன்றிச் சோர்வோடு காணப்படும்; கோட்டானோ பகற்பொழுதில் வலிவுகுன்றிச் சோர்வோடு காணப்படும். காக்கை இரவுப் பொழுதில் அடங்கி ஒடுங்கி உறங்கும் தன்மையது; கோட்டானோ பகற்பொழுதில் அடங்கி ஒடுங்கி உறங்கும் தன்மையது. காக்கைக்கும் கோட்டானுக்கும் பகைமூண்டு விடுமேயானால், காக்கையானது பகற்பொழுதில் கோட்டானை எதிர்த்துப் போரிட்டு வெல்லும், கோட்டானோ இராப் பொழுதில் காக்கையை எதிர்த்துப் போரிட்டு வெல்லும்.

காக்கைக்குப் பகற்பொழுது வெல்லும் காலம் என்றால் கோட்டானுக்கு இரவுப் பொழுது வெல்லும் காலமாகும். 'யானைக்கு ஒரு காலம் வந்தாலும், பூனைக்கும் ஒரு காலம் வரும்' என்னும் பழமொழியும் இங்குக் கூர்ந்து கவனிக்கத்தக்கது.

ஒரு நாட்டின் அரசனுக்கு ஆதரவாக அமையும் காலம், சில வேளைகளில் பகைவனுக்குக் கேடு பயக்கும் காலமாக இருக்கக்கூடும்; பகைவனுக்கு ஆதரவாக அமையும் காலம் சில வேளைகளில் நாட்டின் அரசனுக்குக் கேடு தரும் காலமாக இருக்கக் கூடும். தனக்கு ஆதரவாகவும், பகைவனுக்குக் கேடாகவும் அமையும் காலம் பார்த்து நாட்டின் அரசன் அல்லது நாட்டின் தலைவன் அல்லது தனிமனிதன் தத்தம் பகைவனின்மீது பாய வேண்டும் என்றும், அப்பொழுதுதான் வெற்றி கிட்டும் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

காக்கையை அரசனுக்கும், கூகையைப் பகைவனுக்கும், பகற்பொழுதை ஆதரவான காலத்திற்கும் உவமைகளாகக் கூறுகிறார் குறளாசிரியர். இரவுப் பொழுதைக் கேடான காலத்திற்கு உவமையாகக் கூறாமல் கூறுகிறார் என்றும் கொள்ளலாம்.

தட்பவெப்பநிலை, வறுமை, வாட்டம், பிணி, படைக் கலைப்பு, படைக்குறைப்பு போன்ற காரணங்களால் மாற்றாரின் படை நலிவு அடையக்கூடும். அந்தக் காலமாகப் பார்த்து அரசன் மாற்றான்மீது படையெடுத்தால் காக்கை பகற் பொழுதில் கோட்டானை வெல்லுவதைப் போல மாற்றானை வெல்ல வழியேற்படும் என்பதை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

ஆகுங்காலம் பார்த்துப் பகைவனை எதிர்க்க முற்படவேண்டும் என்ற இந்தக் கருத்து நாடாளும் அரசனுக்கு மட்டுமல்லாமல், ஒவ்வொரு மனிதனுக்கும் பொருந்தி வரக்கூடியதேயாகும்.

மிகக் கடினமான கருத்தை எவ்வளவு எளிமையான உவமைமூலம் விளக்கிக் காட்டுகிறார் வள்ளுவப் பெருந்தகையார் என்பதற்கு இந்தக் குறள் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவதாகும்.

பிணிக்கும் கயிறும் காலத்தோடு ஒழுகலும்

எந்த ஒரு செயலைச் செய்வதாக இருந்தாலும், காலம் பார்த்துச் செய்ய வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு செயலுக்கும், அந்தந்தச் செயல் நிறைவேறுவதற்குரிய காலம் என்று, ஒரு குறிப்பிட்ட காலம் இருந்து வருவதைப் பார்க்கிறோம்.

எடுத்துக்காட்டாக, மாம்பழத்தை எடுத்துக் கொண்டால், மாம்பூ மாவடுவாகி, மாவடு மாங்காயாகி, மாங்காய் மாம்பழமாக வேண்டியிருக் கிறது. ஒரு குறிப்பிட்ட காலம் வந்தால்தான் மாம்பழம் கிடைக்கிறது. சிறிது விரைவுபட்டால் மாங்காய் பிஞ்சிலேயே பழுத்து, எதற்கும் பயன்படாத வெதும்பல் என்று பெயர் பெறுகிறது. சிறிது காலத் தாழ்வு செய்தால், பழம் மிகவாகப் பழுத்து, அழுகிப் போய் அழுகல் என்று பெயர் பெறுகிறது. விரைவு பட்டால் வெதும்பல் கிடைக்கிறது; காலந்தாழ்த் தினால் அழுகல் கிடைக்கிறது. இரண்டும் நமக்குப் பயன்படுவதில்லை. பயன்படும் பழம் வேண்டு மானால் ஒரு குறிப்பிட்ட காலத்தை அதாவது பழம் பழுக்கும் காலத்தை எதிர்பார்த்திருக்க வேண்டி யிருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட செயலை எடுத்துக் கொண்டால், அந்தச் செயலைத் தொடங்குவதற்கும், அந்தச் செயலைச் செய்வதற்கும், அந்தச் செயலை முடிப்பதற்கும் கூடக் குறிப்பிட்ட காலங்கள் தேவைப்

படுகின்றன. எடுத்துக்காட்டாகச் சீரகச் சம்பா நெற்பயிரை எடுத்துக்கொண்டால், சீரகச் சம்பா விதைகளை விதைப்பதற்கு ஒரு பருவம், பயிர்களை வளர்ப்பதற்கு ஒரு பருவம், அவற்றை அறுவடை செய்வதற்கு ஒரு பருவம் என்று இவ்வாறாகக் குறிப்பிட்ட சில பருவங்கள் தேவைப்படுகின்றன. பருவமல்லாத பருவத்தில் விதைத்தால் விதைகள் முளைப்பதில்லை; அது போன்றே பருவமல்லாத பருவங்களில் பயிர்கள் வளர்வதுமில்லை; அறுவடை ஆவதுமில்லை.

ஒரு நாடு பகை நாட்டின்மீது படையெடுக்க விரும்பினால், பகைநாடு நலிவுறும் காலம் பார்த்து, அந்தக் குறிப்பிட்ட காலத்தில் படையெடுத்தால், வெற்றி கிட்டுவது உறுதி; பகை நாடும் வலுவிழந்து அழியும். காலத்தைக் கணக்கிடாமல் படையெடுக்க முயன்றால், வலிவுமிக்க பகை நாட்டின் படையை எதிர்த்துநிற்க மாட்டாமல் அல்லலுற்றுத் தான் அழிந்துபட நேரிடினும் நேரிடக்கூடும்.

எனவே செய்ய வேண்டிய செயலை, செய்ய வேண்டிய காலத்தில் செய்ய வேண்டிய முறைப்படி செய்தால் கோரிய பலன் கிட்டும் என்பது பெறப்படு கின்றது. அப்படிக் காலத்தோடு ஒழுகும் தன்மை யைப், பிணிக்கும் கயிறு ஒன்றை உவமைப் பொருளாகக்கொண்டு, விளக்கிக் காட்டுகிறார் பொய்யில் புலவராகிய திருவள்ளுவப் பெருந் தகையார்.

பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு. (குறள் – 482)

(காலத்தோடு பொருந்தச் செயல் செய்து ஒழுகுதல், யாரிடத்தும் தங்காது நீங்கிப்போகும் செல்வத்தைத் தன்னிடத்தில் நீங்காமல் பிணிக்கும் கயிறாகும்.

பருவம் – காலம்; திருவினை – செல்வத்தை; ஆர்க்கும் – பிணிக்கும்.)

ஒருவரிடத்தும் நில்லாது பலரிடத்துச் சென்று கொண்டே இருக்கும் செல்வத்தைத் கட்டி ஓரிடத்திலேயே நிறுத்தக்கூடிய கயிற்றைக், காலத்தோடு பொருந்தி வருமாறு செயலைச் செய்து முடிக்கும் தன்மைக்கு உவமையாகக் கூறுகிறார் பொய்யா மொழியார்.

ஓரிடத்தில் நில்லாது ''செல்வம்'' என்று சொல்லிக்கொண்டே பொருள் பலரிடத்தும் சென்று கொண்டே இருக்கும் காரணத்தால்தான் பொருளுக்குச் 'செல்வம்' என்னும் பெயர் ஏற்பட்ட தாகக் கூறுவர். செல்லக்கூடிய செல்வத்தை இழுத்து நிறுத்திப் பிணித்து வைக்கக்கூடிய கயிறு ஒன்று இருக்குமேயானால், அதனால் இழப்பு ஒன்றும் ஏற்படுவதில்லை. அதுபோலச் செய்யவேண்டிய காலத்தில் ஒரு செயலைச் செய்து முடித்தால், அதனால் இழப்பு ஒன்றும் ஏற்படாது.

செல்வத்தைச் செயலுக்கும், பிணித்து நிறுத்துதலைக் காலத்தோடு நிற்றலுக்கும், கயிற்றைச் செய்தலுக்கும் உவமைப் பொருள்களாக கூறியுள்ளார் குறளாசிரியர். செயலைக் காலத்தோடு நின்று செய்தல் என்பது, செல்வத்தைப் பிணித்து நிறுத்தும் கயிறாகும் என்றவாறு.

செல்வத்தைத் தடுத்து நிறுத்தாவிட்டால், பின்னர் அது சென்று கொண்டேயிருக்கும்; கண்ணில் படாது. அதுபோலச் செயலைக் காலத்தோடு செய்யாவிட்டால், பிறகு அது செயல்படுவதே தெரியாது; கண்ணில் படாது. செல்வத்தைக் கயிறு இழுத்து நிறுத்துவதைப்போல, காலத்தோடு ஒழுகும் தன்மை செயலின் பயனை இழுத்து நிறுத்தும். கயிறு வலிவற்றதாக இருக்குமேயானால், செல்வம் நீங்கிப் போய்விடும். அதுபோலக் காலத்தோடு ஒழுகும் தன்மை வலிகுன்றிக் காணப்படுமேயானால், செயலின் பயன் நிறைவேறாமற் போய்விடும்.

எந்த ஒரு செயலையும் காலத்தோடு செய்ய வேண்டும் என்பது இக்குறளின் கருத்தாகும்.

'பருவத்தே பயிர் செய்', 'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்', 'பருவத்தோடு ஒத்துவாழ்', 'நாள் செய்வன நல்லவர் செய்யார்' போன்ற பழமொழிகள் இந்தக் கருத்தை வலியுறுத்துவனவாகும்.

செல்வத்தைப் பிணிக்கும் கயிற்றைக் காலத்தோடு செயல்செய்து ஒழுகுதலுக்கு உவமையாக வள்ளுவப் பெருந்தகையார் கூறியிருக்கும் பாங்கு படித்துப் படித்து மகிழ்வதற்குரியதாகும்.

திருக்குறளின் சிறப்பு

திருக்குறள் உலகமக்கள் அனைவர்க்கும் பொதுப் படையாக அமைந்த 'பொதுநூல்' என்று பெயர் பெற்றது. உலகோர் போற்றிப் புகழுவதற்குரிய 'பொதுமறைநூல்' என்னும் பெருமையுடையது. மக்களின் வாழ்வியலைப் பற்றிக் கூறவந்த வாழ்வியல் நூல் என்னும் சிறப்புடையது. எல்லா மக்களுக்கும் வாழ்க்கை வழிகாட்டியாகத் திகழக்கூடிய 'வாழ்க்கை வழிகாட்டி நூல்' என்னும் பெருமை பெற்றது. மக்கள் அனைவர்க்கும் அறநெறி கூறவந்த 'அறநெறிநூல்' என்னும் புகழ்பெற்றது. எல்லார்க்கும் அன்புநெறியை அறிவுறுத்தவந்த 'அன்புநெறி நூல்' என்னும் சிறப்புப் பெற்றது. மக்கள் பலர்க்கும் நீதிநெறி முறைகளைத் தெளிவுபடுத்த வந்த நீதிநூல் என்னும் பெருமைக்குரியது. உலகோர்க்குப் பண்பாடுகளைப் புகட்ட வந்த 'பண்பாட்டு நூல்' என்னும் பெயர் பெற்றது. அனைவர்க்கும் பொருளியல் விளக்கம் தரவந்த 'பொருளியல் நெறி நூல்' என்னும் சிறப்புக்குரியது. நாட்டு மக்கள் அனைவர்க்கும் அரசியல் நெறிமுறைகளை அறிவுறுத்த வந்த 'அரசியல் நெறிநூல்' என்னும் பெருமை வாய்ந்தது. உலகோர்க்கு ஒழுக்க மேம்பாடுகளைக் கற்பிக்க வந்த 'ஒழுக்கநூல்' என்னும் புகழ்வாய்ந்தது. மக்களுக்கு இன்பவியலைப்பற்றிக் கூறவந்த 'இன்பவியல் நெறிநூல்' என்னும் சிறப்புப் பெற்றது. அறிஞர் பெருமக்களால். என்றும் அழியாச் சிறந்த இலக்கியமாகப் புகழுவதற்குரிய 'பேரிலக்கியநூல்' என்னும் பெருமை வாய்ந்தது.

— நாவலர்

ஆட்டுக்கிடாயும் காலம் பார்த்தலும்

எந்த ஒரு செயலைச் செவ்வனே செய்து முடிப்பதாக இருந்தாலும், ஊக்கம் என்னும் உயர் பண்பு ஒவ்வொருவருக்கும் உறுதியாகத் தேவைப் படுகிறது. ஊக்கம் என்பது உள்ளத்திற்கும், உடலுக்கும் வலிவூட்டுகிற பண்பாகும். அதனால்தான் ஊக்கம் என்பது உடம்பொடு கூடிய உயிர்ப்பண்பு என்று சான்றோர்கள் கூறி வைத்தார்கள்.

ஒரு செயலைச் செய்து முடிக்கக் காலமும், இடமும் எப்படிப் புறத்தே கவனிக்கப்பட வேண்டியனவாக இருக்கின்றனவோ, அப்படியே ஒவ்வொருவரின் அகத்தேயும், ஊக்கம் என்னும் பொருளும் கவனிக்கப்பட வேண்டிய பொருளாக இருந்து வருகிறது. ஊக்கந்தான் உள்ளத்திற்கும், உடலுக்கும் வலிவூட்டுகிறது. ஊக்கமுடைய ஒருவர் உணர்ச்சி வயப்படாமல், காலமும், இடமும் அறிந்து செயல்பட வேண்டியிருக்கிறது. காலத்தையும் இடத்தையும் பொருட்படுத்தாமல், ஊக்கமுடைய எவரேனும் உணர்ச்சி வயப்பட்டுச் செயல் செய்ய முற்படுவாராயின், ஊக்கம் சிதறுண்டு, செயல் நிறைவேறாமல் போய்விடும். எவ்வளவு மிகுதியான ஊக்கமுடையவராயினும், அளவோடு கூடிய உணர்ச்சியை மேற்கொண்டு, காலத்தையும் இடத்தை யும் அறிந்து செயல்படவேண்டியவராக இருக்கிறார். தக்க காலமும், தக்க இடமும் அறியாமல் மேற் கொள்ளப்படும் ஊக்கம், அது எவ்வளவு மிகுதி யுடையதாகக் காணப்பட்டாலும், அதனால்

எதிர்பார்க்கப்படும் பலன் எதுவும் ஏற்படாமல் போய்விடும். ஒரு செயலைச் செய்வதற்கான ஊக்கம் மிகுதியாக ஏற்பட்டு, அதனை நிறைவேற்றுவதற்குரிய காலம் வராவிட்டால், அப்படிப்பட்ட காலம் வரும் வரையில், அப்படிப்பட்ட ஊக்கமுடையவர்கள் காத்திருந்தால்தான் கோரிய பலன் கிட்ட வழி ஏற்படும். அதனை விடுத்துக் காலத்தைப்பற்றிக் கவலைப்படாமல், விரைவுபட்டுச் செயல் செய்ய முற்பட்டால், ஊக்கமும் அழியும், கோரிய பலனும் கிட்டாது.

பகைவரை எதிர்த்துச் செய்ய வேண்டிய ஒரு செயலைச் செவ்வனே செய்து முடிக்க விரும்பும் ஒருவன், அந்தச் செயலுக்குரிய காலம் வந்து சேரும் வரையிலும், அந்தச் செயலைச் செய்யாது அடங்கி ஒடுங்கியிருந்து, அதற்கான காலம் வரப்பெற்றதும், அந்தச் செயலைச் செய்ய முற்படவேண்டும் என்பதை வள்ளுவப் பெருந்தகையார் மிக அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார். இந்தக் கருத்தை விளக்கிக் கூறவந்த வள்ளுவர், தலையொடு தலைமுட்டிச் சண்டையிடுகிற ஆடு ஒன்றனை உவமைப் பொருளாகக்கொண்டு தெளிவுபடுத்திக் காட்டுகிறார்.

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து. (குறள் – 486)

(வலி மிகுதியுடையவன், பகைமேல் செல்லாது, காலம் பார்த்து ஒடுங்கியிருக்கின்ற ஒடுக்கம், சண்டையிடுகின்ற ஆட்டுக்கிடாய் தன் பகை கெடும்படி பாய்தற்பொருட்டுப் பின்னே கால் வாங்கும் தன்மையதாகும்.

பொருதகர் – சண்டையிடும் ஆட்டுக்கிடாய்; தாக்கற்கு – பாய்தற்கு; பேரும் – நகரும், பின்னே கால் வாங்கும்; தகைத்து – தன்மைத்து.)

தலையொடு தலைய மோதி மற்றோர் ஆட்டோடு சண்டையிடும் ஆடு, மீண்டும் மோதுவதற்காகப் பின்னே கால் வாங்கி நிற்கும் தன்மையை, ஊக்கமுடைய ஒருவன் பகைவன்மேல்

பாயாது அடக்க ஒடுக்கமாய்க் காலம் பார்த்துக் காத்திருக்கும் தன்மைக்கு உவமையாகக் கூறுகிறார் வள்ளுவப் பேராசிரியர்.

இரண்டு ஆட்டுக்கிடாய்கள் ஒன்றோடொன்று பகைத்துக்கொண்டு சண்டையிடும் காட்சி பார்ப்பதற்குக் கவர்ச்சிகரமாக இருக்கும். தலையொடு தலையை மோதி சண்டையிடுகிற இரண்டு ஆடுகளும், முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கிக்கொண்டு, உடலைப் பின்னங்கால்களால் தாங்கிக்கொண்டு, சற்றுப் பின்வாங்கி நின்று, தலையை மோதுதற்கு ஏற்றவாறு கீழ்நோக்கிச் சாய்த்து வைத்துக்கொண்டு, இரண்டு ஆடுகளும் விரைவாக ஒருசேரப் பாய்ந்து, தலையொடு தலை 'படார்' என்று மோதும் வண்ணம் சண்டையிடும். ஆடு முதலில் பின்வாங்கிப், பிறகு முன்னால் விரைந்து பாய்ந்து பகையாட்டின் மீது தலை முட்டுவதற்குக் காரணம் என்னவென்றால், ஆடு ஊக்கத்தை மிகவாகப் பெற்றுத் தாக்குதலை மிகப்படுத்துவதற்கே ஆகும். அதுபோலப் பகைவன்மீது படையெடுக்க இருக்கிற அரசன், காலத்தை நோக்கிப் பின்தங்கியிருந்து, காலம் வந்ததும் முன் வந்து பாய்வானேயானால், பகைவனை வலிவாகத் தாக்குவதற்கும், அவனை அழிப்பதற்கும் வழி ஏற்படும் என்பது புலப்படுத்தப்படுகிறது.

சண்டையிட முயலும் ஆட்டை, பகைவன்மீது பாய ஊக்கமோடு இருக்கும் ஒருவனுக்கும், ஆடானது பின்னே கால்வாங்கும் தன்மையைப் பகைவன்மீது பாயக் காலம் பார்த்து அடங்கி ஒடுங்கியிருக்கும் தன்மைக்கும் உவமைகளாகக் கூறியிருக்கிறார் வள்ளுவப் பெருந்தகையார்.

ஆடு எப்படி ஊக்கமிகுதியையும், வலிமையையும் வரவழைத்துக்கொள்ளச் சிறிது பின்வாங்கிச் செவ்வி பார்த்து நிற்கிறதோ, அப்படியே பகைவன்மீது பாய முற்படும் ஒருவன் ஊக்கமிகுதியையும், வலிமையையும் வரவழைத்துக்கொள்ள, தக்ககாலம் வந்து எய்தும் வரையிலும் அதன்கண் முயலாது ஒடுங்கி

யிருக்கவேண்டும் என்பது இக்குறளால் வலியுறுத்தப் படுகிறது.

புலிகூடத் தன் இரையின்மீது ஊக்கத்தோடும், வலிமையோடும் பாயப் பதுங்குவதைப் பார்க்கலாம். "புலி பதுங்குவது பாய்ச்சலுக்கு அடையாளம்" என்றும், "புலி பதுங்கிப் பாயும்" என்றும் பழமொழிகள் வழங்கி வருவது நினைவுகூரத் தக்கது.

பெயர்ப் பொருத்தமும் செயற்பொருத்தமும்

நாவலர் நெடுஞ்செழியன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் எம்.ஏ. பயின்றார். அப்போது அவர் பெயர் நாராயணசாமி. தமிழர் பெயரெல்லாம் தமிழாக இருக்க வேண்டும் என்ற ஆர்வத்தால், நெடுஞ் செழியன் என்ற சங்கத் தமிழ்ப்பெயரைத் தலைக் கொண்டார். வடமொழிப் பெயரைத் தமிழ் செய்யும்போது. வேதாசலம் மறைமலை ஆனதுபோல, சூரியநாராயண சாத்திரி 'பரிதிமாற் கலைஞன்' ஆனதுபோல பொருள் தழுவி, அமைத்துக்கொள்வது ஒரு வழக்கு. நாராயணசாமிக்கும் நெடுஞ்செழியனுக்கும் என்ன பொருள் தொடர்பு உண்டு? பொருள் தழுவாத் தமிழ்ப் பெயராக நாவலர் வைத்துக் கொண்டதன் நோக்கம் என்ன?

மாணவப் பருவத்தில் நாவலர் பெரியார்தம் திராவிடர்க் கழகத்தைச் சார்ந்தவர். அதன் கொள்கைகளில் ஒன்று வடநாட்டு ஆதிக்கத்தையும், ஆரிய ஆதிக்கத்தை யும் ஒழித்தல். ஆதலின் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற பெயர் நாவலர்தம் உணர்ச்சிக்கு ஏற்றதாயிற்று. இந்நெடுஞ்செழியன் ஆரியப்படை கடந்த ஆற்றலுடையவன் மட்டுமல்லன். எல்லா மக்கட்கும் கல்வி வேண்டும் என்ற அரசுக் குறிக்கோளும் உடையவன். "உற்றுழியுதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே" என்று பாடியவன். ஆதலால் அன்று பாண்டியன் நெடுஞ்செழியன் சொல்லியதை இன்று நாவலர் நெடுஞ்செழியன் கல்வியமைச்சராக இருந்து செயற்படுத்துகின்றார் - பெயர்ப் பொருத்தத்தில் எவ்வளவு செயற் பொருத்தம்! — டாக்டர் வ. சுப. மாணிக்கம் (1970).

17

கொக்கும் காலங் கருதுவோனும்

ஓர் அரசன் மாற்றரசன் நாட்டின்மீது படை யெடுக்க விரும்புகிறான் என்றால், படையெடுத்த லாகிய வினையின் வலிவையும், படையெடுக்க முனையும் தன்னுடைய வலிவையும், படையெடுக்கப் படும் மாற்றானின் வலிவையும், தனக்கும் மாற்றா னுக்கும் துணைபோகக்கூடிய வலிவுகளையும் சீர்தூக்கிப் பார்த்துத் தனக்கு வாய்ப்பான சூழ்நிலை உருவாவதைக் கண்டறிந்து, படையெடுக்கக் கடமைப் பட்டிருக்கிறான்.

அரசன் மாற்றான்மீது படையெடுக்கும் காரணம் நேர்மையானதாகவும், நீதியுடையதாகவும், முறை கொண்டதாகவும், இன்றியமையாததாகவும் இருக்குமேயானால், அப்பொழுது மேற்கொள்ளப்படும் வினை, மிக்க வலிவுகொண்ட ஒன்றாக இருக்கும். நேர்மை - நீதி முறை - இன்றியமையாமை ஆகியவை யற்ற காரணங்களை அடிப்படையாகக்கொண்ட வினை வலிவிழந்த ஒன்றாகவே இருக்கும். எனவே தான், போர் தொடுக்கும் அரசன் வலிவிழந்த வினையை மேற்கொள்ளாமல், வலிவு கொண்ட வினையை மேற்கொள்ளவேண்டியவனாக இருக்கிறான்.

அரசன் வலிவுடைய வினையை மேற்கொள்வ தோடு, தன்னுடைய வலிவையும் பெருக்கிக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறான். வினைவலிவையும், தன் வலிவையும், தனக்குத் துணை வரக்கூடிய

வலிவையும் பெருக்கிக்கொள்ளும் அரசன், மாற்றான் வலிவும், அவனுக்குத் துணை போகக்கூடிய வலிவும் குறைந்திருக்கின்றனவா என்று பார்த்துப் போர் தொடுக்க வேண்டியவனாக இருக்கிறான். மாற்றான் வலிவும், அவனது துணைவலிவும் குறைந்திருக்கிற காலம் பார்த்து அவன்மீது படையெடுத்தால், அவன் எளிதில் அடங்கி அழிந்தொழிவது உறுதி. அந்தக் காலத்தைத் தவற விட்டுவிட்டால், மாற்றான் தன்னுடைய வலிவையும், தன் துணை வலிவையும் பெருக்கிக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டாலும் ஏற்படக் கூடும். அப்படி ஏற்படும்போது அந்த மாற்றானை எதிர்ப்பது கடினமான ஒரு செயலாக ஆனாலும் ஆகக்கூடும். எனவே, மாற்றான் வலிவு குறைந்து காணப்படும் காலம் வரையில் காத்திருந்து, வலிவு குறைந்தவுடன் காலத்தாழ்வுக்குச் சிறிதுகூட இடங் கொடுக்காமல், உடனே பாய்ந்து மாற்றானை வெல்ல அரசன் முயலவேண்டும் என்பது பெறப்படும்.

அரசனைப் பொறுத்து மட்டுமல்லாமல், யாரொருவர் போராடி வெல்லக்கூடிய எந்த ஒரு செயலைச் செய்வதாக இருந்தாலும், வெற்றி கிடைக்கத்தக்க காலம் வரும் வரையில் காத்திருந்து, அந்தக் காலம் வந்தவுடன், காலத்தாழ்வுக்கு இடங் கொடுக்காமல் உடனே செய்யவேண்டியதைச் செய்து முடிக்க வேண்டும். இல்லையானால் முயற்சியும் தோல்வியுறும்; கோரிய பலனும் கிட்டாது.

போரிட்டுப் பெறவேண்டிய செயலை உரிய காலத்தில் செய்யாமல் முன்கூட்டியே செய்ய முற்பட்டால் செயல் நிறைவேறாமற் போய்விடும்; காலங்கடந்து செய்ய முற்பட்டால் பலன் கிட்டாது போய்விடும். எனவே, காலத்தோடு செய்து முடிக்க வேண்டும் என்பது பெறப்படுகின்ற ஒன்று.

காலம் பார்த்திருந்து காலத்தோடு செயலைச் செய்து முடிக்க வேண்டும் என்பதை வள்ளுவப் பெருந்தகையார் கொக்கை உவமைப் பொருளாகக் கொண்டு விளக்கிக் காட்ட முற்படுகிறார்.

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. (குறள் – 490)

(வினைமேல் செல்லாதிருக்கும் காலத்தில் மடை வாயிலுள்ள கொக்கு அடங்கி ஒடுங்கி இருப்பதைப் போல இருக்கவும், மற்றபடி வினைமேல் செல்லுங் காலம் வாய்த்தபோது, மீன் தனக்கு நேர்பட்டளவில் கொக்கானது அதனைக் குத்திக் கொள்ளுமாறு போலத் தப்பாமல் வினையைச் செய்து முடிக்கும்.

கூம்பும் பருவம் – ஒடுங்குங் காலம்; சீர்த்த இடத்து – வாய்த்த வழி.)

தனக்கு எதிராக மீன் வருவதை எதிர்பார்த்துக் கொண்டு, கொக்கானது எப்படி மடைத்தலையில் உட்கார்ந்திருக்கிறதோ, அதுபோலச் செயல் செய்து முடித்தற்குரிய காலம் வரும்வரையில் செயல் செய்பவர் காத்திருக்க வேண்டும்; மீன் தனக்கு நேரே எதிர்ப்பட்டவுடன், கொக்கானது எப்படி விரைந்து குத்தி எடுத்து விழுங்குகிறதோ, அதுபோலச் செயல் செய்து முடித்தற்குரிய காலம் வந்தவுடன் விரைவாக இறங்கிச் செயலைச் செய்து முடிக்க வேண்டும் என்பது இக்குறள் கூறுகின்ற கருத்தாகும்.

கொக்கு மடைத்தலையில் மீனுக்காகக் காத்திருத்தலை, செயலைச் செய்வார் செயலைச் செய்வதற்குரிய காலத்திற்காகக் காத்திருத்தலுக்கும், மீன் வந்து எதிர்ப்படுதலைக் காலம் வந்து எதிர்ப்படுதலுக்கும், மீனை உடன் குத்தி எடுத்து உண்ணுதலை செயலை உடன் செய்து முடித்தலுக்கும் உவமைகளாகத் திருவள்ளுவர் கூறியிருக்கிறார்.

மீனை எதிர்பார்த்து கொக்கானது எப்படி மடைத்தலையில் அடங்கி, ஒடுங்கி கண்ணுங் கருத்துமாக உட்கார்ந்திருக்கிறதோ, அப்படியே ஒரு செயலில் போராடி வெற்றிகாண விரும்புபவர்கள், அதற்கான காலம் வருகிறவரையில் கண்ணுங் கருத்துமாக அந்தக் காலத்தை எதிர்பார்த்திருக்க

வேண்டும் என்பதிலிருந்து, கொக்கின் நாட்டம் வேறு எதிலும் செல்லாமல் எப்படி மீனை எதிர்பார்த்திருக் கிறதோ, அதுபோல செயல் செய்பவரின் நாட்டமும் வேறு எதிலும் செல்லாமல் காலத்தை எதிர்பார்த் திருக்க வேண்டும் என்பதை அறியலாம். கொக்கு எப்படி எதிரியாகிய மீனுக்குத் தன்னைக் காட்டிக் கொள்ளாமல் உயிரில்லாது போன்று இருக்கிறதோ, அப்படியே செயல் செய்பவர் எதிரிக்குத் தம்மைக் காட்டிக்கொள்ளாமல் மறைவாக இருக்க வேண்டும் என்பதும், கொக்கு எப்படித் தன்னை ஒரு பொருட்டாகக் கருதாமல் மீன் ஏமாந்து தன்முன் வருவதற்கு ஒரு வழி செய்து வைக்கிறதோ, அப்படி செயலாற்றுபவர் தம்மை ஒரு பொருட்டாகக் கருதாமல் எதிரி ஏமாந்து தன்முன் வருவதற்கு வழி செய்யவேண்டும் என்பதும், எதிரியாகிய மீன் தப்புவதற்கு முன்பே கொக்கு எப்படி விரைந்து குத்தி எடுக்கிறதோ, அப்படியே எதிரி தன் பிடியிலிருந்து தப்பி ஓடுவதற்கு முன்பே விரைந்து எதிரியை அடக்கி ஒடுக்க வேண்டும் என்பதும், மீனை உரிய காலத்தில் குத்தி எடுக்காவிட்டால் கொக்கு எப்படி ஏமாந்து போகுமோ, அப்படியே செயலை உரிய காலத்தில் செய்து முடிக்காவிட்டால் செயல் செய்பவர் ஏமாந்து போகவேண்டி நேரிடும் என்பதும் இக்குறளால் பெறப்படுவனவாகும்.

காத்து இருப்பதற்கும், விரைந்து செயல்படுவ தற்கும் கொக்கு உவமையாகக் கையாளப்படுகிறது பொய்யாமொழியாரால். காலம் பார்த்து உடன் செயலாற்றுபவருக்குக் கொக்கை உவமையாகக் கூறி விளக்கிக் காட்டும் வள்ளுவரின் திறன் பாராட்டி மகிழ்வதற்குரியதாகும். இந்தக் குறள், உவமை நயத்தோடு, ஓசை நயமும் கொண்டு மிளிர்வதாகும்.

''மடைத்தலையில் ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும், வாடி இருக்குமாம் கொக்கு'' என்னும் வாக்குண்டாம் அடிகளும் கொக்கின் இயல்பை விளக்கிக் காட்டுவது கூர்ந்து கவனிக்கத்தக்கதாகும்.

முதலையும் இடமறிவோனும்

ஒரு செயலைச் செவ்வனே வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்கு, வசதியான காலம் எவ்வாறு இன்றியமையாததொன்றாகக் காணப்படுகிறதோ, அவ்வாறே வசதியான இடமும் இன்றியமையாத தொன்றாகக் காணப்படும்.

ஒரு செயலை இனிமையாக, எளிமையாக, அழகாக, விரைவாகச் செய்து முடிப்பதற்குக் குறிப்பிட்ட காலம் எவ்வாறு ஏற்ற துணையாக அமைகிறதோ, அவ்வாறே குறிப்பிட்ட இடமும் ஏற்ற துணையாக அமைகிறது.

ஓர் அரசன், மாற்றரசன் ஒருவன்மீது பகை கொண்டு போர் தொடுக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். கோட்டையும், கொத்தளமும், அகழியும், காடும், அரணாக அமைந்த ஓர் இடத்தில் நின்று கொண்டு, மாற்றாரோடு போர் தொடுக்கும் வாய்ப்பு அந்த அரசனுக்கு ஏற்படுமேயானால், இடம் அவனுக்கு ஏற்ற ஒன்றாகவும், வலிமையூட்டுவதாகவும் அமையும். அப்படிப்பட்ட ஓர் இடத்தைத் துணை யாகக்கொண்டு அரசன் போரிடத் தொடங்குவானே யானால், இயல்பாகவே வலிமையுடைய அவ்வரச னுக்கு வெற்றிகிட்டும் என்பது உறுதி.

மலைப்பாங்கான இடத்தில் வாழ்ந்து, மலைப் பகுதிகளிலேயே திறம்படப் போரிட்டுப் பழக்கப்பட்ட அரசனை எதிர்த்து, நிலப்பாங்கான இடத்திலிருந்து பகையரசன் ஒருவன் படையெடுத்து வருவானே

யானால், அவனை முறியடித்துப் புறமுதுகுகாட்டி ஓடச் செய்வது என்பது மலைப்பகுதியரசனுக்கு எளிதான ஒன்றாக அமையும். அதுபோலவே நிலப் பகுதியரசனை எதிர்த்து மலைப் பகுதியரசன் வருவானேயானால், நிலப்பகுதி அரசன் மற்றவனை ஓடஓட விரட்டியடிப்பது என்பது எளிதான ஒன்றாக அமையும்.

குளிர்மிகுந்த நாட்டில் இருந்து போரிட்டுப் பழக்கப்பட்ட ஒருவனுக்கு, வெப்பம் மிகுந்த நாட்டிற்கு வந்து போரிடுவது என்பது கடினமான ஒன்றாக அமையும். அதுபோலவே வெப்பம் மிகுந்த நாட்டில் இருந்து பழக்கப்பட்ட ஒருவனுக்குக் குளிர் மிகுந்த நாட்டிற்குச் சென்று போரிடுவது என்பது கடினமானதாக இருக்கும்.

ஒருவன் தனக்கு வசதியும், பகைவனுக்கு வசதி யின்மையும், தனக்கு வலிவும், மாற்றானுக்கு நலிவும், தனக்குப் பல்வேறுவகையான துணைகளும், எதிரிக்குப் பல்வேறுவகையான இடுக்கண்களும், தனக்குப் பாதுகாப்பும், பகைவனுக்குப் பாதுகாப் பின்மையும், தனக்கு வெற்றியும், மாற்றானுக்குத் தோல்வியும் தரத்தக்க இடமாகத் தேர்ந்தெடுத்துப் போரிடத் தொடங்கினால், உறுதியாக அவனுக்கு வெற்றி கிடைக்கும். இவ்வாறு இடத்தைத் தேர்ந்தெடுத்துச் செயல்புரியவேண்டும் என்பது, எந்த ஒரு செயலைச் செய்தும் வெற்றிபெற விரும்புகிற ஒவ்வொருவருக்கும் பொருந்தக்கூடிய கருத்தாகும்.

ஒருவன் தனக்கு வெற்றிக்கு வாய்ப்பான இடத்தைத் தேர்ந்தெடுத்துக்கொண்டால்தான் கோரிய வெற்றி கிடைக்கும், இல்லாவிட்டால் தோல்வியுற நேரிடும் என்பதற்கு முதலையை உவமைப் பொருளாகக் கொண்டு விளக்கிக்காட்ட முற்படுகிறார் திருவள்ளுவப் பெருந்தகை.

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. (குறள் – 495)

(முதலை ஆழமுடைய நீரில் பிற உயிர்களைக் கொன்று வெல்லும்; அந்த நீரைவிட்டு அது வெளி வருமாயின் அதனை மற்ற உயிர்கள் கொல்லும் வலிமையுடையன. புனல் – நீர்நிலை)

முதலையானது ஆழமான நீர் நிலையில் வாழும்போது, அதனோடு போரிட பிற உயிர் வகையான மனிதனோ, யானையோ, புலியோ எந்தப் பகை வந்தாலும், அதனை மிக எளிதாக அது கொன்று வெற்றி கொண்டுவிடும்; நீர் அல்லாத நிலத்தில் அது செல்லும்போது, மிகச் சிறிய எறும்பு போன்ற பிற உயிர்கள்கூட அதனை மிக எளிதில் வென்றுவிடும் என்பதை உவமையாகக் கூறி, ஒருவன் தனக்கு வெற்றி தரத்தக்க இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும், இல்லையானால் மாற்றார் அவனை எதிர்த்து வெற்றிகொண்டு விடுவார்கள் என்ற கருத்தை உவமேயமாகப் பெற வைக்கிறார் பொய்யாமொழியார்.

முதலையை முயற்சியில் ஈடுபடும் மனிதனுக்கும், அது நீரில் வாழும் நிலையை வெற்றிக்கு வாய்ப்பான இடத்திற்கும், அது நீரல்லாத நிலத்தில் வாழும் நிலையை வெற்றிக்கான வாய்ப்பிழந்த இடத்திற்கும் உவமைப்பொருள்களாகக் கூறுகிறார் ஆசிரியர் பெருந்தகை.

முதலையானது நீர்நிலையை எப்படித் தனக்கு வெற்றிக்கு வாய்ப்பான இடமாகக் கருதி வாழ் கிறதோ, அதுபோலச் செயல் செய்ய முற்படுபவன் தனக்கு வெற்றி தரக்கூடிய வாய்ப்பான இடத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். முதலையானது எப்படி நிலத்தைத் தனக்கு வலிவூட்டத்தக்கதோர் இடமல்ல என்று கருதி ஒதுக்கிவிடுகிறதோ, அப்படியே செயல் செய்ய முற்படுபவன் தனக்கு நலிவு தரக்கூடிய இடத்தை ஒதுக்கித்தள்ள வேண்டும்.

முதலைக்கு, நீர்நிலை, நிலம் ஆகிய இரண்டு வித இடங்களில் இடத்தைப் பொறுத்து முறையே வெற்றியும், தோல்வியும் ஏற்படுகின்றன. அதுபோலவே

செயலாற்றும் ஒவ்வொருவருக்கும் இடத்தைப் பொறுத்து வெற்றியும், தோல்வியும் ஏற்படும்.

முதலைக்குரிய இயல்பான வலிவு ஒருபக்கம் இருந்தாலும், இடத்தைப் பொறுத்து அதன் வலிவு கூடுதலும், கூடாமலிருப்பதும் ஏற்படுகிறது. முதலை, யானை ஆகிய இரண்டு உயிரினங்களையும் எடுத்துக் கொண்டால் முதலை நீரில் வலிமிகுந்தும், நிலத்தில் வலிவிழந்தும் காணப்படுகிறது; யானை அதற்கு நேர் மாறாக நிலத்தில் வலிமிகுந்தும், நீரில் வலிவிழந்தும் காணப்படுகிறது. இதிலிருந்து, எந்த ஒரு செயலைச் செய்ய முற்படுவதாக இருந்தாலும் வெற்றிக்கு வாய்ப்பான இடத்தைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு செயல்புரிய முற்படவேண்டும் என்பது உணர்த்தப் படுகிறது.

"தன் ஊருக்கு ஆனை மன் ஊருக்குப் பூனை", "முதலை தன் இடத்தில் மலை ஒத்த யானையையும் இழுத்துச் செல்லும்" என்னும் பழமொழிகளின் கூற்றுகளும், "ஓரிடத்தில் ஆற்றல் உடையவர் அயலொருவர் சேரிடத்தில் ஆற்றார் தினகரா" என்று 'தினகரத்'தில் வரும் அடிகளும், "தன்னூருக்குப் புலி அசலூருக்கு நரி" என்ற பழமொழியும் மேற்கூறப் பட்ட வள்ளுவப் பெருந்தகையாரின் கருத்தை வலியுறுத்துவனவாகும்.

வள்ளுவர் முதலையை உவமைப்பொருளாக எடுத்துக்கொண்டது யார்க்கும் எளிமையாகவும், இனிமையாகவும் புரியக்கூடியதாகும்.

கப்பலும் இடத்திற்கேற்ற கருவியும்

ஒரு செயலைச் செவ்வனே செய்து வெற்றிகர மாக முடிக்க வேண்டுமானால், அதற்குரிய காலம் இன்றியமையாது வேண்டப்படுகிறது. காலம் எவ்வளவு இன்றியமையாததாக வேண்டப்படுகிறதோ, அவ்வளவு இன்றியமையாததாக வேண்டப்படுகின்ற ஒன்று இடம் ஆகும். இடம் எவ்வளவு இன்றியமை யாததாக விரும்பப்படுகிறதோ, அவ்வளவு இன்றியமையாததாக விரும்பப்படுகின்ற ஒன்று கருவி ஆகும்.

எந்த ஒரு செயலைச் செய்வதாக இருந்தாலும், செயலாற்றுவதற்குரிய காலமும், காலத்திற்கு ஏற்ற இடமும், இடத்திற்கு ஏற்ற கருவியும் பொருத்தமாக அமையுமேயானால், செயலின் நோக்கம் மிக எளிதாக, அழகாக, அருமையாக, இனிமையாக, வெற்றிகரமாக நிறைவேறும். செயலாற்றுபவன் எத்துணை அளவு அறிவும், ஆற்றலும், தகுதியும், திறமையும், வலிவும், பொலிவும் உடையவனாக இருந்தபோதிலும், காலம் உறுதுணை புரியாவிட்டால், அவனது முயற்சி தோல்வியுற நேரிட்டாலும் நேரிடும். அதோடு இடமும் பொருத்தமாக அமையாமற் போனால், தோல்விக்கான வாய்ப்பு வலிவு பெறும். அதோடு ஏற்ற கருவியும் கிடைக்காமல் போனால், தோல்வி உறுதி என்றாகிவிடும்.

ஒரு காலத்தில் ஆங்கிலக் கால்வாயில் சுபெயின் நாடும், ஆங்கில நாடும் கடும் கப்பற்போர் நடத்திய

போது மிகப் பெரியனவும், எண்ணிக்கையில் அதிகமானவையும் ஆன கப்பல்களைக் கொண்டிருந்த சுபெயின் நாடு தோல்வியுற்றது; மிகச் சிறியனவும், எண்ணிக்கையில் குறைவானவையும் ஆன கப்பல் களைக் கொண்ட ஆங்கில நாடு வெற்றி கொண்டது. காரணம் என்னவென்றால், சுபெயின் நாடு மிக வலிமைபடைத்த பெரிய பெரிய கப்பல்களைக் கொண்டிருந்தபோதிலும் அவற்றை ஆங்கிலக் கால்வாயில் எளிதாகத் திருப்பவோ, விரைவாகச் செலுத்தவோ முடியவில்லை; ஆனால், ஆங்கில நாடு சிறிய கப்பல்களைக் கொண்டிருந்ததால், ஆங்கிலக் கால்வாயில் அவற்றை எளிதாகத் திருப்பவும், விரைவாகச் செலுத்தி மாற்றார் கப்பல்களைத் தாக்கவும் இயன்றது. அதனால் ஆங்கில நாடு போரில் வென்றது, சுபெயின் நாடு தோல்வியுற்றது. ஆங்கில நாடு இடத்திற்கு ஏற்ற கருவியை - அதாவது சிறிய கப்பல்களைக் கொண்டிருந்ததனால் வென்றது; சுபெயின் நாடு இடத்திற்குப் பொருந்திவராத பெரிய கப்பல்களைக் கொண்டிருந்ததனால் தோல்வியுற்றது.

ஒரு செயலை வெற்றிகரமாக முடிப்பதற்கு இடம் எவ்வளவு இன்றியமையாததாக வேண்டப்படு கிறதோ, அவ்வளவு இன்றியமையாததாக இடத்திற்கு ஏற்ற கருவியும் வேண்டப்படுவதாகும். இடத்திற்கு ஏற்ற கருவியைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைத் தேர், கப்பல் ஆகிய இரண்டையும் உவமைப்பொருள்களாக எடுத்துக்கொண்டு விளக்கிக் காட்டுகிறார் பொய்யில்புலவரான வள்ளுவப் பெருந்தகையார்,

கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து. (குறள் – 496)

(நிலத்தின்கண் ஓடும் நல்ல உருளைகளையுடைய வலிய பெருந்தேர்கள் கடலின்கண் ஓடமாட்டா; கடலின்கண் ஓடும் மரக்கலங்கள் நிலத்தின்கண் செல்லமாட்டா.

கால்வல் நெடுந்தேர் - ஓடுதற்கேற்ற நல்ல உருளை களையும், வலிமையையும் உடைய பெருந்தேர்; நாவாய் - மரக்கலம்)

தேரானது நீரில் செல்லாது, கப்பலானது நிலத்தில் ஓடாது என்று குறிப்பிடுவதன்மூலம் இடனறிந்து ஏற்ற கருவியைப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தைப் பெற வைக்கிறார் பொய்யா மொழியார்.

இடத்திற்கு ஏற்ற கருவியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும் என்பதற்கு, நிலத்தில் ஓட்டு வதற்குத் தேரைத் தேர்ந்தெடுத்தலையும், நீரில் செலுத்துவதற்கு மரக்கலத்தைத் தேர்ந்தெடுத்தலையும் உவமைகளாகக் கூறுகிறார் குறளாசிரியர்.

ஒரே உவமையின்மூலம் பொருளை விளக்கிக் காட்டாமல், இரண்டு உவமைகளின்மூலம் வள்ளுவர் விளக்கிக் காட்டுகிற தன்மை கூர்ந்து கவனிக்கத் தக்கதாகும். ஒரு கருவி பயன்படக்கூடிய இடத்தை மட்டும் சொல்லி நிறுத்திவிட்டால், அதனால் உணர்த்த வேண்டிய கருத்து முழுவதையும் உணர்த்தியதாக ஆகாது; பயன்படுத்த முடியாத இடத்தையும் சுட்டிக்காட்டினால்தான் முழுப் பொருளையும் உணர்த்தியதாக ஆகும். ஆகவேதான் நிலத்தில் ஓட்டுவதற்குப் பயன்படக்கூடியது தேர், கடலில் ஓட்டுவதற்கு அது பயன்படாது என்று கூடிய தன்மை, கூடாத தன்மை ஆகிய இரண்டு தன்மைகளையும் ஒருசேர உணர்த்துகிறார் வள்ளுவப் பெருந்தகையார். அதோடு மட்டும் நிறுத்தாமல் ஒரு கருவிக்குப் பயன்படக்கூடிய இடம் மற்றொரு கருவிக்குப் பயன்படாமல் போகும் என்பதையும், அந்த ஒரு கருவிக்குப் பயன்பட முடியாத இடம், அந்த மற்றொரு கருவிக்குப் பயன்படக் கூடியதாக இருக்கும் என்பதையும் உணர்த்தவே தேரையும், அதற்கு நேரடியாக மாறுபட்டு விளங்கும் கப்பலையும் உவமைப்பொருள்களாகக் காட்டுகிறார் பொய்யில் புலவர். நிலத்தில் பயன்பட்டு நீரில் பயன்படாதது

தேர்; அதற்கு நேர்மாறான தன்மையில் நீரில் பயன்பட்டு நிலத்தில் பயன்படாதது கப்பல்.

வள்ளுவர் தேரைப்பற்றிக் குறிப்பிடும்போது, கால்வல் நெடுந்தேர் என்னும் அடைமொழியோடு குறிப்பிடுவதில் நயத்தோடுகூடிய காரணம் ஒன்று இருக்கிறது. நாவாயைப்பற்றிக் குறிப்பிடும்போது அதற்கு அப்படிப்பட்ட அடைமொழி எதுவும் தரவில்லை. தேரைப்பற்றிக் குறிப்பிடும்போது, 'கால்வல் நெடும்' என்னும் அடைமொழி கொடுத்தே தீரவேண்டும் என்று எண்ணினார். கால்கள் இல்லாமல், வலிய தன்மை இல்லாமல், பெரிதாக இல்லாமல் இருந்தால், அப்படிப்பட்ட தேர், நீரில் விடப்படும் போது, கப்பல்போல் மிதந்தாலும் மிதக்கக் கூடும். தேரானது உறுதியான உருளைகளை யுடையதாகவும், வலிய தன்மையை உடையதாகவும், பெரியதாகவும் இருக்குமேயானால் நீரில், அமிழ்ந்து போகுமே தவிர மிதக்காது. அதனால்தான் 'தேர்' என்று பொதுப்படையாகக் கூறாமல், நீரில் அமிழ்ந்து போகக்கூடிய 'கால்வல் நெடுந்தேர்' என்று பொய்யில் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் கண்களுக்கு எளிதில் படக்கூடியன வும், மக்களால் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய அளவுமான தேர், கப்பல் ஆகிய இரண்டு பொருள் களையும் உவமைப்பொருள்களாக எடுத்தாளும் வள்ளுவப் பெருந்தகையாரின் சிறப்பு போற்றி மகிழ் வதற்குரியதாகும்.

சேற்றுநிலமும் பகைப்புலமும்

போட்டியிட்டு அல்லது போரிட்டு வெல்லக்கூடிய செயல் எதுவாக இருந்தபோதிலும், ஒருவன் தன் வலி பெருகவும், மாற்றான் வலி குறையவும் வழி ஏதேனும் உண்டா என்று கண்டறிந்து, அந்த வழியை நாடி, வெற்றிபெற முயலவேண்டும்.

ஒரு செயலில் வெற்றிபெற ஏற்ற காலத்தையும், காலத்திற்கேற்ற இடத்தையும், இடத்திற்கேற்ற கருவியையும் தேர்ந்தெடுத்துக்கொண்டால் வெற்றி கிட்டுவது உறுதியாகும். அந்தக் காலமும், இடமும், கருவியும் மாற்றானுக்கு வலிவுக்குறையைத் தருமேயானால், அந்த நிலைமை இன்னும் எளிதான வெற்றியை உறுதியாகத் தரும்.

நாம் மிக வலிமையுடையவர்களாக இருந்து, அப்படி இப்படி அகலமுடியாத ஒரு நெருக்கடியான இடத்தில் சிக்கிக்கொள்வோமேயானால், நம்முடைய பகைவன் மிக வலிமை குன்றியவனாக இருந்த போதிலும், அவன் நம்மை மிக எளிதில் தோற்கடித்து விடமுடியும். அதுபோலவே பகைவன் மிக வலிமை பொருந்தியவனாக இருந்து, அவன் இக்கட்டான சூழ்நிலையில் சிக்கிக்கொள்வானே யானால், நாம் மிகக் குறைவான வலிவுடையவர்களாக இருந்த போதிலும் அவனை எளிதில் எதிர்த்து வீழ்த்திவிட முடியும்.

நாம் நம்முடைய வலிவைப் பெருக்கிக்கொள்வ திலே எவ்வளவு கண்ணுங்கருத்துமாக இருக்கிறோமோ அதுபோலவே மாற்றான் எப்பொழுது, எங்கு வலிகுன்றிக் காணப்படுகிறான் என்பதிலேயும் கண்ணுங்கருத்துமாக இருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மாற்றானை வெல்லக்கூடிய சூழ்நிலைகள் பலவற்றிலே, அவன் இடத்தால் வலிவிழந்து காணப் படும் சூழ்நிலையும் ஒன்றாகும். மாற்றான் இடத்தால் வலிவிழந்து காணப்படும் சூழ்நிலையை எதிர்நோக்கி இருக்க வேண்டியது, போர் தொடுக்கவோ போட்டி யிடவோ முனைவோரின் இன்றியமையாக் கடமை யாகிறது.

மிக வலிமை பொருந்திய ஒருவன், இடத்தால் இக்கட்டான ஒரு சூழ்நிலையில் மாட்டிக்கொள் வானேயானால், அவனை அந்தச் சூழ்நிலையில் வைத்து, மிகக் குறைந்த வலிமையுடைய மற்றொருவன், மிக எளிதாக முறியடித்துவிட முடியும் என்பதை வள்ளுவப் பெருந்தகையார், யானையையும், நரியையும் உவமைப்பொருள்களாக எடுத்துக்கொண்டு விளக்கிக் காட்டுகிறார்.

காலாழ் களரின் நரியடும் கண்அஞ்சா
வேலாள் முகத்த களிறு. (குறள் – 500)

(பாகருடைய சினப் பார்வைக்கும் அஞ்சாது, வேல்கொண்டெதிர்க்கும் ஆட்களைக் குத்தி எடுக்கும் யானையானது, அதன் கால்கள் அழுந்தி அமிழத்தக்க சேற்று நிலத்தில் அகப்பட்டுக்கொண்டால், அதனை நரி கொல்லும்.

காலாழ்களர் – கால் அமிழ்ந்திடக்கூடிய சேற்று நிலம்; களிறு – யானை.)

பாகனுக்கு அடங்காமல், பகைவரைக் கொம்பு களால் குத்தித் தூக்கிக்கொண்டு வரும் யானை யானது சேற்றில் அகப்பட்டுக்கொண்டால், நரியானது அந்த யானையை எதிர்த்து எப்படி எளிதாகக்

கொன்று விடுமோ, அதுபோலவே வலிமையுடையவன் இக்கட்டான இடத்தில் அகப் பட்டுக்கொண்டால், அவனை வலிமை குன்றியவன் எளிதில் எதிர்த்து அழித்துவிடமுடியும் என்பதை வள்ளுவப் பெருந் தகையார் உணர்த்துகிறார். இந்தக் குறளில், வலிமை யுடைய யானை சேற்றில் அகப்பட்டுக் கொண்டால், வலிமையற்ற நரி அதனைக் கொன்றுவிடும் என்னும் உவமானத்தை மட்டும் கூறி, உவமேயத்தைப் பெற வைக்கிறார் பொய்யாமொழியார்.

யானையை வலிமை பொருந்திய பகைவ னுக்கும், சேற்று நிலத்தை இக்கட்டான சூழ்நிலைக்கும், யானையின் கால்கள் அமிழ்வதை இக்கட்டான சூழ்நிலையில் பகைவன் மாட்டிக் கொள்வதற்கும், நரியை வலிமைக் குறைவோடு போரிடத் துணிபவருக்கும் உவமைகளாகக் கூறியுள்ளார் பொய்யில்புலவர்.

சேற்றில் அகப்பட்டுக்கொள்ளும் யானை, அதனை விட்டு வெளியேற முடியாமல் தவிப்பதற்குக் காரணம், அதன் வலிமை குறைந்த தன்மை அல்ல என்பதை உணர்த்தவே, பாகனுக்கே அடங்காத சினமுள்ள யானை என்றும், பகைவரைக் குத்திக் கொம்பிலே தூக்கக்கூடிய வலிமையுள்ள யானை என்றும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். பாகனுக்கும், பகைவர்க்கும் அஞ்சக்கூடிய யானையாக இருக்குமே யானால், அது சேற்றிலே அகப்பட்டு அகல முடியாமல் தவித்தாலும் தவிக்கக்கூடுமே என்ற பொருள் ஏற்பட்டுவிடக்கூடும் என்று கருதித்தான், வள்ளுவப் பெருந்தகையார் 'பாகனின் சினத்திற்கு அஞ்சாத யானை' என்றும், 'பகைவரைக் குத்தித் தூக்கக்கூடிய யானை' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

யானையையும், நரியையும் சாதாரண நிலத்தில் போரிடச் செய்து பார்த்தால், யானை தன் துதிக்கையால் நரியைத் தூக்கிச் சுழற்றித் தரையில் அடித்து ஒரு நொடியில் உயிரைப் போக்கிவிடும். ஆனால், யானையானது சேற்றில் அகப்பட்டுக்

கொண்டு ஆழப் பதிந்துவிடுமேயானால், அது அசைவற்றதாகி விடுகிறது. அந்த நிலையில் நரியானது தாவித்தாவி யானையைத் தாக்க வழி ஏற்பட்டு விடுகிறது. நரியின் கால்கள் மெலிந்து சிறியவையாக இருப்பதால், சேற்றில் துள்ளுவது அதற்கு எளிதானதாகும். எனவே சேற்று நிலம் யானைக்குத் தொல்லையும், நரிக்கு வசதியும் தருவதுபோல், தனக்கு வசதியும், பகைவனுக்குத் தொல்லையும் தரக்கூடிய இடத்தில் போட்டியிடவோ போரிடவோ துணியவேண்டும் என்பதாகும்.

வலிமை பொருந்திய யானையையும் வலிமை குன்றிய நரி, இடத்தைப் பொறுத்துக் கொல்ல முடியும் என்பதை உவமையாகக் காட்டி, வலிமை பொருந்திய மனிதனையும், வலிமை குன்றிய மனிதன் இடத்தைப் பொறுத்து வெல்ல முடியும் என்பதை உணர்த்தும் வள்ளுவப் பெருந்தகையாரின் திறன் போற்றுதற்குரியதாகும்.

கரையற்ற குளமும் சுற்றமற்ற மனிதனும்

உயிரினங்களிலே கூடிவாழும் தன்மையை மிகச் சிறப்பாகப் போற்றி வளர்த்துக் காப்பாற்றுவதற்கான அறிவும், ஆற்றலும், தகுதியும், திறமையும், பயிற்சியும், பழக்கமும் ஒருங்கே அமையப் பெற்ற இனம் ஒன்று உண்டு என்றால், அதுதான் மனித இனமாகும்.

கூடிவாழும் உயிரினங்களிலே தலைசிறந்து விளங்கும் இனம் மனித இனந்தான் என்றாலும், அந்தத் தன்மையை அந்த இனத்திற்கு ஊட்டிவருவது மனித இனத்திற்கே சிறப்பாக அமைந்துள்ள ஒழுக்கப் பண்புதான். ஒழுக்கத்தை 'மக்கட்பண்பு' என்றே வள்ளுவர் குறிப்பிடுகிறார். ஒழுக்கப் பண்பின் காரணமாகத்தான் மனிதன், கணவன்-மனைவி என்றும், தாய்-தந்தை என்றும், பாட்டன்-பாட்டி என்றும், பிள்ளை-பெண் என்றும், பேரன்-பேத்தி என்றும், உற்றார் என்றும் உறவினர் என்றும் பல்வேறு வகையான முறைகளை வகுத்துக்கொண்டு, அத்துணைப் பேரையும் உள்ளடக்கி அவர்கள் அனைவர்க்கும் சுற்றத்தார் என்று பெயரிட்டுக் கூடிவாழும் பண்பை நிலைநாட்டுகிறான். சுற்றத்தார் என்னும் உறவோடும், நினைப்போடும் ஒருவர் மற்றொருவரை அணுகும்போது, ஒருவிதமான அன்பு, அருள், நட்பு, ஈவு, இரக்கம், ஈகை, இன்பம் கண்டு மகிழும் மகிழ்ச்சி, துன்பம் கண்டு கலங்கும் கலக்கம் போன்றவை தம்மை அறியாமலே ஏற்பட்டு

விடுகின்றன. இன்பத்திலும், துன்பத்திலும் ஒன்றியிருந்து உள்ளன்பு காட்டும் தன்மையைத்தான் சுற்றத்தாரிடையே காணப்பட வேண்டிய சீரிய பண்பு என்று உலகோர் கூறுகின்றனர். பொருளற்ற பொழுதும் பழமையைக் கொண்டாடி, விடாது ஒழுகும் தன்மைதான் சுற்றத்தார் பண்பு என்றும், அந்தப் பண்பு இல்லை என்றால் அவர்கள் 'சுற்றத்தார்' என்று அழைக்கப்படுவதற்கோ கருதப்படுவதற்கோ தகுதி படைத்தவரல்லர் என்னும் கருத்துப்பட வள்ளுவரே வாய்மொழி பகர்ந்துள்ளார்.

வாழ்விலும், தாழ்விலும் ஒன்றியிருந்து துணை நிற்பவர்கள்தாம் சுற்றத்தார் ஆவார்கள், அத்தன்மை யற்றவர்கள் சுற்றத்தார் ஆகமாட்டார்கள் என்பதை 'வாக்குண்டாம்' ஆசிரியர் தெளிவுபடக் கூறியிருப் பதும் கூர்ந்து கவனித்தற்குரியதாகும். குளத்திலே நீர் நிறைந்திருக்கும் காலம்வரையில் உடன் இருந்து, பிறகு நீர்வற்றியவுடன் அந்த இடத்தைவிட்டு அகன்று போகிற நீர்ப்பறவைகள் போல்வார் உண்மையான சுற்றத்தார் ஆக மாட்டார் என்றும், நீர் நிறைந் திருக்கும் போது அந்த அளவுக்குத் தாமும் நிமிர்ந்து நின்று, நீர் குறைந்தால் தாமும் அதோடு சேர்ந்து குறைந்து, நீர்வறண்டு போனால் தாமும் அதோடு சேர்ந்து வறண்டு கிடக்கும் கொட்டி, தாமரை, நெய்தல் போன்ற கொடிகளைப் போல்வாரே உண்மையான சுற்றத்தார் ஆவார்கள் என்றும் அவ்வாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

மரம் பழுத்தால் வாவென்றழைக்காவிட்டாலும் வந்து பழத்தைத் தின்றுவிட்டுப் பழமில்லாத காலத்தில் சொல்லிக்கொள்ளாமல் பறந்து போய் விடுகிற வெளவாலைப் போன்றவர்கள் மெய்யான சுற்றத்தார் அல்லர். ஒருவர் வாழ்ந்த காலத்தில் அவரோடு கொண்டிருந்த நட்புணர்ச்சியையும் உள்ளன்பையும், அவர் தாழ்ந்த காலத்திலும் கொள்பவர்கள்தாம் மெய்யான சுற்றத்தார் ஆவர்.

அன்பு அற்றுப் போகாத சுற்றத்தார் ஒருவனைச் சூழ்ந்து வாழ்ந்துகொண்டிருந்தால், அவன் ஏதொன்றுக்கும் அஞ்ச வேண்டிய இன்றியமையாமை ஏற்படாது. தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத சூழ்நிலை அவனுக்கு ஏற்பட்டாலும் அவனைச் சுற்றியுள்ள நல்ல சுற்றத்தாரின் உள்ளன்பு அவனுடைய தேவைகளை அப்போதைக்கப்போது நிறைவேற்றி வைக்கும் என்பது ஒருதலை. உள்ளன்போடுகூடிய சுற்றத்தார் ஒருவனுக்கு இல்லை என்றால், அவன் வாழ்வு நலமும், வளமும் பெற்ற ஒரு வாழ்வாக அமையாது என்பது திண்ணம். இதனை வள்ளுவப் பெருந்தகையார், கரையில்லாத குளம் ஒன்றை உவமைப்பொருளாக எடுத்துக் கொண்டு விளக்கிக் காட்டுகிறார்.

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. (குறள் – 523)

(கலக்கப் படுவாரோடு கலப்பின்றி ஒழுகுவானது வாழ்க்கை, குளப்பரப்பு கரையில்லாமல் நீர் நிறைந்ததைப் போலாகும். அளவளாவு-கலந்து உறவாடுதல்; கோடு – கரை.)

கரையில்லாமல் இருக்கிற குளத்தில் சேரும் நீர் எவ்வாறு தங்காமல் வீணாகுமோ, அதுபோல, சுற்றத்தாரற்றவனிடத்தில் சேரும் வளமும் தங்காமல் வீணாகும் என்று உணர்த்துகிறார் பொய்யாமொழியார்.

கரையைச் சுற்றத்தார்க்கும், கரையில்லாத குளத்தைச் சுற்றத்தாரற்ற ஒருவனுக்கும், சேரும் நீரை சேரும் வளத்திற்கும், நீர் வீணாகும் தன்மையை வளம் வீணாகும் தன்மைக்கும் உவமைப்பொருள்களாகக் கூறுகிறார் வள்ளுவப் பெருந்தகையார்.

குளத்தின் வாழ்வை வகைப்படுத்திக் காட்டுவது கரைதான்; அதுபோல ஒருவனின் வாழ்வை வகைப்படுத்திக் காட்டுபவர் சுற்றத்தார் ஆவார்கள். குளத்திலே நிறையும் நீர் வீணாக வெளியே போகாமலும், வெளியார் தம் விருப்பப்படி நீரை அப்படியே வெளவிக்கொள்ளாமலும் காப்பாற்றுவது

கரைதான்; அதுபோல ஒருவனுக்கு உள்ளன்போடு கூடிய சுற்றத்தார் இருப்பார்களாயின் அவர்கள் அவனின் செல்வம் வீணாகக் கரைந்து போவதையும் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள், பிறர் வம்பாக வந்து விளைவுவதையும் கண்டுகொண்டிருக்க மாட்டார்கள். கரை எப்படிச் சேரும் நீரைக் காப்பாற்றுகிறதோ, அதுபோல சுற்றத்தார் சேரும் செல்வத்தைக் காப்பாற்றுவார்கள் என்பது பெறப் படும்.

குளம் என்றிருந்து அதில் நீர் இல்லை என்றால், அது வளமுடையது என்று கூற இயலாது; அதுபோல ஆள் என்று இருந்து அவனிடத்தில் செல்வம் இல்லை என்றால், அவனுடைய வாழ்வு வளமானது என்று கூறமுடியாது. ஒருவன் சுற்றத்தைத் தழுவி நிற்கா விட்டால், அவனது செல்வங் காக்கப்படாது என்பது பெறப்படும்.

கரையில்லாத குளமும் நீர் நிறையப் போவதில்லை. கலந்து பழகாத வஞ்சகச் சுற்றத்தானும் வாழப் போவதில்லை என்பது இக்குறளால் உணர்த்தப்படுவதாகும்.

'தன் இனம் தன்னைக் காக்கும், வேலி பயிரைக் காக்கும்' என்னும் பழமொழியும் இங்குக் கவனித்தற் குரியதாகும்.

காக்கையும் செல்வமுடையவரும்

உயிரினங்களின் மிக முக்கியமான இன்றியமை யாத் தேவை எது என்று கேட்டால், உணவுதான் என்பதை எவரும் விடையாகக் கூறவே செய்வர். உணவு இல்லாமல் உயிர் வாழ்க்கையில்லை. உணவுக்கும், உயிருக்கும் அவ்வளவு நெருங்கிய இன்றியமையாத் தொடர்பு இருக்கிறது. உயிரின மில்லாமல் உணவுப்பொருள் வாழமுடியும்; ஆனால், உணவுப்பொருள் இல்லாமல் உயிரினம் வாழமுடியாது. எனவே உணவைப் பொறுத்துதான் உயிர் வாழ்க்கை அமைந்திருக்கிறது என்பது தெள்ளத் தெளிய விளங்கும் ஒன்றாகும்.

உயிர் வாழ்க்கைக்கு உணவு எவ்வளவு இன்றியமையாது விளங்குவதாகும் என்பதைப் புறநானூற்றுப் புலவர் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று கூறியிருப்பது கவனிக்கத் தக்கதாகும்.

பொதுவாக உயிரினங்களை எடுத்துக் கொண்டால், ஒவ்வோர் உயிரும் அதனதன் உணவுத் தேவையை அந்தந்த உயிரே தேடிக்கொண்டு வாழ்வதைப் பார்க்கலாம். தாய் உயிர்கள், தாம் பெற்றெடுக்கும் குட்டிகள், கன்றுகள், குஞ்சுகள், பிள்ளைகள் ஆகியவற்றிற்கு, அவையெல்லாம் வளர்ச்சியுறும் ஒரு குறிப்பிட்ட காலம்வரையில் வேண்டுமானால் இரை கொடுத்தல், பால் கொடுத்தல், உணவு ஊட்டுதல் போன்ற செயல்களில்

ஈடுபடுகின்றன என்று சொல்லலாம். ஆனால், அந்தக் குறிப்பிட்ட காலம் முடிவடைந்த பின்னர், குஞ்சு களும் - பிள்ளைகளும் - கன்றுகளும் - குட்டிகளும் வளர்ந்துவிட்ட பிறகு, அவையெல்லாம் தாமே தமது உணவைத் தேடிக்கொள்ளும்படியான நிலைமையில் தான் விடப்படுகின்றன. ஆனால், மனித இனம் அறிவும், ஆற்றலும் பெற்றுக் கூடிவாழும் முறையைக் கற்றுக்கொண்டு, உடைமைகள் - தொழில்கள் - முறைகள்பற்றிய உரிமை கொண்டாடத் தொடங்கிய பின்னர், அறிவு, ஆற்றல், உடைமை, உரிமை ஆகியவை அற்றவர்கள் அவற்றை உடையவர்களிடம் உணவுப்பொருள்களைப் பெற்று வாழவேண்டிய வர்களாக ஆனார்கள். உடையவர்கள் இல்லாதவர் களுக்கு ஏதேனும் ஒரு முறைபற்றி ஈந்தாலொழிய மனித இனம் வாழ வழி ஏற்படாது என்ற நிலை ஏற்பட்டது. உடையவர்கள் அற்றவர்களிடம் உழைப்பையோ, உதவியையோ எதிர்பார்க்காமல், அவர்களும் உய்யவேண்டும் என்னும் பெரு நோக்கோடு ஈயும் ஈகைத்தன்மை கொள்ளவேண்டும் என்ற கருத்து ஆன்றோராலும், சான்றோராலும் வற்புறுத்திக் கூறப்படும் நிலைமையும் ஏற்பட்டது. அப்படிப்பட்ட ஈகைத் தன்மையைக் கொண்டவர்கள் உலகில் புகழையும், பெருமையையும், பூரிப்பையும் பெற்றனர்.

ஒருவன் பணம் மிகுதியாகப் படைத்திருப்பானே யானால், அதனால் ஏற்படக்கூடிய பலன் ஏதேனும் உண்டு என்றால், தன் சுற்றத்தார் அனைவரும் தன்னைச் சுற்றிக்கொண்டே இருக்கும்படி நடந்து கொள்ளுதல்தான் என்கிறார் வள்ளுவர். மனிதன் பலரோடும் கூடியிருந்து பலருடைய அன்பையும், ஆதரவையும் பெறும்போதுதான் பெருமகிழ்ச்சி யடையவும், இன்பம் பெறவும் வழி ஏற்படும். பிறரோடு கூடிப் பழகாமல், தனி மனிதனாய் நின்று வாழ்பவனின் வாழ்க்கையில் மகிழ்ச்சியையோ, இன்பத்தையோ காணவே முடியாது. எனவேதான் கூடி வாழும் நிலை தேவைப்படுகிறது. கூடி வாழும்

நிலையை ஏற்படுத்த வேண்டுமானால், உடையவன் அற்றவர்களை அணைத்துக்கொள்ள வேண்டியவனாகிறான். அப்படி அணைத்துக்கொள்ள வேண்டுமானால், அற்றவர்களைத் தன்பால் ஈர்க்கும் தன்மை, உடையவனுக்கு ஏற்படவேண்டும். அப்படி ஈர்க்கும் தன்மை ஏற்பட வேண்டுமானால், அவர்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் உணவு, உடை, உறையுள் போன்றவை வழங்கப்பட வேண்டும். எனவே வசதியுடையவன் பேராக்கத்தையும், பேராதரவையும், பெருமகிழ்ச்சியையும், பேரின்பத்தையும், பெற வேண்டுமானால், தன்னைச் சுற்றியுள்ள சுற்றத்தார் தன்னைச் சூழ்ந்து நிற்கும்படியான நிலையையும், தான் பெறும் பேற்றை அவர்களும் பெறும்படியான நிலைமையையும், அவர்கள் இன்புறுவது கண்டு தானும் இன்புறும் நிலைமையையும் பெறவேண்டும் என்பதாகிறது. இதனை வள்ளுவப் பெருந்தகையார், காக்கையினை உவமைப் பொருளாகக்கொண்டு விளக்கிக்காட்ட முற்படுகிறார்.

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ராார்க்கே உள. (குறள் – 527)

(காக்கை ஒருணவு பெற்றால் அதனை மறைக்காது தன் சுற்றம் எல்லாவற்றையும் அழைத்து உண்ணும்; அதுபோலச் செல்வம் பெற்றால் அதனைத் தன் சுற்றத்தார் எல்லாரோடும் நுகர்வார்க்கே ஆக்கம் உண்டாகும்.)

காக்கையானது ஓர் இரையைக் கண்டு பிடித்து விட்டால், அது எப்படித் தன் இனத்தைச் சார்ந்த காக்கைகள் பலவற்றையும் கரைந்து ஒன்று கூட்டி, அந்த இரையை அவற்றையெல்லாம் உண்ணும்படி செய்து தானும் உண்டு மகிழ்கிறதோ, அப்படியே ஒருவன் பெருஞ்செல்வம் பெற்றால், தன் இனத்தைச் சார்ந்த மக்கள் பலரையும் அழைத்து, அந்தச் செல்வத்தை அவர்களுக்குக் கொடுத்து அவர்களையெல்லாம் துய்த்து மகிழும்படிச் செய்வதோடு,

தானும் அந்தச் செல்வத்தைத் துய்த்து மகிழ வேண்டும் என்ற கருத்தைப் பொய்யாமொழியார் இக்குறள்மூலம் விளக்கிக் காட்டியுள்ளார்.

இரை கண்டுபிடிக்கும் காக்கையைப் பெருஞ் செல்வம் பெற்ற ஒருவனுக்கும், இரையைப் பெருஞ் செல்வத்திற்கும், உணவற்ற பிற காக்கைகளைச் செல்வமற்ற வறியவர்க்கும், கரைந்து ஒன்று கூட்டுவதை விரும்பி அழைப்பதற்கும், உண்ணுவதைத் துய்ப்பதற்கும் உவமைகளாக வள்ளுவர் கூறியிருக்கும் பாங்கு பாராட்டி மகிழ்வதற்குரியதாகும்.

பிற காக்கைகளோடு கூடியிருந்து கூச்சலிடுவ திலே காக்கை மகிழ்கிறது; அதுபோலப் பிற மக்களோடு கூடியிருந்து சிரித்துப் பேசி மகிழ்வதிலே செல்வர்கள் விருப்பங்கொள்ள வேண்டும் என்பதும், இனங்கூட்டிப் புசிப்பதிலே காக்கை பேரின்பங் கொள்கிறது; அதுபோல இனங்கூட்டி உண்பதிலே செல்வர் பேரின்பங் காணவேண்டும் என்பதும் பெறப்படுகின்ற சீரிய கருத்துகளாகும்.

"காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்" என்னும் தாயுமானவரின் வாக்கும் இங்குக் கூர்ந்து நோக்கத் தக்கதாகும்.

வள்ளுவப் பெருந்தகையார் எவ்வளவு எளிமை யான உவமையைக் கையாண்டு, மிகப் பெரிய பொருளை விளக்கிக் காட்டுகிறார் என்பதற்கு இந்தக் குறள் தக்க சான்று பகரும்.

அறிவும் புகழும்

ஐம்புலன்களினாலும் நுகரப் படுவனவற்றை மனத்திலே பதியவைத்து, அவைபற்றி மேலும் மேலும் சிந்தித்து, அவற்றையும் மனத்திலே பதியவைத்து, எல்லாவற்றையும் நீண்ட பெருங்காலத்திற்கு நினைவு படுத்திக்கொள்ளும் ஆற்றல், மற்ற எல்லா உயிரினங் களைக் காட்டிலும் மக்களினத்திற்கே மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது.

எவனொருவன் ஆழ்ந்த நினைவாற்றல் படைத்த வனாக விளங்குகிறானோ, அவன் சிறந்த பேரறிவாளி யாக விளங்குவதைப் பார்க்கிறோம். எந்தெந்த துறைகளிலே மிகவான நினைவாற்றலை மக்கள் பெற்றிருக்கிறார்களோ, அந்தந்த துறைகளில் அவரவர்கள் மிகச் சிறந்த வல்லுநர்களாகத் திகழ்கிறார்கள். எனவே மனிதனை மனிதனாக ஆக்குவதற்கு நினைவாற்றல் பெருந் துணைபுரிகின்ற ஒன்று என்பது தெளிவாகும். நினைவாற்றலை இழந்தவன் அறிவுக் குறையுடையவன் என்று கருதப் படுகிறான்; நினைவாற்றலை மறந்தவன் விலங்கினத் திற்குச் சமமாகக் கருதப்படுகிறான்; நினைவாற்றல் அற்றவன் மரத்திற்குச் சமமாகக் கருதப்படுகிறான்.

வாழ்க்கையின் குறிக்கோள்களிலே புகழோடு வாழ்தல் என்பது மிகச்சிறந்த ஒன்று ஆகும். அதனால்தான் வள்ளுவப் பெருந்தகையார்கூட "புகழோடு தோன்றுக" என்றும், "இசைபட வாழ்தல் உயிர்க்கு ஊதியம்" என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனிதனைப் புகழுடையவனாக ஆக்குவதற்கு அறிவும், ஆற்றலும், பண்பும் முக்கிய காரணங்களாகக் காட்சி யளிக்கின்றன. அறிவு, ஆற்றல், பண்பு ஆகிய மூன்றிலே ஆற்றலையும், பண்பையும் வெளிப்படுத்திக் காட்ட அறிவுதான் அடிப்படைக் காரணமாக இருக்கிறது. எனவே ஒருவன் சிறந்த புகழுடைய வனாகத் திகழ, அவன் சிறந்த அறிவுடையவனாக விளங்க வேண்டும். அவன் சிறந்த அறிவுடையவனாக விளங்கவேண்டுமானால், அவன் சிறந்த நினைவாற்றல் உடையவனாகத் திகழவேண்டும். ஆகவே சிறந்த நினைவாற்றல், சிறந்த புகழிற்குக் காரணமாகிறது என்று தெரியவரும். சிறந்த புகழுடையவன் சிறந்த நினைவாற்றல் உடையவனாக இருக்கவேண்டும் என்பது தானே பெறப்படும்.

நினைவாற்றல் இல்லை என்றால் அறிவு இல்லை; அறிவு இல்லை என்றால் புகழ் இல்லை. நினைவினை மறந்த மறதி ஏற்படுமேயானால், அறிவு குறையும்; அறிவு குறைந்தால், புகழ் மங்கும். எனவே நினைவாற்றல் புகழை ஓங்கச் செய்தற்குக் காரணமாகவும், மறதி புகழை மங்கச் செய்வதற்குக் காரணமாகவும் இருப்பதை உணரலாம்.

நினைவாற்றலை ஒருவன் அடியோடு கொண்டிராமல் இருந்திருந்தால், அவனுக்கு அடியோடு புகழும் ஏற்பட வழி பிறக்காது. நினைவாற்றலைப் பெற்று, அதன் மூலம் புகழையும் பெற்றுத் திகழும் ஒருவன், அடிக்கடி மறதிக்கு உள்ளாகுவானேயானால், அவனுடைய புகழும் சிறிது சிறிதாக மங்கத் தொடங்கும். ஒருவனுடைய புகழை அவனது மறதி கெடுக்கும் என்னும் கருத்தைக் கூற வந்த வள்ளுவப் பெருந்தகையார், அறிவு, வறுமை ஆகிய இரண்டையும் உவமைப்பொருள்களாகக் கொண்டு விளக்கிக் காட்ட முற்படுகிறார்.

பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக் கொன்றாங்கு. (குறள் – 532)

(நிலைத்த வறுமையானது அறிவினைக் கெடுப் பதைப்போல, மனச்சோர்வான மறதி புகழினைக் கெடுக்கும். பொச்சாப்பு - மனச்சோர்வு; மறதி; இகழ்ச்சி. நிச்ச நிரப்பு - நித்திய வறுமை; நாடொறும் இரந்து வருந்தித் தன் வயிறு நிறைத்தல்; நிரப்பு - வறுமை.)

வறுமையானது எப்படி அறிவைக் கெடுக்குமோ, அப்படியே மனச்சோர்வான மறதியானது, புகழைக் கெடுக்கும் என்று பொய்யாமொழியார் இக்குறளின் மூலம் உணர்த்துகிறார்.

அறிவைப் புகழுக்கும், வறுமையை மறதிக்கும், வறுமையால் அறிவு கெடுவதை மறதியால் புகழ் கெடுவதற்கும் உவமைகளாகக் கூறியிருக்கிறார் வள்ளுவப் பேராசிரியர்.

எளிதாகப் புரியக்கூடிய -அறியக்கூடிய - காணக் கூடிய உவமையைக் கூறி எளிதாகப் புரியமுடியாத-காணமுடியாத கருத்தை விளக்கவே பொதுவாகப் புலவர் பெருமக்கள் முயலுவார்கள். உவமானத்தைக் கொண்டே உவமேயத்தை அறியக்கூடிய நிலை ஏற்படும். உவமேயத்தைக்கொண்டு உவமானத்தை அறியக்கூடிய நிலை பொதுவாக ஏற்படாது. ஆனால், வள்ளுவப் பெருந்தகையார் விளக்கிக் காட்டப்பட வேண்டிய இரண்டு கருத்துகளை எடுத்துக் கொண்டு, அவையே ஒன்றிற்கு ஒன்று உவமைகளாக விளங்கக் கூடிய வகையில் இந்தக் குறளில் வைத்துள்ளார்.

இந்தக் குறளில் 'வறுமையால் அறிவு கெடும்' என்பதைக் கூறி, அதுபோல 'மறதியால் புகழ் கெடும்' என்பதை விளக்கிக் காட்டுகிறார். 'மறதியால் புகழ் எவ்வாறு கெடுமோ அவ்வாறே வறுமையால் அறிவு கெடும்' என்றும் விளக்கிக்காட்ட இக்குறள் பயன் படுவதாகும்.

வறுமையிலே உழலுபவன் வயிற்றுப்பாட்டைக் கவனிக்க ஓயாமல், ஒழியாமல் அலைந்து திரிய வேண்டியவனாக இருப்பான். அறிவு விளக்கங்காண

அவனுக்கு நேரம் இராது. எனவேதான் வறுமை அறிவைக் கெடுக்கும் என்று வள்ளுவர் உணர்த்தி, அதனை உவமைப்பொருளாகக் கூறினார்.

பசி வந்திடப் பறக்கும் பத்தினுள் அறிவுடை மையும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். "என் அறிவு கெடநின்ற நல்கூர்மையே" (நல்கூர்மை – வறுமை) என்னும் புறநானூற்று (266)ப் பாடலடி கூர்ந்து கவனிக்கத்தக்கதாகும்!

மறுவற நன்குணர்க

பரிமேலழகர், குறட்பாக்களின் உண்மைப் பொருள் விளக்கத்திற்கு எந்த வகையிலும் பொருந்தாத முறையில் சிற்சில கருத்துகளை ஆங்காங்குக் கூறியிருந்தாலும், இலக்கிய நயம் மிளிரப், பொருள் ஆழம் தோன்றக், காரணகாரிய விளக்கம் ஒளிர, இலக்கண நுட்பம் தெளிவுறப் பல்வேறு குறட்பாக்களைப் பொறுத்து அவர் எடுத்துக் கூறியுள்ள கருத்துகள் மிகவும் சிறப்புடையனவாகும். பரிமேலழகரின் உரைக்கு முன்னால், சில பழம்பெரும் உரைகள்கூட நிற்க முடியாமல் போய்விட்டன. அவற்றில் சில மறைந்தொழிந்தன: சில வழக்காறு அற்றுப் போயின: சில பெருமை பெற முடியாமல் நிற்கின்றன.

என்றாலும், மதியின் கண் மறு இருப்பது போல, பரிமேலழகரின் வடமொழி நூலாரின் கொள்கைப்பற்றும், வைணவ சமயப் பற்றும், வர்ணாச்சிரம சனாதன தருமப்பற்றும் சார்ந்த கருத்துகள், வள்ளுவர் வற்புறுத்திய சான்றோர் மரபுகளுக்கும், பொதுப்பண்பாட்டியலுக்கும், உலகியலுக்கும், உண்மைவியலுக்கும், பொது அறத்திற்கும் முரண்பாடான முறையில், அவரால், உரையின் சிற்சில பகுதிகளில், வேண்டுமென்றே திணிக்கப்பட்டிருக்கின்றன என்பது மட்டும் உண்மை.

மேற்கண்ட காரணம் பற்றித்தான் பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை அவர்கள், "வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்கு உணர" வேண்டும் என்று வலியுறுத்தினார்.

– நாவலர்

24

மழையும் செங்கோலும்

மன்னன் ஆளக் கடமைப்பட்டவன், குடிமக்கள் அவனுக்கு அடங்கி நடக்கக் கடமைப்பட்டவர்கள் என்பதைக் காட்டும் அறிகுறிதான் மன்னனின் கையில் ஏந்தி இருக்கும் கோலாகும். மன்னனின் ஆட்சி நல்ல ஆட்சியாக அமையுமேயானால், அந்தத் தன்மையை அவன் ஏந்தியிருக்கும் கோலின்மீது ஏற்றி, அதனைச் 'செங்கோல்' என்று அழைப்பர் உலகத்தார்; அவனது ஆட்சி தீய ஆட்சியாக விளங்குமேயானால், அவன் ஏந்தியிருக்கும் கோலைக் 'கொடுங்கோல்' என்று கூறுவர்.

மன்னன் குடிமக்களுக்கு ஏற்படும் தீமைகளையும், துன்பங்களையும், கொடுமைகளையும், வறுமையையும், வாட்டத்தையும், பிணியையும் போக்கி, நன்மைகளையும், இன்பங்களையும், நலங்களையும், வளத்தையும், வாழ்வையும் உருவாக்கித் தரவேண்டிய பொறுப்புடையவனாவான். இந்தக் காரணம்பற்றித்தான் குடிமக்கள் தம் நல்வாழ்வுக்காக மன்னனின் செங்கோலாட்சியை நம்பி வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

மன்னனுக்கும், குடிமக்களுக்கும் இருக்கும் தொடர்பை வள்ளுவப் பெருந்தகையார் மிகவும் உற்றுக் கவனிக்கிறார். மன்னனின் செங்கோலை முழுக்க முழுக்க நம்பிக் குடிமக்கள் வாழும் தன்மையை உணர்கிறார். மற்றொரு பக்கம் தம் நல்வாழ்வுக்காக மழையை நம்பி வாழும் உயிர்களையும் பார்க்கிறார். இரண்டு நிலைமைகளும்

ஒரே தன்மையனவாக அமைந்திருப்பதைக் காண்கிறார். மன்னனின் செங்கோலை நம்பி குடிமக்கள் வாழ்வதற்கு, மழையை நம்பி உயிர்கள் வாழ்வதை உவமையாகக் கூறுகிறார் வள்ளுவப் பேராசிரியர்.

வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி. (குறள் – 542)

(உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் மழையை நோக்கி வாழும்; அதுபோலக் குடிகள் அரசனது செங்கோலை நம்பி வாழும்.)

உலகத்து உயிர்களெல்லாம் எவ்வாறு வான் மழையை எதிர்பார்த்து வாழ்கின்றனவோ, அவ்வாறே குடிமக்களெல்லாம் அரசனது செங்கோலை நம்பி வாழ்கின்றனர் என்று வள்ளுவப் பெருந்தகையார் விளக்கிக் காட்டும் பாங்கு படித்துப் படித்து மகிழ்வதற்குரியதாகும்.

வான் மழையை அரசனது செங்கோலுக்கும், உலகத்து உயிர்களை நாட்டுக் குடிமக்களுக்கும் உவமைப் பொருள்களாக்கி விளக்கிக்காட்டுகிறார் ஆசிரியர்.

உயிர்களையெல்லாம் வாழவைக்கும் தன்மை மழைக்கு உண்டு; அதுபோல குடிமக்களையெல்லாம் வாழ வைக்கும் தன்மை அரசனுக்கு உண்டு. கோல் என்பது அரசனை உணர்த்தி நிற்பதாகும். மழை யினால் உயிரினங்களுக்கு நன்மையும் உண்டு, தீமையும் உண்டு; அதுபோல அரசனால் குடிமக்களுக்கு நன்மையும் ஏற்படும், தீமையும் ஏற்படும். உயிரினங்கள் எதிர்பார்க்கும் பெய்ய வேண்டிய மழை பெய்தால், அதனால் உயிரினங் களுக்கு நன்மை ஏற்படும்; எதிர்பார்க்காத வகையில் மழையானது காலந்தவறிப் பெய்தாலும், அளவுக்கு மீறிப் பெருமழை பெய்தாலும் அவற்றால் உயிரினங் களுக்குத் தீங்குதான் ஏற்படும். அதுபோல, குடிமக்கள் எதிர்பார்க்கும் செங்கோலாட்சி நடைபெற்றால், அதனால் மக்களுக்கு நன்மை ஏற்படும்; செங்கோலை

ஒச்சத் தவறினாலும், செங்கோல் அளவை மீறிய கொடுங்கோலாட்சி நடைபெற்றாலும், அவற்றால் குடிமக்களுக்குத் தீங்குதான் ஏற்படும். மழை எப்படி நன்மையும், தீமையும் செய்யக்கூடியதோ, அப்படியே அரசன் ஏந்தியிருக்கிற கோலும் நன்மையும், தீமையும் செய்யக்கூடியது. நன்மை செய்யும் செங்கோலைக் குடிமக்களும் எதிர்பார்த்திருக்கின்றனர்.

உயிரினங்களிடையே விருப்பு வெறுப்புக் காட்டாமல், உயர்வு தாழ்வு கற்பிக்காமல் எல்லா உயிரினங்களுக்கும் சேர்த்து எப்படி மழை ஒரே சீராகப் பெய்கிறதோ, அப்படியே குடிமக்களிடையே விருப்பு வெறுப்புக் காட்டாமல், உயர்வு தாழ்வு கற்பிக்காமல், எல்லாக் குடிமக்களையும் ஒரே சீராகப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு செங்கோலுக்கு உண்டு என்பதும் உணர்த்தப்படுகிறது.

மழை இல்லாவிட்டால் உயிரினங்கள் சாகும்; அதுபோல செங்கோலாட்சி நடைபெறாவிட்டால், குடிமக்கள் மடிவர்.

நல்ல மழை எப்படி உலகத்திற்கெல்லாம் நன்மை செய்கின்ற ஒன்றோ, அப்படியே செங்கோலும் குடிமக்களுக்கெல்லாம் நன்மை புரிந்து, அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பது இக்குறளால் வற்புறுத்தப்படும் சீரிய கருத்தாகும்.

களை எடுத்தலும் கொடியாரைத் தண்டித்தலும்

உலகிலுள்ள பொருள்களையெல்லாம் எடுத்துக் கொண்டால், அவற்றில் நன்மை பயப்பவை, தீமை பயப்பவை என இரு பெருங்கூறுகள் இருப்பதைக் காண்கிறோம்.

ஒரே வகையான பொருள்களை எடுத்துக் கொண்டாலும், அவை நன்மை பயப்பவை, தீமை பயப்பவை எனப் பாகுபடுத்தக்கூடியனவாக இருப்பதைப் பார்க்கிறோம். எடுத்துக்காட்டாக மாங்காய்களை எடுத்துக்கொள்வோம், அவற்றில் பழமாகக் கனிந்து இருப்பனவற்றை நன்மை பயப்பவை என்கிறோம்; அவற்றில் சொத்தையாக மாறியவற்றைத் தீமை பயப்பவை என்கிறோம்.

ஒரு பொருளைத் தன்னந்தனியாக எடுத்துக் கொண்டாலும் அதில் நன்மையும், தீமையும் கலந்து இருக்கின்றன. ஒரு மாம்பழத்தை எடுத்துக் கொண்டால், அதன் மேல் தோல் கசப்பைத் தரக்கூடிய தீமையான ஒன்றாக விளங்குவதைப் பார்க்கிறோம்; அதன் உள்ளே உள்ள பழம் இனிப்பைத் தரக்கூடிய நன்மையான ஒன்றாக விளங்குவதைப் பார்க்கிறோம்.

எனவே எந்தப் பொருளானாலும் அல்லது எவ்விதப் பொருள்களானாலும் அவற்றிலுள்ள தீமை களை அகற்றுவதிலும், நன்மைகளைப் பெறுவதிலும்

மிகவும் நாட்டம் செலுத்துகிறோம். தீமைகளை எங்கு கண்டாலும் அவற்றை அறவே அகற்றுவதிலும், நன்மைகளை எங்கு கண்டாலும் அவற்றை வளர்ப்பதி லுமே நல்லோர் அனைவரும் மிக்க கவனம் செலுத்துகிறார்கள்.

மேலும் உலகியலில் பார்த்தால் நன்மைகள் தீமைகளை வெல்லுவதைக் காட்டிலும், தீமைகள் நன்மைகளை வெல்லுவதைத்தான் எளிதாகவும், இயல்பாகவும் எங்கணும் காணமுடிகிறது. எனவேதான் தீமைகளைப் பொருட்படுத்தாமல், நன்மைகளை மட்டுமே பொருட்படுத்தி வாழ முடிவ தில்லை. தீமைகளை அகற்றியும், ஒழித்தும், அழித்தும் நன்மைகளுக்கு இடம் அளித்தால்தான், நன்மைகள் காப்பாற்றப்பட முடியும். எதிர்த்தொழிக்கப்பட வேண்டியது தீமையாகவும், விரும்பிக் காப்பாற்றப்பட வேண்டியது நன்மையாகவும் இருக்கின்றன.

பொருள்களிலும், பிற உயிரினங்களிலும் எவ்வாறு நல்லவை, தீயவை என இரு பெரும் பிரிவுகள் காணப்படுகின்றனவோ, அவ்வாறே மனிதர்களிலும் நல்லவர், தீயவர் என இரு பெரும் பிரிவினர் காணப்படுகின்றனர்.

பொருள்களிலும், பிற உயிரினங்களிலும் நல்லவை வளர்க்கப்படவும், காப்பாற்றப்படவும் வேண்டு மானால், எப்படி தீயவை அகற்றப்படவும், ஒழிக்கப்படவும் வேண்டியனவாக இருக்கின்றனவோ, அப்படியே மக்களில் நல்லவர்கள் காப்பாற்றப்பட வேண்டுமானால், தீயவர்கள் ஒழிக்கப்பட வேண்டிய வர்களாக இருக்கிறார்கள். இந்த அடிப்படையில் நல்லவர்களைக் காப்பாற்ற வேண்டிய கடப்பாடுடைய அரசன், தீயவர்களைத் தண்டித்து ஒழிக்கவும் கடப்பாடுடையவனாக இருக்கிறான்.

தீயவர்களைக் கொடியவர் என்கிறோம். பொதுவாகத் தீயிடுவார், நஞ்சிடுவார், கருவிகளால் கொலை செய்வார், கொள்ளையிடுவார், வழிப்பறி நடத்துவோர், சூறையிடுவார், பிறர் பொருளை

வவ்வுவார் போன்றவர்கள் மிகக் கொடியவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட கொடியவர்களுக்குக் கொலைத் தண்டனை கொடுத்து, அவர்களை அழித்துவிட்டு, நல்லவர்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை நாடாளும் அரசனுக்கு இருக்கிறது.

அரசனின் இத்தகைய கடமையை உணர்கிற வள்ளுவப் பெருந்தகையார் கண்களுக்கு, வயலில் நடைபெறும் காட்சி ஒன்று படுகிறது. வயலிலே உள்ள பயிர்களை வளர்ப்பதிலே நாட்டங்கொண்டுள்ள உழவன், அந்தப் பயிர்களுக்கிடையே பரவிக் கிடக்கும் களைகளை வேரோடு பிடுங்கி எறிவதைப் பார்க்கிறார் வள்ளுவர். அரசனுடைய செயலும், உழவனின் செயலும் ஒத்து இருப்பதை அறிகிறார். எல்லோரும் எளிதில் அறியக்கூடிய உழவனின் செயலை உவமையாகக்கொண்டு, அரசனின் செயலை உலகுக்கு உணர்த்த முற்படுகிறார் வள்ளுவப் பேராசிரியர்.

கொலையின் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர். (குறள் – 550)

(அரசன் கொடியவர்களைக் கொலைத் தண்டனையால் தண்டித்துத் தக்கவர்களைக் காப்பாற்றுதல், உழவன் களையைக் களைந்து பைங்கூழைக் காத்தலோடு ஒக்கும்.

ஒறுத்தல் – தண்டித்தல்; பைங்கூழ் – பசிய பயிர்; களைகட்டல் – களையைக் களைந்து காத்தல்.)

உழவன் எப்படிக் களையைக் களைந்து எடுத்துப் பயிர்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறானோ, அதுபோல அரசன் கொடியவர்களைத் தண்டித்து, நல்லவர்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறான் என்பதை ஆசிரியர் உணர்த்துகிறார்.

இந்தக் குறளில் உழவனை அரசனுக்கும், களையைத் தீயவர்களுக்கும், பைங்கூழை நல்லவர்களுக்கும், களையெடுத்தலைக் கொலைத் தண்டனை

விதித்தலுக்கும் உவமைப்பொருள்களாகக் கூறப் பட்டிருக்கின்றன.

வயலையும், வயலில் விளையும் பயிர்களையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்புடையவன் உழவன்; அதுபோல நாட்டையும், நாட்டில் வாழும் மக்களை யும் காப்பாற்ற வேண்டிய பொறுப்புடையவன் அரசன் ஆகிறான். உழவன் களையை அகற்றிப் பயிரைக் காப்பாற்றுகிறான்; அதுபோல அரசன் கொடியவரை அழித்து, நல்லவர்களைக் காப்பாற்றுகிறான். களை தானும் பயன்படாது, பயன்படும் பயிரையும் வளரவிடாது; அதுபோல தீயவர்கள் தாமும் பயன்படமாட்டார்கள், பயன்படும் நல்லவர்களையும் வாழவிடமாட்டார்கள். களை எதிர்பாராத வகையில் தாமாக ஆங்காங்கு தோன்றும்; அதுபோல கொடியவர்கள் எதிர்பாராத வகையில் ஆங்காங்கு தோன்றுவார்கள். களை கண்ணில்பட்டதும் உடனடியாக அகற்றப்பட வேண்டிய ஒன்று; அதுபோலக் கொடியவர்கள் கண்ணில் பட்ட உடனேயே அகற்றப்பட வேண்டியவர்கள். பலன்தரும் பைங்கூழ் எப்படி விரும்பிக் காப்பாற்றப்பட வேண்டிய ஒன்றோ, அப்படியே நல்லவர்கள் விரும்பிக் காப்பாற்றப்பட வேண்டியவர்களாவார்கள்.

வேந்தன் கொடியவர்களுக்குக் கொலைத் தண்டனை விதிக்கும் செயலுக்கு, உழவன் களையைப் பிடுங்கி எறியும் செயலை உவமையாகக் கூறியிருக்கும் நயப்பாடு வியந்து வியந்து பாராட்டுதற்குரியதாகும்.

26

நெடுவேலனும் கொடுங்கோலனும்

ஒரு குடும்பத்தை நடத்திச் செல்கிற தனி மனிதனுக்கு வருவாய்க்கான வழிகளும், செலவுக்கான வகைகளும் இருப்பனபோலவே, ஒரு நாட்டின் அரசை இயற்றிச் செல்கிற அரசனுக்கும் வருவாய்க் கான வழிகளும், செலவுக்கான வகைகளும் இருக்க வேண்டியது இயற்கையானதும், இன்றியமையாததும் ஆகும்.

ஒரு குடும்பத்தின் கடமை, வரவுக்கேற்ற செலவு செய்ய வேண்டும் என்பதாக இருக்கும் என்று கொண்டால், ஓர் அரசின் கடமை செலவுக்கேற்ற வரவினைப் பெறுவதாக இருக்கும்.

ஓர் அரசன் தன் அரசை நடத்திச் செல்வதற்குப் பண்டைக் காலங்களில் பல்வேறு வழிகள் வகுக்கப்பட்டிருந்தன. மக்களிடம் முறைப்படி விதித்துப் பெறும் வரிகளும், அடங்கிய வேற்றரசர்கள் தரும் இறைப்பொருளும், அரசின் இயங்கும், இயங்காச் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருவாய்ப் பொருளும், நிலத்திலிருந்து பெறும் புதை பொருளும், நிலத்திலிருந்து தோண்டி எடுக்கப்பெறும் கனிப் பொருளும், மாற்றரசர் நாடுகளை வென்று சூறையாடிப் பெறும் சூறைப்பொருளும், மக்கள் அன்புடன் செலுத்தும் காணிக்கைப் பொருளும் அரசனுக்கு வருவாய்களாக அமைந்தன. செலவுக் கேற்ற வரவைப் பெற வேண்டும் என்பது அரசனது கடமையாக இருந்தபோதிலும், வரவுக்கேற்ற செலவு செய்ய வேண்டும் என்பது அவனது குறிக்கோளாகவும் இருக்க வேண்டும்.

சில வேளைகளில் அரசன் வரவினங்களுக்கு மேல் செலவினங்களைப் பெருக்கிக்கொண்டு, அந்தச் செலவினங்களை ஈடுகட்ட வழி கிடைக்காமல், வருவாயை எப்படியேனும் பெருக்கிக்கொள்ள விரும்புகிறான். அதற்கு அவனுக்கு எளிதாகவும், தொல்லையில்லாமலும், பெருமுயற்சி எடுக்காமலும் தேவையான பணத்தைப் பெறுவதற்கு ஏற்ற வழியாகப் புலப்படுவது, குடிமக்களிடம் இருக்கும் பணத்தைப் பிடுங்குவதுதான் என்னும் முடிவுக்கு வந்து விடுகிறான். மக்களிடம் முறைப்படி வாங்கும் வரிகளோடுகூட, முறையில்லாத வழியில் மிகவான பணத்தைத் தரவேண்டும் என்று மக்களை வற்புறுத்தி, அப்படித் தர மறுத்தால் தண்டிப்பேன் என்று அச்சுறுத்திப் பணத்தைப் பெற முயலுகிறான். அரசனின் அச்சுறுத்தலுக்கும், தண்டனைக்கும் அஞ்சும் மக்கள் தம்மைக் கொடுமைகளிலிருந்து காப்பாற்றிக்கொள்ள அரசன் கேட்ட பொருளை எடுத்துத் தந்து விடுகின்றனர்.

அரசன் தன் கொடுங்கோலைப் பயன்படுத்தி மக்களிடம் வரி வாங்குவதைக் கண்ணுறும் வள்ளுவப் பெருந்தகையாருக்கு வேறொரு காட்சி நினைவுக்கு வருகிறது. வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் நெடுவழியின் இடையில் நின்று, தம் கையில் ஏந்தியுள்ள நெடு வேலால் போவோர் வருவோரை மிரட்டி, அவர்தம் மடியிலுள்ள பொருள்களைப் பறித்துக்கொள்ளும் காட்சி வள்ளுவரின் நினைவுக்கு வருகிறது. வேலின் உதவிகொண்டு வழிப்பறி பறிக்கும் கொள்ளைக்காரனுக்கும், கொடுங்கோலின் உதவி கொண்டு மக்களை வாட்டி வரிவாங்கும் அரசனுக்கும் வேறுபாடு இல்லை என்ற முடிவுக்கு வள்ளுவர் வருகிறார். அந்தக் கருத்தைக் குறள்மூலம் வெளிப்படுத்துகிறார்.

வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு. (குறள் – 552)

(அரசன் கொடுங்கோல்கொண்டு குடிமக்களிடம் வரி வாங்குதல், நடுக்காட்டில் வேல் ஏந்தி நிற்கும்

வழிப்பறிக் கள்வன் வழிப்போவாரைப் பார்த்து உன் கைப்பொருளைத் தா என்று கேட்பது போலாகும். இரவு – வரி.)

வழிப்பறிக் கள்வன் எப்படி வேலின் உதவி கொண்டு வழிப்பறிக் கொள்ளையடிக்கிறானோ, அப்படியே அரசனும் கொடுங்கோலின் உதவி கொண்டு வரி வாங்குவதும் ஆகும் என்று வள்ளுவப் பேராசிரியர் இக்குறளில் குறிப்பிடுகிறார்.

அரசனுக்கு வழிப்பறிக் கொள்ளைக்காரனை யும், கொடுங்கோலுக்கு வேலையும், மக்களுக்கு வழிப் போவோரையும், நாட்டுக்குக் காட்டையும், வரிக்கு வழிப்பறிக் கொள்ளைப்பொருளையும் உவமைப் பொருள்களாகக் கூறுகிறார் ஆசிரியர்.

வழிப்பறிக் கொள்ளைக்காரன் அன்பின் உதவியை, அல்லது அறிவின் உதவியை அல்லது நீதியின் உதவியைப் பெறாமல், எப்படி வேலின் உதவியைப் பெறுகிறானோ, அது போலவே அரசன் அன்பு, அறிவு, நீதி ஆகியவற்றின் உதவியைப் பெறாமல், கொடுங்கோலின் உதவியைப் பெறுகிறான். வேல் எப்படிக் கொடுமைப்படுத்தும் பொருளோ, அப்படியே கொடுங்கோலும் கொடுமைப்படுத்தும் பொருளாகும். வழிப்போவோர் எப்படிப் பாதுகாப்பற்ற நிலையில் செல்வார்களோ அப்படியே குடிமக்களும் பாதுகாப்பற்ற நிலையில் வாழ்கிறார்கள். வழிப்போவோர் எப்படி உயிருக்கு அஞ்சிப் பணத்தை வழங்குகிறார்களோ, அப்படி குடிமக்களும் உயிருக்கு அஞ்சி வரிப்பணத்தை வழங்குகிறார்கள். வழிப்பறிப் பொருள் எப்படி விருப்பத்திற்கு மாறாகக் கையை விட்டுப் போகின்றதோ, அப்படியே கொடு வரியும் விருப்பத்திற்கு மாறாகக் கையைவிட்டுப் போகின்ற ஒன்றாகும்.

கொடுங்கோலரசனுக்கு வழிப்பறிக் கொள்ளைக் காரனை உவமையாகச் சொல்லிப் பொருளை விளக்கிக் காட்டும் வள்ளுவரின் திறம் போற்றிப் பாராட்டி மகிழ்வதற்குரியதாகும்.

மழைத்துளியும் அரசனின் அளியும்

குடிமக்களின் இன்னல்களைப் போக்கி அவர்களின் இன்பத்தைப் பெருக்கி, தீமைகளை அகற்றி, நன்மைகளைப் பெருக்கி, வாட்டத்தைப் போக்கி, வாழ்வை அளித்து அவர்களைக் காப்பாற்ற வேண்டிய கடப்பாடு நாட்டை ஆளும் அரசனைச் சேர்ந்ததாகிறது. அதாவது வேந்தனின் அளியினால் தான், அவனது நாட்டின் குடிமக்கள் வாழவேண்டிய வர்களாகிறார்கள். வேந்தன் அருள்செய்தல் இல்லாமற் போகுமேயானால், அதன் காரணமாகக் குடிமக்கள் வாட்டமுற்று, அழிந்து, பின்னர் மறைந்துபோக நேரிடும்.

தன்னிடத்து நேரிடையாகத் தொடர்பு இல்லாதார் மாட்டும் அன்புகாட்டும் தன்மையைத் தான் அருள் செய்தல் என்று பொதுவாகச் சான்றோர்கள் கூறுகின்றனர். அத்தகைய அருள்புரியும் தன்மைதான், எல்லாக் குடிமக்களைக் காக்கும் பொறுப்பினை ஏற்றிருக்கிற அரசனிடம் காணப்பட வேண்டிய இன்றியமையாத பண்பாகும். அந்தப் பண்பாகிய அருளும் தன்மை அரசனிடத்து இல்லாது போகுமேயானால், குடிமக்கள் அரசனிடத்தில் எதிர்பார்ப்பது கிட்டாமற் போகும். அரசனது அளி கிட்டாமற் போகுமேயானால், மழையில்லாமல் வாடும் பயிரைப்போல, குடிமக்கள் வாட்டமுற வேண்டிவரும். அந்த வாட்டம் நாளடைவில் அழிவில் கொண்டுபோய்விடும்.

அரசனின் அளி இல்லாமையினால் வாடிடும் குடிமக்களைக் காணுகிற வள்ளுவப் பெருந் தகையாருக்கு உலகில் காணப்படும் காட்சி ஒன்று நினைவுக்கு வருகிறது. மழைத்துளி இல்லாமற் போனால் வாட்டமுறும் உயிரினங்களின் நிலைமை வள்ளுவரின் அகக்கண் முன்னால் வந்து நிற்கிறது. உடனே வள்ளுவர் அரசனின் அளியின்மையால் வாடிடும் உயிரினங்களின் நிலைமையை ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு. (குறள் – 557)

(பருவத்தே வந்து பெய்யும் மழை இல்லாமை யாதலினால் உலகத்தில் வாழுகின்ற உயிரினங்களுக்கு ஏற்படும் துன்பம் எத்தன்மையதாகின்றது, அத்தன்மைத்து அரசன் அருளிலனாதல் அவன் கீழ் வாழும் குடிமக்களுக்கு.

துளி – மழைத்துளி; ஞாலம் – உலகம், அளி – அருள் செய்தல்)

மழைத்துளி இல்லாமை உயிரினங்களுக்கு எத்தகைய துன்பத்தைத் தருமோ, அத்தகைய துன்பத்தை அரசனின் அருளற்றதன்மை குடி மக்களுக்குத் தரும் என்பதை வள்ளுவப் பெருந் தகையார் இக்குறள்மூலம் சுட்டிக் காட்டுகிறார்.

அரசனின் அளிக்கு மழைத்துளியையும், குடிமக்களுக்கு உயிரினங்களையும், அளி இன்மைக்குத் துளியின்மையையும் உவமைகளாகக் கூறப்பட்டிருக்கின்றன.

பருவம் பார்த்துத் தானாகப் பெய்கின்ற மழை எப்படி உயிரினங்களால் வரவேற்கப்படுகின்றதோ, அதுபோலக் காலம் பார்த்துத் தானாக வழங்கப் படுகின்ற அரசனின் அருள் குடிமக்களால் வரவேற்கப்படுவதாகும். உயிரினங்களின் வாழ்வுக்கு மழைத்துளி எப்படி இன்றியமையாததோ, அப்படியே குடிமக்களின் வாழ்வுக்கு அரசனின் அருள்புரியும்

தன்மையும் இன்றியமையாததாகும். மழைத்துளி தானாகப் பெய்கின்ற ஒன்று; அதுபோலவே வேந்தனின் அளியும் தானாக வருகின்ற ஒன்றாகும். மழைத்துளி அற்றுப் போகுமேயானால் உயிரினங்கள் வாடி, வதங்கி, அழியும்; அதுபோல வேந்தனின் அளி இல்லையாயின் குடிமக்களும் வாடி, வதங்கி, அழிவர் என்பது திண்ணம்.

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன், கோனோக்கி வாழும் குடி" என்னும் குறளில் பொருளை நேரிடையாக விளக்கிக் காட்டுகிறார் குறளாசிரியர். உலகத்து உயிர்களெல்லாம் எப்படி மழையை நம்பி வாழுகின்றனவோ அதுபோலவே நாட்டின் குடிமக்களெல்லாம் அரசனின் செங்கோலை நம்பி வாழுகின்றனர் என்று குறிப்பிடுகிறார். இந்தக் குறளில் அந்தப் பொருளை எதிர்மறை முகத்தான் விளக்கிக் காட்டக் குறளாசிரியர் முற்பட்டுள்ளார். அந்தக் குறளில் வாழும் வகையைக் குறிப்பிடுகிறார்; இந்தக் குறளில் வாழமுடியாத வகையைக் குறிப்பிடுகிறார்.

மழையில்லாமல் போனால் உலகத்து உயிர்களைப் பசி வருத்தும்; அதுபோலவே அரசனின் அளி இல்லாமல் போனால் பசி, பட்டினி, பஞ்சம், பிணி முதலாயன நாட்டின் குடிமக்களை வருத்தும். மழை இல்லாது போனால் உழவர் தம் வேலைகளைச் செய்யமுடியாமற் போகும்; அதுபோல, அரசனின் அளி இல்லாமல் போனால், நாட்டின் குடிமக்களும் தத்தம் தொழில்களைச் செய்யமுடியாமற் போவர்.

வேண்டப்படுவதிலும், இயங்குவதிலும், வாழ வைப்பதிலும், இன்றியமையாத் தன்மையிலும் மழைத்துளியும், அரசனின் அளியும் ஒத்திருப்பதைக் காணலாம். இந்தக் குறளில் வள்ளுவப் பெருந்தகையார் கூறியுள்ள உவமைநயம், மிகவும் பாராட்டிப் போற்றி மகிழ்வதற்குரியதாகும் என்பது மேற்கூறியவற்றால் இனிது விளங்கும்.

பண்ணும் கண்ணும்

மனிதனிடத்தில் குறைகள் இருப்பதும், குற்றங்கள் காணப்படுவதும் இயற்கையாகும். குற்றங் குறைகள் இல்லாத மனிதனே உலகில் இருக்க முடியாது என அறுதியிட்டு உறுதியாகக் கூறலாம்.

ஒருசிலர் தம்மையறியாமலேயே குறைகளுக்கு ஆளாகவும், குற்றங்களைப் புரியவும் கூடும். வேறு சிலர் வேண்டுமென்றே குறைகளை உருவாக்கவும், குற்றங்களைச் செய்யவும் கூடும்.

வேண்டுமென்றே குறைகளையும், குற்றங்களையும் உண்டாக்குபவர்கள் உள்ளபடியே தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அத்தகையவர்கள் தப்பித்துக் கொள்வதற்கான கழுவாய் எதுவும் இருக்க முடியாது. ஆனால், தம்மையறியாமலேயே குற்றங்களுக்கும், குறைகளுக்கும் ஆளாகுபவர்கள் கடுந்தண்டனைக்கு ஆட்படுத்தப்பட வேண்டியவர்களாக மாட்டார்கள். அத்தகையோர் எச்சரிக்கை செய்யப்படுவதற்கும், மன்னிக்கப்படுவதற்கும், அருள் செய்யப்படுவதற்கும் உரியவர்கள் ஆவார்கள்.

அறியாமற் செய்யப்படும் குற்றங்குறைகளைப் பொறுத்து, மன்னித்து, அருள் செய்யும் தன்மையைத் தான் கண்ணோட்டம் என்று அழைக்கின்றனர். இந்தக் கண்ணோட்டம் இருந்தால்தான் உலகம் உய்ய முடியும். இந்தக் கண்ணோட்டம் இல்லை யென்றால், குற்றங்குறைகள் எந்த வடிவில் தோன்றினாலும் எந்த இடத்தில் தோன்றினாலும், எவரிடத்தில்

தோன்றினாலும், எப்பொழுது தோன்றினாலும் அவற்றிற்குத் தண்டனை கொடுத்தே தீரவேண்டும் என்ற நிலை இருந்தால், உலகில் ஒருவர்கூட உயிர் வாழமுடியாது. உலகமக்களில் பெரும்பாலோரையும் காப்பாற்றி வருவது, காப்பாற்றி வரத்தக்கது ஒன்று உண்டு என்றால், அதுதான் கண்ணோட்டமாகும்.

இந்தக் கண்ணோட்டம் என்ற பண்பு ஒவ்வொரு மனிதனிடத்திலும் இருந்து தீரவேண்டிய பண்பாகும் என்று வாதாடுகிறார் வள்ளுவப் பெருந்தகையார். இந்தக் கண்ணோட்டம் ஒவ்வொருவரிடமும் இருந்தால்தான் பிறரை வாழவைக்கமுடியும். இல்லை யெனில் ஒருவர் மற்றொருவரிடம் குற்றங்குறைகள் கண்டு ஒருவர் மற்றொருவரை அழித்துக் கொள்ளும்படி நேரிடும்.

'எனவே ஒருவருக்குக் கண் இருக்கிறது என்றால், அது புறப்பொருள்களைப் பார்ப்பதற்கு மட்டுமே அமைந்த உறுப்பு அல்ல என்றும், அது கண்ணோட்டத்தைச் செலுத்துவதற்காகவும் அமைந்த ஒன்றாகும் என்கிறார் வள்ளுவர். கண் என்பது கண்ணோட்டத் தோடு பொருந்தி வரவேண்டிய ஒன்று என்றும், கண்ணோட்டம் இல்லாத கண், கண் ஆகாது என்றும் கூறுகிறார்.

கண்ணோட்டம் இல்லாத கண் ஒன்று இருக்குமேயானால், அந்தக் கண்ணால் ஒரு பயனும் இல்லை; அப்படிப்பட்ட கண் இருப்பதும் ஒன்றுதான், இல்லாமலிருப்பதும் ஒன்றுதான் எனக் கூறவருகிற திருவள்ளுவர், அதனை ஓர் உவமையின்மூலம் விளக்கிக் காட்ட முற்படுகிறார். கண்ணோட்டத்தோடு பொருந்திவராத கண்ணுக்குப் பாடல் தொழிலோடு பொருந்திவராத பண்ணை உவமையாக்கினார்.

பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண். (குறள் – 573)

(பண் என்ன பயனுடைத்தாம் பாடலோடு பொருந்தாதாயின்; கண் என்ன பயனுடைத்தாம் கண்ணோட்டம் இல்லாத காலத்து.)

பாடல் தொழிலோடு பொருந்திவராத பண் எப்படிப் பயன்தராதோ, அப்படியே கண்ணோட்டத் தோடு பொருந்தி வராத கண்ணும் பயன்தராது என்பது வள்ளுவரின் கூற்றாகும்.

கண்ணுக்குப் பண்ணையும், கண்ணோட்டத் திற்குப் பாடல் தொழிலையும், கண் கண்ணோட்டத் தோடு பொருந்தி வருவதற்குப் பண் பாடற்றொழி லோடு பொருந்தி வருவதையும் உவமைப்பொருளாகக் கூறியுள்ளார்.

பண் பொதுவாக இசைக்கும்; அது போலக் கண்ணும் பொதுவாகப் பார்க்கும். பண் பாடல் தொழிலோடு பொருந்தி வந்தால்தான் பலன் ஏற்படும்; அதுபோலக் கண் கண்ணோட்டத்தோடு பொருந்தி வந்தால்தான் பலன் ஏற்படும். பண்ணைப் பாடல் தொழிலோடு முயன்று பொருந்தச் செய்ய வேண்டும்; அதுபோலக் கண்ணையும் கண்ணோட்டத் தோடு முயன்று பொருந்தச் செய்ய வேண்டும்.

பண் என்பது பாலையாழ்ப் பண் முதலிய நூற்று மூன்று வகைப்படும். என்று கூறுவர். பாடல் தொழில்கள் என்றால் என்ன? என்று வினவும்போது, யாழில்கண் வார்தல் முதலிய எட்டுவகையும், பண்ணல் முதலிய எட்டுவகையும் தொண்டை யின்கண் எடுதல், படுதல், நலிதல், கம்பிதம், குடிலம் என்னும் ஐந்து வகையும், பெருவண்ணம், இடைவண்ணம், வனப்புவண்ணம் முதலிய வண்ணங்கள் எழுபத்தாறுவகையும் பாடல் தொழில் களாகும் என்று கூறப்படுகின்றன.

பண் பொதுப்படையாகக் கேட்க இனிமையாக இருக்கும்; அதுபோலக் கண் பொதுப்படையாகப் பார்க்க இனிமையாக இருக்கும். பண்பாடற் றொழிலோடு பொருந்தும்போதுதான் பலன் தரும்; அதுபோலக் கண் கண்ணோட்டத்தோடு பொருந்தும் போதுதான் பலன் தரும்.

29

மரமும் மனிதனும்

மனிதனிடத்தில் குற்றங்குறைகள் காணப்படுவது இயற்கை என்பதும், குற்றங்குறைகள் இல்லாத மனிதனே இருக்க முடியாது என்பதும், வேண்டு மென்றே செய்யப்படுகின்ற குற்றங் குறைகளுக்கு மன்னிப்போ, பொறுத்தருளுதலோ இல்லை என்பதும், அறியாமற் செய்யப்படுகின்ற குற்றங் குறைகளை மன்னித்தே ஆகவேண்டும் என்பதும், இல்லையானால் மனித இனம் முழுவதுமே தண்டனைக்கு ஆட்பட்டு அழிந்துபட நேரிடும் என்பதும், பொறுத்தருளும் பண்பாகிய கண்ணோட் டந்தான் உலகை உய்யச் செய்கிறது என்பதும், மனித வாழ்க்கைக்குக் கண்ணோட்டம் இன்றியமையாது தேவைப்படுகின்ற பண்பு என்பதும், கண்ணுக்கு அணிகலமாக விளங்குவது கண்ணோட்டந்தான் என்பதும், கண்ணோட்டம் இல்லாத கண், கண் என்னும் பெயரைப் பெறுவதற்கே தகுதி படைத்தது அல்ல என்பதும் யாவராலும் நன்கு அறியப்பட்டவை யாகும்.

கண் பொதுவாகப் புறப் பொருள்களைப் பார்க்கும் தன்மையது என்றாலும், அதற்குரிய சிறப்புக்குரிய பணி கண்ணோட்டம் கொள்ளுதல் ஆகும். சிலர் கண் படைத்தவராகக் காணப்பட்ட போதிலும், கண்ணோட்டமில்லாதவர்களாக வாழ்கிறார்கள்.

கண்ணோட்டமில்லாது, வெறும் கண்ணை மட்டும் படைத்தவர்களாக வாழுகின்ற மனிதர்களைப்

பார்க்கிற திருவள்ளுவருக்கு உவமை ஒன்று தென்படுகிறது. மண்ணோடு பொருந்தி வளருகிற மரத்தைக் கண்ணோட்டமில்லாது கண்ணோடு பொருந்தி வளருகிற மனிதருக்கு ஒப்பிடுகிறார்.

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ(டு)
இயைந்துகண் ணோடா தவர். (குறள் – 576)

(கண்ணோடு பொருந்தியிருந்து கண்ணோட்டம் இல்லாதவர், மண்ணோடு பொருந்தி நிற்கின்ற மரத்தினை ஒப்பர்.)

மண்ணோடு பொருந்தி நிற்கும் மரம் எப்படிக் கண்ணோட்டம் செலுத்த முடியாமல் இருக்கிறதோ, அப்படித்தான் கண்ணோடு பொருந்தி நின்று கண்ணோட்டம் செலுத்த முடியாத மக்களும் இருக்கிறார்கள் எனப் பொய்யாமொழியார் கூறுகின்றார்.

இந்தக் குறளில் கண்ணோட்டம் இல்லாத மரத்தைக் கண்ணோட்டமில்லாத மனிதனுக்கு உவமையாகக் கூறுகிறார். மரத்திற்கு இயற்கையாகவே கண்ணோட்டம் செலுத்தும் ஆற்றல் இல்லை. ஆனால், மனிதனுக்குக் கண்ணோட்டம் செலுத்தும் ஆற்றல் உண்டு. ஆற்றல் இருந்தும் அதனைப் பயன்படுத்தாமல் மனிதன் ஒருவன் இருக்கின்றான் என்றால், அவன் மனித இனத்தோடு சேர்த்து எண்ணப்படுவதற்குத் தகுதியற்றவன் ஆகிறான்; அவன் மரத்தின் இனத்தோடு சேர்த்து எண்ணப்பட வேண்டியவனாக ஆகிறான்.

மண் மரத்தை வளர்க்கப் பயன்படுகிறதே அல்லாமல், கண்ணோட்டப் பண்பை மரத்திற்கு ஊட்ட அது பயன்படுவதில்லை; அதுபோல கண்ணோட்டம் இல்லாதவருடைய கண் அவர்களின் உடலை வளர்க்கப் பயன்படுகின்றதே அல்லாமல் கண்ணோட்டத்தை வளர்க்கப் பயன்படுவதில்லை.

மரமும் வளருகிறது; அதுபோல மனிதனும் வளருகிறான். மரம் பிற உயிரினங்களைப்பற்றிக்

கவலைப்படுவதில்லை. மரம் இடம்விட்டு நகராது; ஆனால், மனிதன் இடம்விட்டு நகருவான் என்பதைத் தவிர மற்ற வகையில் கண்ணோட்டமில்லாத மனிதன் மரத்திற்கு ஒப்பானவன் ஆகிறான். கண்ணோட்டம் என்ற பண்பினைக் கொள்ளும்போது தான், மனிதன் மரத்தினின்றும் வேறுபட்டவனாகின்றான், அந்தப் பண்பினைக் கொள்ளாத வரையில் அவன் மரத்திற்குச் சமமானவன்தான் என வள்ளுவர் கூறுகிற கருத்துநயமும், உவமை நயமும் எண்ணி எண்ணி மகிழ்வதற்கு உரியனவாகும்.

பேயும் அலகையும்

அச்சத்தின் உருவெளித் தோற்றத்தைத்தான் 'பேய்' என்றும், 'அலகை' என்றும் கூறுவது; பேய் என்றோ, அலகை என்றோ உயிருள்ள பொருள் எதுவும் உண்மையில் இல்லை.

பேய்த்தன்மை - அறிவின்மை; பேய்த்தேர் - கானல் நீர்; பேய்ப்பார்வை - மருட்பார்வை; பேய்மகன் - கெட்டவன்; பேய்வித்தை - சூன்ய வித்தை.

பேய் - அச்சம் தரும்பொருள்; பேயிருள் - அச்சம் தரும் இருள் எனப்படும். பேய்க்காய்ச்சல் என்பது அச்சம் தரும் காய்ச்சல் எனப்படும். அச்சத்தின் உருவெளித் தோற்றத்தை அலகை என்பது நூல் வழக்கு. பேய் என்பது உலக வழக்கு. பேய் பிடித்தல் என்பது அச்ச நோய் கொள்ளுதல் எனப்படும். பேய் என்பது பொய்த் தோற்றம் என்பதைப் பேய்க்கரும்பு, பேய்ச்சுரை, பேய்த்தேர் போன்ற சொற்களால் அறியலாம்.

— நாவலர்

நீராம்பலும் உள்ளத்துயர்வும்

மனிதனுக்கு ஆக்கம் பயக்கும் பண்புகளிலே மிகச்சிறந்து தலையாயதாகக் காணப்படுவது ஊக்கம் ஆகும். அவ் ஊக்கம் இல்லையேல் ஒருவன் ஆக்கம் பெறுவது அரிதாகும்.

மனச்சோர்வு அடையாமல், செய்யும் செயலின்கண் மனக் கிளர்ச்சிகொள்ளும் தன்மை யையே ஊக்கம் எனக் கூறுவர்.

ஒருவர் எத்துணை வகைப்பட்ட பொருள்களை உடையவராக இருப்பினும், அவை எல்லாவற்றிலும் சிறப்பித்துச் சொல்லத்தக்க உடைமை ஒன்று உண்டாயின், அது ஊக்கம் உடைமையாகும். மற்ற எல்லாப் பொருள்களும் இருந்து, ஊக்கம் உடைமை என்னும் ஒரு பொருள் இல்லையாயின், மற்ற பொருள்கள் எல்லாம் இருந்தும் இல்லாதனவாகவே கருதப்படும். ஏனெனில், ஊக்கமுடைமை இல்லை யெனில், மற்ற பொருள்கள் எல்லாம் தாமாகவே விரைவில் அழிந்துவிடும்.

ஊக்கம் உடைமை மட்டும் இருந்து, மற்ற பொருள்கள் இல்லாதனவாக இருந்தாலும், அவை யெல்லாம் இருப்பனவாகவே கொள்ளப்படும். ஏனெனில் அவற்றையெல்லாம் ஈட்டித்தரும் வன்மை ஊக்கமுடைமைக்கு உண்டு. இது காரணம்பற்றித்தான் 'கொன்றை வேந்தன்' என்னும் நீதி கூறும் ஏடு ''ஊக்கமுடைமை ஆக்கத்திற்கு அழகு'' என்று குறிப்பிட்டுள்ளது.

ஊக்கம் ஒருவருக்கு இல்லையாயின் அவர் கொண்டிருக்கும் பொருளும் நாளுக்கு நாள் கரைந்து போய், இறுதியில் ஏதுமற்றவராக ஆகிவிடுவார். இந்தக் கருத்தை உணர்த்தத்தான் "குந்தியிருந்து உண்டால் குன்றும் கரையும்" என்றொரு பழமொழி தோன்றிற்று.

ஊக்கமுடைடமை, பொருளுடைடமை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டுப் பார்த்தால், ஊக்க முடைமை அழியாத தன்மையது, பொருளுடைமை அழியுந் தன்மையது என்பதும், ஊக்கமுடைமை பயன்படுத்தப் பயன்படுத்த மேலும்மேலும் வளருந் தன்மையது, பொருளுடைமை மேன்மேலும் குறையுந் தன்மையது என்பதும் பெறப்படும்.

ஊக்கம் இருந்தால் ஆக்கம் தானே வந்தடையும் என்பதைக் கூறவருகிற திருவள்ளுவப் பெருந் தகையார், ஒருவன் அசைவில்லாத ஊக்கத்தை உடையவனாக இருப்பானாகில், ஆக்கம் தானே வழி கேட்டுக்கொண்டு அவனை வந்தடையும் என்று குறிப்பிடுகிறார்.

"ஊக்கமது கைவிடேல்" என ஆத்திச்சூடி குறிப்பிடுவதும் ஈண்டு நோக்கற் பாலதாகும்.

மக்கள் எவ்வளவுக்கெவ்வளவு ஊக்கம் பெறுகின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு உயர்வார்கள் என்றும், ஊக்கம் வளர்ந்துகொண்டே போனால் அதனைக் கொண்டிருக்கிற மக்களும் உயர்ந்து கொண்டே போவார்கள் என்றும் ஊக்கம் குறைந்து கொண்டே போனால், மக்களும் தம் நிலையில் வீழ்ந்துகொண்டே போவார்கள் என்றும் வள்ளுவப் பெருந்தகையார் கூறுகிறார். இதனை ஓர் உவமையின்மூலம் தெளிவுபடுத்திக் காட்டுகிறார். நீர்நிலையிலுள்ள நீரின் அளவுக்கு உயர்ந்தும், தாழ்ந்தும் காணப்படும் நீர்ப்பூக்களின் தாளினை உவமையாகக் கூறுகிறார்.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு. (குறள் – 595)

(நின்ற நீரின் அளவினவாம் நீர்ப்பூக்களின் தாளினது நீளங்கள்; அதுபோல மக்கள்தம் ஊக்கத்து அளவினதாம் அவருயர்ச்சி.)

நீர்நிலையிலே நிற்கின்ற நீர்ப் பூக்களின் தாள்கள் நீரின் நிலையைப் பொறுத்து எப்படி உயர்ந்தும், குறைந்தும் காணப்படுமோ, அதுபோல, மக்களின் உயர்ச்சியும் அவர்கள் கொண்டிருக்கிற ஊக்கத்தைப் பொறுத்து மிகுந்தும், குறைந்தும் காணப்படும் என்பது வள்ளுவரின் கருத்துரை.

மக்களின் ஊக்கத்திற்குக் குளத்தின் நீர்நிலையும், உயர்வுக்கு நீர்ப்பூக்களின் தாளின் நீட்டத்தையும், உவமைப்பொருள்களாகக் குறிப்பிடுகிறார்.

குளத்தில் நீர் பெருகப்பெருக நீர்ப்பூவின் தாளானது நீண்டுகொண்டே போகும்; அதுபோல மக்கள் தம் ஊக்கவுணர்வு வளர்ந்துகொண்டே போனால், அவர்தம் உயர்ச்சியும் ஓங்கிக்கொண்டே போகும். குளத்தின் நீர் குறையத் தொடங்கினால், நீர்ப் பூவினது தாளும் சுருங்கிக்கொண்டே போகும்; அதுபோல, மக்கள் தம் ஊக்கம் குறைந்துகொண்டே போனால், அவர்தம் உயர்ச்சியும் வீழ்ந்துகொண்டே போகும்.

நீர் நிலைக்கும், மலர்த் தண்டிற்கும் எவ்வளவு தொடர்பு இருக்கிறதோ, அவ்வளவு தொடர்பு ஊக்கத்திற்கும், உயர்ச்சிக்கும் இருக்கிறது என்று வள்ளுவப் பெருந்தகையார் கூறும் உவமை நயம் பாராட்டி மகிழ்வதற்குரியதாகும்.

''நீரளவே யாகுமாம் நீராம்பல்'' என்னும் 'வாக்குண்டாம்' கூற்றின் கருத்தும் இங்கு ஒப்பிட்டுப் பார்ப்பதற்குரியதாகும்.

யானையும் ஊக்கமுடையாரும்

ஊக்கம் என்பது, மனச்சோர்வின்றி, எடுத்துக் கொண்ட செயலின்கண் கிளர்ச்சி கொண்டிருக்கும் தன்மை என்பதும், ஊக்கம் ஆக்கம் பயக்கக்கூடிய ஒன்று என்பதும், ஊக்கம் உடைமை அழிவில்லாத ஒன்று என்பதும், ஊக்கம் உயர உயர மனிதனுக்கு உயர்ச்சி வளரும் என்பதும் நன்கு அறியப்பட்டவை யாகும்.

ஒருவன் தான் மேலும்மேலும் உயர்ந்து போகவேண்டும் என்ற நினைப்பைக் கொள்கிறான்; மற்றொருவன் தான் மேலும் மேலும் தாழ்ந்து போய் விடுவோமோ என்ற நினைப்பைக் கொள்கிறான். மேலும் மேலும் உயரவேண்டும் என்ற நினைப்பிற்கு உள்ளத்தின் ஊக்கம் காரணமாகிறது; மேலும் மேலும் தாழ்ந்துவிடுவோமோ என்ற நினைப்பிற்கு மனச் சோர்வு காரணமாகிறது. மனச்சோர்வு ஏற்பட்டு விட்டால், ஒருவனை அது மிக விரைவாகக் கீழே கொண்டு போய்ச் சேர்த்துவிடும். ஊக்கம் ஒருவனை உயர்நிலைக்குக் கொண்டுபோகத் தவறினாலும், இருக்கின்ற நிலையிலிருந்து அவன் கீழே வீழ்ந்து விடாதவாறு பாதுகாத்துக்கொள்ள அது பெரிதும் பயன்படும். இது காரணம்பற்றித்தான், திருவள்ளுவர், ஒருவன் நினைப்பதையெல்லாம் உயர்வாகவே நினைக்கட்டும் என்றும், அந்நினைவு முடிவுபெறாமல் தப்பிப்போனாலும், அந்த நிலை முயன்று பெற்றதனோடு ஒக்கும் என்றும் கூறுகிறார்.

ஒருவர்தம் ஆக்கத்திற்கு அழிவு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலும், ஊக்கத்தில் தளர்ச்சி யடையக்கூடாது என்பதை வள்ளுவப் பெருந் தகையார் ஓர் உவமையின்மூலம் விளக்குகிறார். அம்புகளால் புண்பட்ட யானை, தளர்ச்சியுறாமல் தன் பெருமையை நிலைநிறுத்துவதை, மேற்குறிப்பிட்ட கருத்துக்கு உவமையாகக் கூறுகிறார்.

சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பின்
பட்டுப்பா டுன்றும் களிறு. (குறள் – 597)

(யானையானது அம்புக்கட்டின் அம்புகளால் புண்பட்டவிடத்தும் தளராது தன் பெருமையை நிலைநிறுத்தும்; அதுபோல, ஊக்கமுடையார் தாம் கருதிய உயர்வுக்குச் சிதைவு வந்தவிடத்துத் தளராது தன் பெருமையை நிலைநிறுத்துவர்.

உரவோர் – ஊக்கமுடையார்; ஒல்கார் – தளரார்; புதை – அம்புக்கட்டு; பல அம்புகள் என்பதைக் குறிப்பிட புதை என்றார்)

யானையானது பல்வேறு அம்புகளால் தாக்கப் பட்டுப் புண்பட்டுவிட்டாலும், தளர்ச்சியடையாமல், தன் பெருமையை நிலைநாட்ட மேலும் மேலும் எப்படி முயன்று போரிடுமோ, அதுபோலவே ஊக்கமுடையவர்கள் தாம் கருதிய ஆக்கத்திற்குச் சிதைவு வந்துவிட்டாலும், தம் முயற்சியில் சிறிதும் தளர்ச்சியுறாமல், மேலும் மேலும் தம் பெருமையை நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபடுவார்கள் என்ற கருத்தைப் பொய்யில் புலவரான வள்ளுவப் பெருந் தகையார் இக்குறளின்மூலம் விளக்கிக் காட்டுகிறார்.

ஊக்கமுடையவருக்குக் களிற்றையும், கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு ஏற்படுதலுக்குப் புதையம்பு படுதலையும், தளராது தம்பெருமையை நிலைநாட்டு தற்குப் பாடுன்றுதலையும் உவமைப்பொருளாகக் கூறியுள்ளார்.

களிறு எப்படிப் பெருமிதத்தோடு கூடிய ஒரு விலங்கோ, அப்படியே ஊக்கமுடையவர்களும்

பெருமிதத்தோடுகூடிய பிரிவினராவர்; பல அம்புகள் தன்மேல் பாய்ந்தாலும் அவற்றால் ஏற்படும் வலியை யானை எப்படிப் பொருட்படுத்தாதோ, அப்படியே ஊக்கமுடையவர்களும் தம்முடைய முயற்சி சிதைவுட்டும்படியான நிலைமை ஏற்பட்டாலும், அதனைப் பொருட்படுத்தமாட்டார்கள்; உடம்பில் புண்பட்டவிடத்தும் யானை எப்படித் தன் பெருமையைத் தொடர்ந்து நிலைநாட்டுவதில் முயன்று நிற்குமோ, அப்படியே ஊக்கமுடையவர்கள் தம்முடைய முயற்சியில் சிதைவு ஏற்பட்டவிடத்தும் தம் பெருமையைத் தொடர்ந்து நிலைநாட்டுவதில் முயலுவர்.

தோல்வியே ஏற்படினும், அதனைப் பொருட் படுத்தாது, எடுத்துக்கொண்ட முயற்சியில் தளராது ஈடுபடுத்தும் ஊக்கமுடையவருக்கு, உடம்பில் அம்புகள் பல தைத்தாலும் அவற்றைப் பொருட் படுத்தாது, எடுத்துக்கொண்ட முயற்சியாகிய போரிடும் பணியில் தன் பெருமையை நிலைநாட்ட முயலும் களிற்றை உவமையாகக் கூறியிருக்கும் பாங்கு படித்துப் படித்து மகிழ்வதற்குரியதாகும்.

அஞ்சும் யானையும் அடங்கும் மனிதனும்

காட்டு விலங்குகளிலெல்லாம் மிகப்பெருத்த தோற்றப் பொலிவு கொண்டது யானையாகும். அதனது பெருமிதத் தோற்றமே பார்ப்போர்க்கு ஒருவிதத்தில் அச்சத்தையும், மற்றொரு விதத்தில் வியப்புணர்ச்சியையும் கொடுக்கும். அதனுடைய கொம்புகள் பருத்து, நீண்டு கூரியனவாகவும், உறுதியுடையனவாகவும் இருக்கும்.

மேற்சுட்டிக் காட்டப்பட்டவை போன்ற தோற்றப் பொலிவையும், பருத்த உடலையும், வலிய தன்மையையும், கூரிய கொம்புகளையும் உடைய யானையை வெல்லும் விலங்கு வேறொன்றும் உளதோ என்றுதான் நமக்கு எண்ணத்தோன்றும்.

யானை உலாவுகிற அதே காட்டில் சில வேளைகளில் புலியும் உலாவும். புலியைப் பார்த்தால் அதனை யானையோடு ஒப்பிடும்போது, தோற்றப் பொலிவு அற்றதாய், உடலமைப்பில் சிறியதாய், கொம்புகளற்றதாய் மிகச் சாதாரண ஒரு விலங்காகத்தான் காணப்படும்.

உடல் உறுதியையும், பருமனையும், வலிவையும் கொண்டிருக்கிற யானையும், அவற்றில் குறைந்த தன்மையுடைய புலியும் ஒன்றையொன்று எதிர்ப்பட்டுவிட்டால், புலி வெற்றிகொள்ளும் நோக்கேக்காடு சீறிப் பாய்வதையும், யானை தோல்வி

மனப்பான்மையோடு அஞ்சிப் பின்வாங்குவதையும் பார்க்கலாம். வலிமிகுந்த சார்புகள் இருந்தும் யானை அஞ்சுவானேன்? வலிகுறைந்த நிலையிலும் புலி சீறிப் பாய்வானேன்? என்று ஆராய்ந்து பார்த்தால், யானை யிடம் இல்லாத பண்பு புலியிடம் இருப்பதைக் கண்டுகொள்ளலாம். அதுதான் ஊக்கமுடைமையாகும்.

யானையினிடத்தில் மெய்யின் கண் வலிவு இருந்தாலும், உள்ளத்தின்கண் ஊக்கமுடைமை இருப்பதில்லை; ஆனால், புலியினிடத்து மெய்யின்கண் யானையைப் போன்று அவ்வளவு வலிவு இல்லை யென்றாலும், அதன் உள்ளத்தின்கண் யானையிடத்து இருப்பதைக்காட்டிலும் பன்மடங்கு ஊக்கமுடைமை இருக்கிறது. ஊக்கமின்மை யானையிடத்து இருக்கும் வலிவையும் இழக்கச் செய்கிறது; ஊக்கமுடைமை புலியினிடத்து இல்லாத வலிவையும் சேர்க்கிறது.

வலிமிகுந்த யானை ஊக்கமிகுந்த புலியினிடம் அஞ்சும் காட்சியை, உவமைக் காட்சியாகக்கொண்டு, வேறோர் உலகியல் உண்மையைப் புலப்படுத்த முயலுகிறார் பொய்யாமொழியார். சிலர் வலிமிகுந்த ஆள் அம்பு வசதிகளை உடையவராக இருந்த போதிலும், சார்பு வலி குறைந்தவர்களிடம் தோற்றுப் போவதைக் காண்கிறோம். அதற்குக் காரணம் என்ன என்று பார்த்தால், சிலர் சார்பு வலி குறைந்தவர் களாகக் காணப்பட்டாலும், ஊக்கமிகுதியின் காரணமாகச் சார்பு வலி மிகுந்தவர்களை முறியடித்துவிடுகிறார்கள் என்பது தெரியவரும். சார்பு வலிமிகுந்து ஊக்கம் குறைந்தவர்களைச் சார்பு வலி குறைந்து ஊக்கம் மிகுந்தவர்கள் வென்று விடுவதற்கு, வலி மிகுந்த யானையை ஊக்கம் மிகுந்த புலி வென்றுவிடுவதை உவமையாக்குகிறார் திருவள்ளுவர்.

பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். (குறள் – 599)

(எல்லா விலங்குகளைக் காட்டிலும் தான் பெரிய உடம்பினதாயினும், அது மட்டுமல்லாமல்

கூரிய கொம்புகளை உடையதாயினும், யானை தன்னைப் புலி எதிர்த்தால் அதற்கு அஞ்சும்.

பரியது - பெரியது; கூர் - கூரிய; கோடு - கொம்பு; வெரூஉம் - அஞ்சும்.)

யானையானது பெரிய உடம்பினையும், கூரிய கொம்புகளையும் உடையதாக இருந்தாலும், புலி பாய்ந்து வந்தால் ஊக்கமின்மையின் காரணமாக அதற்கு எப்படி அஞ்சிப் பின்வாங்குகிறதோ, அப்படியே சிலர் உடல்வலிமையும், கருவி வலிமையும் உடையவராக இருந்தபோதிலும், அவர்கள் ஊக்க மற்றவராக இருப்பார்களேயானால், ஊக்கமுடைய வேறு சிலர்க்கு, அவர்கள் உடல்வலிமையும், கருவி வலிமையும் அற்றவராக இருந்தபோதிலும் அத்தகையவர்க்கு, முன்னையவர்கள் அஞ்சிப் பின்வாங்க வேண்டியவர்களாகவே ஆவார்கள்.

இந்தக் குறளில் வள்ளுவப் பெருந்தகையார் உவமையை மட்டும் கூறி, உவமேயத்தை வருவித்துக் கொள்ளச் செய்கிறார். இலக்கண நூலார் இதனைப் பிறிதுமொழிதல் என்று கூறுவார்கள்.

பெரிய உடலையும், கூரிய கொம்பையும் உடைய யானையை, உடல் வலிமையையும், படை வலிமையையும் உடைய ஊக்கமற்ற ஒருவனுக்கும், சிறிய உடலையும் சிறிய பற்களையும்கொண்ட புலியை, உடல்வலிமையும் படைவலிமையும் அற்ற ஆனால் ஊக்கமுடைய ஒருவனுக்கும், புலிக்கு யானை அஞ்சுவதை, ஊக்கமுடையவனுக்கு ஊக்கமற்றவன் அஞ்சுவதற்கும் உவமைகளாகக் கூறுகிறார்.

ஊக்கமற்ற யானை பெரிய உடலையும், பெரிய கொம்புகளையும் கொண்டிருந்தபோதிலும் அவற்றால் அதற்குப் பலனேதும் ஏற்படுவதில்லை; அதுபோல ஊக்கமற்ற மனிதன், வலிய உடலையும், வலிய படையையும் கொண்டிருந்தபோதிலும், அவற்றால் அவனுக்கு ஒரு பலனும் ஏற்படாது என்பதாகும்.

ஊக்கமுடைய புலி ஊக்கமற்ற யானையை எப்படி வென்று விடுகிறதோ, அதுபோல ஊக்கமுடைய மனிதன், ஊக்கமற்ற மனிதனை வென்றுவிடுவான் என்பதாகும்.

ஊக்கமுடைமை எப்பொழுதும் வெல்லும் என்பதும், ஊக்கமின்மை எப்பொழுதும் தோல்வி யுறும் என்பதும், மற்ற வலிமைகள் எல்லாவற்றைக் காட்டிலும் ஊக்கமுடைமையே சிறந்த வலிமையாகும் என்பதும் இக்குறளால் இனிது பெறப்படும்.

வள்ளுவர்தம் உள்ளக்கிடக்கை

திருவள்ளுவர், எந்த ஒரு பொருளைப்பற்றிக் கூறுவது என்றாலும், உலகியலுக்கு ஒத்த முறையில் (உலகம் தழீஇயது ஒட்பம்-குறள்-425), உலக மக்கட் சமுதாயத்தோடு பொருந்திய வகையில் (உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு'- குறள்-426), இயற்கை நிகழ்வுக்கு முரண்படாத முறையில், ('இயற்கை அறிந்து செயல்' - குறள் 637) முதலிலிருந்து இறுதிவரையில், கூறிச் செல்கிறார். நடைமுறைக்கு அப்பாற்பட்ட கருத்துகளுக்கு அவர் எந்த ஒரு நிலையிலும் இடம் அளித்ததில்லை. கற்பனைக் கடவுட் கொள்கைக்கோ, கற்பனைக் கட்டுக் கதைகளுக்கோ, உலகியலுக்குப் புறம்பான கருத்துகளுக்கோ, இயற்கை நிகழ்வுக்கு மாறுபாடான கற்பனைச் செய்திகளுக்கோ, பண்டைத் தமிழர் போற்றி வந்த உயர்ந்த நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும் மாறுபட்ட அயலாரான வடமொழியாளரின் கொள்கைகளுக்கோ, சாதி-சமய-இன வேறுபாட்டுக் கொள்கைகளுக்கோ அவர் எந்த ஒரு நிலையிலும் சிறிதுகூட ஆதரவு கொடுக்கவில்லை.

வடமொழியிலுள்ள 'வேதங்கள்' 'மனுதரும சாத்திரம்', 'அர்த்த சாத்திரம்', 'சுக்கிர நீதி', 'காம சூத்திரம்' போன்ற நூல்களுக்கும் திருக்குறளுக்கும் எவ்விதமான தொடர்பும் அறவே இல்லை. திருக்குறள் அவற்றிற்கெல்லாம் முற்றிலும் மாறுபட்டு விளங்கும். பொது அறம் போற்றும் தனித்தமிழர் பண்பாட்டுத் தனிப்பெரும் நூலாகவே திகழ்ந்து வருகிறது.

— நாவலர்

குன்றா விளக்கும் குடியும்

ஊக்கமுடைடமைக்கு நேர் எதிராக விளங்கும் பண்பு சோம்பலாகும். ஊக்கமின்மை, முயற்சி யின்மை, கிளர்ச்சியின்மை, மகிழ்ச்சியின்மை, ஆவலின்மை ஆகியவை சோம்பலின் அறிகுறிகளாகும்.

சோம்பல் மனச்சோர்வைத் தருவதாகும். மனச்சோர்வு உடற்சோர்வைத் தரும். மனச்சோர்வும், உடற்சோர்வும் சேர்ந்து ஊக்கமின்மையை ஊட்டும். ஊக்கமின்மை முயற்சியின்மையைக் கொடுக்கும். முயற்சியின்மை தோல்வியைத் தரும். தோல்வி குடிவாழ்க்கையைக் கெடுக்கும்.

ஒரு குடும்பம் சிறந்து, வளர்ந்து, ஓங்குபுகழ் எய்தியிருந்தபோதிலும், சோம்பல் என்னும் தீய பண்பு அந்தக் குடியில் புகுந்துவிடுமாயின், அதனால் அக்குடி நாளடைவில் கெட்டொழிந்து அழியும். சோம்பலுக்கு அவ்வளவு வலிவு இருக்கிறது.

சோம்பலினால் ஒரு குடிகெட்டழிவது என்பது எப்படியிருக்கும் என்பதைத் திருவள்ளுவர் ஒரு உவமையின்மூலம் விளக்கிக் காட்ட முற்படுகிறார். நன்றாக ஒளிவிட்டு எரிந்துகொண்டிருக்கும் விளக்கின் மீது புகைப்படலம் படிந்தால், விளக்கொளி எப்படி மங்கி மறைந்து போகுமோ, அப்படியே சோம்பலால் தாக்குறும் குடியும் கெட்டழியும் என்கிறார்.

குடிஎன்னும் குன்றா விளக்கம் மடிஎன்னும்
மாசூர மாய்ந்து கெடும். (குறள் – 601)

(தான் பிறந்த குடி என்னும் தூண்டப்படாத விளக்கு, ஒருவனது சோம்பலாகிய புகைபடர மாய்ந்து கெட்டுப்போகும்.

குன்றா விளக்கம் – ஒளிகுறையாத விளக்கு; அதாவது நந்தா விளக்கு – அதாவது தூண்டப்படாத விளக்கு. மடி – சோம்பல். மாசு – புகை.)

குடியாகிய தூண்டப்படாத விளக்கு, சோம்பல் என்னும் புகை படியக் கெட்டுப் போகும். அதாவது தூண்டப்படாதவாறு ஒளி விட்டு நன்றாக எரிந்து கொண்டிருக்கிற விளக்கின்மீது புகை படிந்தால், எப்படி ஒளி மழுங்கிச் சுடர் அவிந்து விளக்குக் கெட்டுப் போகுமோ, அப்படியே, நன்றாகச் சிறந்து விளங்கி வளர்ந்துகொண்டிருக்கிற குடியினிடத்து, சோம்பல் என்னும் பண்பு படிந்து விடுமேயானால், அக்குடியின் புகழ் மங்கி, வாழ்வு அவிந்து, அக்குடி அடியோடு கெட்டுப் போகும் என்பது இக்குறளின் கருத்து.

குன்றா விளக்கைச் சிறந்து வளரும் குடிக்கும், விளக்கின் ஒளியைக் குடியின் புகழுக்கும் விளக்கின் சுடரைக் குடியின் வாழ்விற்கும், புகையைச் சோம்பலுக்கும், விளக்கின்மீது புகைபடிவதைக் குடியின்மீது சோம்பல் படிவதற்கும் உவமைகளாகக் கூறுகிறார் ஆசிரியர்.

நன்றாக ஒளிவிட்டு எரிந்துகொண்டிருக்கிற விளக்கின்மீது புகைபடிந்தால், முதலில் ஒளிமங்கும், பிறகு சுடர் அவியும், பிறகு தண்டு மட்டும் நிற்கும். அது போல நல்ல புகழோடு வாழ்ந்து வரும் குடியினிடத்துச் சோம்பல் என்னும் பண்பு சேர்ந்தால், முதலில் குடியின் புகழ் மறையும், பிறகு வாழ்வு அற்றுப் போகும். பிறகு மக்களுருவங்கள் மட்டும் நிற்கும். ஒளியவிந்த விளக்குத் தண்டு

எப்படிப் பயன்படாத ஓர் உருவமாகக் காட்சி யளிக்குமோ, அது போலவே வாழ்விழந்த குடியும் பயன்படாத ஓர் உருவமாகக் காட்சி அளிக்கும்.

வள்ளுவப் பெருந்தகையார் குன்றா விளக்கைக் குடிக்கு ஒப்பிட்டுக் காட்டும் பாங்கும், இக்குறளிலே உணர்த்தும் உவமைநயமும் பாராட்டி மகிழ்வதற் குரியனவாகும்.

பரிமேலழகர் புலமை

திருக்குறளுக்கு எழுதப்பட்ட பழம்பெரும் உரைகளில் பலராலும் தொடர்ந்து பயிலப்பட்டு வருகின்ற உரை பரிமேலழகர் உரையாகவே இருந்து வருகின்றது. திருக்குறளின் பழம்பெரும் உரையாசிரியர்களுள். பரிமேலழகரே. காலத்தால் இறுதியாகத் தோன்றியவரென்றும். கி.பி.13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார் என்றும் ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுகின்றனர். அவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது அவரது பெயராலும். காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோவிலிலுள்ள கல்வெட்டு ஒன்றில் காணப்படும் குறிப்புக்களின் வாயிலாகவும். அவரது குறளுரைகளில் வைணவக் கருத்துகள் ஆங்காங்கு. ஆதிக்கம் பெற்று. முதன்மையுற்று மிளிர்வதன் மூலமும் அறிந்துகொள்ள இயலுவதாகின்றது.

பரிமேலழகர். தமிழ்மொழியின் இலக்கிய இலக்கண நூல்களையும். வடமொழியின் இலக்கிய இலக்கண நூல்களையும் ஐயந்திரிபு அற முற்றும் தெளிவுறக் கற்றறிந்தவர் என்பதை. அவரது உரையின் வளத்தால் நன்கு அறிந்துகொள்ளலாம். அவர். தமது உரையில் 230க்கும் மேற்பட்ட இலக்கிய - இலக்கண செய்யுள்களை மேற்கோள்களாகக் காட்டுகிறார் என்றால். அவரது தமிழ் இலக்கிய இலக்கணப் புலமை. தெளிவாக உணரப்படும். ஒவ்வொரு குறளுரையிலும் அவர். இலக்கண அமைதியைச் செம்மையுறக் கூறிச் செல்லும் பாங்கு தனிச் சிறப்புடைய தாகும். அதோடு மட்டுமல்லாமல் அவர். சமயவியல். தருக்கவியல். அரசியல். பொருளியல். மருத்துவ இயல். உளவியல். இசையியல் போன்ற துறைகளிலும். தேர்ந்த அறிவு பெற்று விளங்கியிருந்திருக்கிறார் என்பதும் பல உரை விளக்கங்களிலிருந்து தெளிவாகப் புலனாகின்றது.

— நாவலர்

மரக்கலமும் மடிதுயிலும்

ஒருவனுடைய குடிவாழ்க்கையைக் கெடுக்க உறுதுணைபுரியும் பண்புகள் நான்காகும் என்று கூறுகிறார் திருவள்ளுவர். (1) சோம்பல் (2) காலங் கடத்தும் இயல்பு (3) மறதி (4) துயிலுதல் ஆகிய நான்குமே அவையாகும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

செய்ய வேண்டியவைகளைச் செய்ய வேண்டிய காலத்தில் செய்யாமற் போனால், செயல்களும் நிறைவேறா; எதிர்பார்க்கப்படும் பலன்களும் கிடைக்கா. செயல்களும் நிறைவேறாமல், பலன்களும் கிட்டாமற் போனால், எவ்வளவுதான் சிறந்து வளர்ந்த குடியாக அது இருந்தபோதிலும், அது உறுதியாக வீழவே செய்யும்.

சோம்பலின் காரணமாக ஊக்கமின்மையும், முயற்சியின்மையும் ஏற்படும். அதனால் குடி கெடும்.

காலங்கடத்தலின் காரணமாகச் செயலுக்குத் துணைபுரியக்கூடிய துணைச்சார்புகள் உரிய காலம் வரையில் நின்றுவிட்டுப் பிறகு மறைந்துவிடும். காலங்கடந்த நிலையில் செயலைச் செய்ய முற்படும் போது, துணைச் சார்புகள் எதுவும் ஒத்துழைப்புக்கு வராமல் போய்விடும். அப்படிப் போய்விடும் போது, செயல் நிறைவேற முடியாமல் தேங்கி நின்றுவிடும். அதனால் குடிகெடும்.

இறந்தகாலத்தில் நடைபெற்றதையும், நிகழ் காலத்தில் நடைபெற வேண்டியதையும் நினைவிற் கொண்டு அவற்றிற்கேற்ப செயல் செய்ய

முற்பட்டால்தான் செயல் நிறைவேறும். இறந்த காலத்தில் நடைபெற்றதையும் மறந்துவிட்டு, அதனோடு தொடர்புள்ளதாக நிகழ்காலத்தில் நடை பெற வேண்டியதையும் மறந்துவிட்டுச் செயல் செய்ய ஒருவன் புறப்பட்டால், அவனுக்கு 'எதைச் செய்கிறோம்? ஏன் செய்கிறோம்? எப்படிச் செய்ய வேண்டும்?' என்பது புரியாமலேயே போய்விடும். அப்படிப்பட்டதொரு நிலைமை ஏற்படும் போது, செயல் நிறைவேறாது, அதனால் குடி கெடும்.

செய்ய வேண்டியதொரு செயலை, அதற்குரிய காலம் நெருங்கும்போது, ஒருவர் செய்யாமல், தூக்கத்தில் ஆழ்ந்துவிடுவாரேயானால், தடைப்பட்டு விடும். அவர் பிறகு விழித்துக்கொண்டு காலங்கடந்து செய்ய முற்படும்போது, சூழ்நிலைகள் இடந்தரா; செயல் நிறைவேறாது போய்விடும்; அதனால் குடிகெடும்.

சோம்பல், காலங்கடத்தும் இயல்பு, மறதி, துயில் ஆகிய நான்கையும் ஒருவன் கொண்டிருப்பது, எப்படிப்பட்டது என்பதைத் திருவள்ளுவர் ஓர் உவமையின்மூலம் விளக்கிக் காட்டுகிறார். இறப்பினை உண்டாக்கும் மரக்கலத்தில் ஒருவன் ஏறுவது எப்படியோ, அப்படிப்பட்டது மேற்கண்ட நான்கு பண்புகளையும் ஒருவன் ஏற்றுக்கொண்டிருப்பதாகும் என்கிறார்.

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். (குறள் – 605)

(காலங்கடந்து செய்யும் இயல்பு, மறதி, சோம்பல், துயில் ஆகிய நான்கும், இறக்கும் இயல்பினை உடையார் விரும்பி ஏறும் மரக்கலம் ஆகும்.

மறவி – மறதி. மடி – சோம்பல். காமம் – விருப்பம். கலன் – மரக்கலம்.)

இறப்பினை உறுதியாக உண்டாக்கும் தன்மையைக்கொண்ட மரக்கலத்தில் ஒருவன் ஏறுவது,

எப்படி அவனுக்கு உறுதியாக இறப்புத் துன்பத்தைத் தருமோ, அப்படியே சோம்பல், காலங்கடத்தும் இயல்பு, மறதி, தூக்கம் ஆகிய நான்கையும் ஏற்றுக் கொள்பவன், உறுதியாகக் கெட்டொழிவான் என்பது வள்ளுவர் இக்குறள் மூலம் சுட்டிக்காட்டும் கருத்தாகும்.

மரக்கலத்தைச் சோம்பல், காலங்கடத்தல், மறதி, துயில் ஆகிய நான்கிற்கும் மரக்கலத்தில் ஏறிமாய்பவர் களை, நான்கு பண்புகளையும் ஏற்றுக்கெட்டழிப வர்க்கும் உவமைகளாகக் கூறியுள்ளார்.

பார்ப்பதற்குக் கவர்ச்சியையும், ஏறுவதற்கு விருப்பத்தையும் உண்டாக்கக்கூடிய பழுதுபட்ட மரக்கலம், பின்னர் அதில் ஏறியோர் அத்துணைப் பேர்களையும் கவிழ்த்து, அவர்களுக்கு இறப்பை உண்டாக்குவதைப் போலச் சோம்பல், காலங் கடத்தல், மறதி, துயில் போன்ற பாழ்பட்ட பண்புகள் கவர்ச்சியையும், விருப்பத்தையும் உண்டாக்கக் கூடியனவாக இருந்த போதிலும், தம்மை அடைந்தவர்களையும் பின்னர் அழித்து ஒழித்துவிடும்.

பழுதுபட்ட மரக்கலத்தில் ஏறுவது, ஒருவருக்கு எப்படி இறப்பை உறுதியாகத் தருமோ, அதுபோல பழுதுபட்ட பண்புகளாகிய சோம்பல், காலங் கடத்தல், மறதி, துயில் ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளுவதும் உறுதியாக அழிவைப் பயக்கும் என்பது உணர்த்தப்படுகிறது.

. விரைந்து செய்யும் செயலை நீட்டித்தலும், செயலை நினைந்ததனை மறத்தலும், அதனைச் செய்வதற்குச் சோம்புதலும், அதனைச் செய்யாது உறங்குதலும் ஆகிய இவை நான்கும், கெடுந்தன்மை யுடையார் காதலித்து ஏறும் மரக்கலம் என்று உவமைநயம் பொருந்த வள்ளுவப் பெருந்தகையார் கூறும் கூற்று நினைந்து நினைந்து பாராட்டுவதற்குரிய தாகும்.

வாளாண்மையும் வேளாண்மையும்

பொதுவாக முயற்சி இரு வகைப்படும். அவை உள்ளத்தோடு பொருந்திவரும் முயற்சி, உடலோடு பொருந்திவரும் முயற்சி என்னும் இரண்டுமாம்.

உள்ள முயற்சியை ஊக்கமுடைமை என்றும், உடல்முயற்சியை ஆள்வினையுடைமை என்றும் சான்றோர்கள் வழங்குவர். ஒரு வேலையை மேற்கொண்டு செய்யும்போது, அவ்வேலையை ஆளுந்தன்மை உடல் முயற்சி பற்றியதாக அமைகிறது. எனவேதான், உடல் முயற்சியை ஆள்வினையுடைமை என்று வழங்குகின்றனர்.

ஊக்கமுடைமை ஆக்கம் பயக்கும் என்பது யாவரும் அறிந்த ஒன்று. ஊக்கமுடைமையை நிறை வேற்ற வேண்டுமானால், அது ஆள்வினை யுடைமையின் மூலமாகத்தான் முடியும். எனவே ஆக்கத்திற்கு ஆள்வினையுடைமையும் பெரும்பங்கு காரணமாகிறது. ஆள்வினையுடைமை இல்லையேல் இருக்கும் ஆக்கம் அழியும்; மேலும் மேலும் பெறவிரும்பும் ஆக்கமும் உருப்பெறாது.

ஆக்கம் பெற்றுள்ள ஒரு மனிதனிடத்தில் முக்கியமாக உலகத்தார் எதிர்பார்க்கும் பண்பு வேளாண்மையாகும். வேளாண்மை என்பது, உடையவன் இல்லாதவனுக்கு ஈயும் தன்மையாகும். பொருள் பெற்றிருப்பதன் நோக்கமே, பிறர்க்கு - அதாவது இல்லாதவர்க்கு ஈவதாகத்தான் இருக்க

வேண்டும் என்பது வள்ளுவப் பெருந்தகையாரின் சீரிய கருத்தாகும்.

ஆக்கம் பெற்றவனின் கடமை பிறர்க்கு ஈவதுதான் என என்னும்போது, அப்படிப்பட்ட வேளாண்மையின் காரணமாக ஆக்கம் சிறிது சிறிதாகக் குறைந்து, இறுதியில் வேளாண்மை செய்வதற்கே வழியில்லாமற் போனாலும் போகக் கூடும். எனவே, வேளாண்மை ஒருபக்கம் நடந்து கொண்டிருக்கும் போதே, ஆக்கம் குறைவுபடாதவாறு, மற்றொரு பக்கத்தில் பெருகிக்கொண்டே இருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது. ஆக்கம் பெருகிக் கொண்டே இருக்க வேண்டும்; அப்போதுதான் வேளாண்மை நடந்துகொண்டே இருக்கும். ஆக்கம் பெருகிக்கொண்டே இருக்க வேண்டுமானால், ஊக்கமுடைமையும், ஆள்வினையுடைமையும் செயல்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

ஆள்வினையுடைமை செயல்படாமல், வேளாண்மை மட்டும் செயல்படுவதாக இருந்தால், ஒருவன் வளம் குன்றி, வறுமைக்கு ஆட்பட்டு, செயலற்ற மனிதனாக ஆகிவிடுவான். மெய்ம்முயற்சி இல்லாதவனிடம் காணப்படும் வேளாண்மை, எப்படிப்பட்டது என்பதை ஓர் உவமைமூலம் விளக்க முற்படுகிறார் வள்ளுவப் பெருந்தகையார். ஆண்மையில்லாதவன் கையில் வாள் இருப்பதைப் போன்றதுதான், தாளாண்மை இல்லாதவன் கையில் வேளாண்மை இருப்பதும் ஆகும் என்கிறார்.

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். (குறள் – 614)

(முயற்சியில்லாதவனுடைய வழங்கும் தன்மை, ஆண்மையில்லாதவன் கையிலுள்ள வாளைப்போல கெட்டழியும்.

தாளாண்மை – முயற்சியுடைமை; வேளாண்மை– வள்ளல்தன்மை; பேடி – ஆண்மையில்லாதவன்.)

ஆண்மையில்லாதவன் கையில் ஏந்தியுள்ள வாள் எப்படி யாதொரு பலனையும் ஏற்படுத்தாதோ, அதுபோல, முயற்சியில்லாதவனிடத்தில் காணப்படும் வேளாண்மையும் யாதொரு பலனையும் தராது என்பது, இக்குறளின்மூலம் வள்ளுவர் உணர்த்த விரும்பும் கருத்தாகும்.

ஆண்மையில்லாத பேடியைத் தாளாண்மை யில்லாதவனுக்கும், வாளினை வேளாண்மையில்லாத வனுக்கும் உவமைகளாகக் கூறுகிறார் ஆசிரியர். ஆண்மையில்லாதவனிடத்தில் வலிமை இருக்காது; வலிமையில்லாதவனால் ஓச்சிப் போரிட முடியாது; அதுபோல, முயற்சியில்லாதவனிடத்தில் ஆக்கம் இருக்காது; ஆக்கம் இல்லாதவனால் வேளாண்மையை நடத்த முடியாது. பேடிக்கு வாளினை ஓச்சவேண்டும் என்னும் ஆவல் இருக்கும்; அதுபோல, முயற்சி யில்லாதவனுக்கு வேளாண்மை புரிய வேண்டும் என்னும் ஆவல் இருக்கும். பேடியால் வாளைச் சுழற்றமுடியாது; அதுபோல முயற்சியில்லாதவனால் வேளாண்மையைச் செய்ய முடியாது. பேடியின் கையிலுள்ள வாள் எந்தப் பலனையும் உருவாக்காது; அதுபோலத் தாளாண்மையில்லாதவனிடம் தோன்றும் வேளாண்மை எந்தப் பலனையும் உருவாக்காது. பேடியின் கையிலுள்ள வாள் எதிரியிடம் சிக்கிக் கொண்டால், அந்த வாள் வலிவற்ற பேடியையே அழித்துவிடும்; அதுபோல, தாளாண்மையில்லாதவ னிடம் இருக்கும் சிறிது ஆக்கம், பிறர் கைக்குப் போய்விட்டால் அந்த ஆக்கம், வறுமையில் உழலும் முயற்சியற்றவனை அழித்துவிடும். வாளைப் பயன்படுத்த வேண்டுமானால், பேடி வலிமையுடைய வனாக மாறவேண்டும்; அதுபோல, வேளாண்மையைப் பயன்படுத்த வேண்டுமானால், முயற்சியில்லாதவன் முயற்சியுடையவனாகி, ஆக்கமுடையவனாக மாற வேண்டும்.

வாளாண்மையை, வேளாண்மைக்கு ஒப்பிட்டுக் கூறும் வள்ளுவரின் உவமை நயப்பாடு போற்றிப் பாராட்டுவதற்குரியதாகும்.

36

மாடும் மனிதனும்

மனித வாழ்க்கை இன்பமும் துன்பமும் கலந்தது. துன்பத்தைக் குறைத்து இன்பத்தைப் பெருக்குவதற் காகவே, மனித இனம் அரும்பாடு படுகிறது.

மனத்தில் மகிழ்ச்சி நிறைவதை இன்பம் என்கிறோம்; மனத்தில் வருத்தம் நிறைவதைத் துன்பம் அல்லது இடுக்கண் என்கிறோம்.

மனிதனுடைய முயற்சிக்கு இயற்கை ஒத்துழைக் காதபோதும், சூழ்நிலை உதவி செய்யாதபோதும், பொருளின்மை ஏற்படும்போதும், துணைக் கருவிகளின்மை ஏற்படும்போதும், மெய்க்கு வருத்தத்தை உண்டாக்கும்போதும், மனத்திற்கு விருப்ப மில்லாதவை நிகழும்போதும் அவனது உள்ளத்தில் வருத்தம் தோன்றுகிறது. அது துன்பமாகக் காட்சியளிக்கிறது.

மனிதனுடைய உள்ளத்தில் இன்பமும் துன்பமும் கலந்து வந்தாலும், துன்பத்தின் முடிவில் இன்பம் பெறுவது நல்லதா? அல்லது இன்பத்தின் முடிவில் துன்பத்தை அடைவது நல்லதா? என்பது ஆராயுமிடத்துத் துன்பத்திற்குப் பின் இன்பம் அடையும் நிலையையே நல்லறிவு படைத்த மக்கள் அனைவரும் விரும்புகின்றனர்.

இறுதியில் இன்பம் பயக்கும் எந்தவொரு வினையைச் செய்ய முற்பட்டாலும், இடையே சிலபல இடுக்கண்கள் ஏற்படுவதும், அந்த இடுக்கண்களைத் தாங்கிக்கொண்டு, முயற்சியில்

மேன்மேலும் ஈடுபட வேண்டியதும் இன்றியமை யாததாகி விடுகின்றது.

வினையைச் செய்யும்போது, இடையே இடுக்கண்கள் தோன்றுமாயின், அவ்விடுக்கண்களைக் கண்டு மனங்கலங்காமலும், மனச்சோர்வு அடையாமலும், அவற்றைப் பொருட்படுத்தாமலும், பின்னால் ஏற்படப்போகும் மகிழ்ச்சியை எண்ணி முயற்சியில் ஈடுபடவேண்டும் என்பதை வற்புறுத்துகிற வள்ளுவர், அப்படி இடுக்கண் வருமிடத்து அதற்கு மனங்கலங்காது உள் மகிழவேண்டும் என்கிறார். அவ்விடுக்கணை மேன்மேலும் வெல்லவல்லது அம்மகிழ்ச்சியைத் தவிர வேறொன்றும் இருக்க முடியாது என்றும் கூறுகிறார்.

வினையை மேற்கொள்ளும்போது எதிர்ப்படுகின்ற இடுக்கண்களையெல்லாம் கண்டு மனச்சோர்வு அடையாமல், அவற்றையெல்லாம்தாண்டி மேற் செல்லும் மனவூக்கம் ஒருவனுக்கு வேண்டும் என்கிறார் வள்ளுவர். எப்படிப்பட்ட மனவூக்கம் ஒருவனுக்கு வேண்டும் என்பதைப் புலப்படுத்த வந்த வள்ளுவர், அதனை ஓர் உவமையின்மூலம் குறிப்பிடுகிறார். மேடு என்றும், பள்ளம் என்றும் பாராமல் வண்டியை இழுத்துச் செல்லும் எருதை, அத்தகைய ஒருவனுக்கு ஒப்பிடுகிறார்.

மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து. (குறள் – 624)

(மேடு, பள்ளம், சேறு, சகதி போன்ற இடங்களி லெல்லாம் வண்டியினை இழுக்கும் எருதைப்போல, வினையை மேற்கொண்டு, செய்ய முயலுபவனை வந்துசேரும் இடுக்கண், தானே அழிந்தொழியும்.

மடுத்த வாய் – மேடு பள்ளம், சேறு சகதி எனக் கண்ட கண்டபடி எதிர்ப்படும் இடங்கள்; பகடு – எருது.)

மேடு பள்ளம், சேறு சகதி, குண்டு குழி, காடு கரம்பு போன்ற பல்வேறு வகைப்பட்ட,

இடுக்கண்களை இழைக்கும் வழிகளெல்லாவற்றிலும் வண்டியை, அஞ்சாமல் அயராமல் எப்படி எருது இழுத்துச் செல்லுகிறதோ, அப்படியே நல்வினையை மேற்கொள்ளும் ஒருவன் இடையிலே ஏற்படும் இடையூறுகளையெல்லாம் பொருட்படுத்தாமல், அஞ்சாமல் அயராமல், வினைமுடிக்கும் தன்மையிலே கண்ணுங் கருத்துமாய் இருக்கவேண்டும் என்பது, இக்குறளின்மூலம் உணர்த்தப்படுகிறது.

வண்டியை, மேற்கொள்ளும் வினைக்கும், எருதை, முயற்சியில் ஈடுபடுகிற மனிதனுக்கும், வழியில் காணப்படும் பலதரப்பட்ட கேடுகளை, வினையைச் செய்யும்போது எதிர்ப்படும் இடையூறுகளுக்கும், எருது, வழியின் இடையூறுகளைத் தாண்டி வண்டியை இழுத்துச் செல்வதை, மனிதன், இடையூறுகளைத் தாண்டி வினையைச் செய்து முடிக்கும் தன்மைக்கும் உவமைகளாகக் கூறியுள்ளார்.

வழியில் எதிர்ப்படும் இடையூறுகளைக் கண்டு, வண்டியை இழுத்துச் செல்லும் மாடு, மனங்கலங்கி, மனச்சோர்வோடு நின்றுவிடுமேயானால், வண்டியும் மேல்நகராது, மாடும் முன்னேற முடியாது. அதுபோல, வினையைச் செய்யும்போது எதிர்ப்படும் இடையூறுகளைக்கண்டு, மனங்கலங்கி மனிதன் நின்றுவிடுவானேயானால், வினையும் முற்றுப் பெறாது; அவனும் முன்னேற முடியாது. எருதினிடத்துக் காணப்படும் மனவுக்கமும், உடலுறுதியும் வினைமேற் கொள்ளும் மனிதனிடத்திலும் இருக்க வேண்டும் என்பதை வள்ளுவப் பெருந்தகையார் இக்குறளின் மூலம் வற்புறுத்துகிறார்.

மனிதனுக்கு மாட்டை உவமையாக்கிக் கூறியிருக்கும் நயப்பாடு மிகவும் பாராட்டி மகிழ்வதற்குரியதாகும்.

37

மணமலரும் கற்றறிவாளரும்

சொல்லாற்றல் என்பது, மனிதன் பெறவேண்டிய ஆற்றல்கள் பலவற்றுள்ளும் மிகச் சிறந்து விளங்கும் ஆற்றலாகும்.

சொல் சிந்தனையின் முடிவாகவும், செயலின் முதலாகவும் அமைகிறது. சிந்தனை, சொல், செயல் ஆகிய மூன்றிற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. சொல் மற்ற இரண்டிற்கும் இடையில் இருந்து சிந்தனையைச் செயலாக மாற்றவும், செயலைப் பற்றிய சிந்தனையை உருவாக்கவும் பயன்படுகிறது. செய்த சிந்தனையையும், செய்ய வேண்டிய சிந்தனையையும் வெளிப்படுத்துவது சொல்லாகும். அது போலவே செய்யவேண்டிய செயலைப்பற்றிச் சொல்லுவதும், செய்த செயலைப்பற்றிக் கூறுவதும் சொல்லாகும். இக்காரணம்பற்றித்தான், சொல்வன்மை பெற்றிருப்பதாகிய நன்மை, எல்லா நன்மைகளைக் காட்டிலும் மிகச் சிறந்தது என்றும், சொல்வன்மை ஒருவர்க்கு ஆக்கமும், அறிவும் பயக்கவல்லது என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

சொல் அறிவும் ஆக்கமும் பயப்பதால், ஒருவர் சொற்சோர்வு அறவே படக்கூடாது என்றும், கேட்பவர்கள் அனைவரையும் கட்டுப்படுத்திக் கேட்காதவர்களும் விரும்பும் நிலையில் மொழிவதுதான் சொல் என்றும், சொல்லுகின்ற தன்னுடைய நிலையையும், கேட்கின்ற பிறர் நிலையையும் அறிந்து சொல்ல வேண்டும் என்றும், தாம் கூறும் சொல்லை வெல்லக்கூடிய பிறிதொரு சொல் இல்லாத

வண்ணம் எண்ணிச் சொல்லவேண்டும் என்றும், பிறர் விரும்பக்கூடிய நிலையில் தாம் பேசி, பிறர் சொல்லின் பலனைத் தாம் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும் என்றும், சொல்லில் வல்லவராய், மறதியும் இல்லாதவராய் இருக்க வேண்டும் என்றும், ஒழுங்கு படுத்தி இனிமையாகப் பேச வேண்டும் என்றும், சில சொற்களில் கருத்தை விளக்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும் என்றும் வள்ளுவப் பெருந்தகையார் குறட்பாக்களின்மூலம் விளக்கிக் காட்டுகிறார்.

ஒருவருடைய சொல்லாற்றல் பெருகுவதற்குப் படிப்பு பெருந்துணை புரிகின்ற ஒன்றாகும். அதுபோலவே படிப்பின் பயனைப் பிறர் கொள்ளுவ தற்குச் சொல்லாற்றல் பேருதவி புரிவதாகும். தாம் படித்தவற்றைப் பிறர் புரிந்துகொள்ளுமாறு எடுத்துச் சொல்லும் சொல்லாற்றல் ஒருவற்கு இருந்தால்தான், அவர் படித்த படிப்பினால் உரிய பலன் ஏற்பட்டது என்று ஆகும். சிலர் இருக்கிறார்கள்; பெரும் படிப்பாளிகள் என்று பெயர் பெற்றவர்கள். அவர்கள் படிக்காத நூலே இல்லை; அவர்கள் பார்க்காத பக்கமே இல்லை; அவர்கள் கோடு கிழிக்காத வரியே இல்லை; அவர்கள் குறிப்பெடுக்காத கருத்தே இல்லை; ஆனால், அவர்களுக்குப் பேச மட்டுந்தான் வராது எனப் பிறர் கூறுவார்கள். பேசத் தெரியாத வர்கள் பல புத்தகக் கருத்துகளை மனப்பாடமாக உள்ளத்தில் அடக்கி வைத்திருப்பதும், பேசத் தெரியாத நிலையடுக்கு பல புத்தகங்களைத் தன்னகத்தே அடுக்கி வைத்துக் கொண்டிருப்பதும் ஒன்றுதான்.

தாம் படித்தவற்றைப் பிறர் புரிந்துகொள்ளுமாறு பேசும் ஆற்றல் இல்லாதவர்களை, ஓர் அழகிய உவமையின்மூலம் விளக்கிக் காட்டுகிறார் பொய்யா மொழியார். கொத்தாக மலர்ந்தும் மணமில்லாத மலருக்கு அவர்களை ஒப்பிடுகிறார்.

இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்ற(து)
உணர விரித்துரையா தார். (குறள் – 650)

(கற்றுவைத்த நூலைப் பிறர் அறியும்வண்ணம் விரித்துரைக்க முடியாதவர்கள், கொத்தின்கண்ணே

மலர்ந்திருந்தும் மணம் வீசாத பூவை ஒப்பர். இணர்- கொத்து; ஊழ்த்தல் - மலர்தல்; நாறுதல் - மணத்தல்.)

கொத்துக் கொத்தாகப் பூ மலர்ந்திருந்தாலும், அது மணம் வீசவில்லை என்றால், மக்கள் அதனை எப்படி மதிக்கமாட்டார்களோ, அப்படியே பல நூல்களை அடுக்கடுக்காகக் கற்றுவைத்தும், அவற்றை விரித்துரைக்கும் வல்லமை அற்றவர்கள் மக்களால் மதிக்கப்படமாட்டார்கள் என்பது இக்குறளின் கருத்து.

மலர்ச் செடியை மனிதனுக்கும், அதில் கொத்தாகப் பூத்திருக்கும் மலரை மனிதனின் உள்ளத்தில் படிந்திருக்கும் படிப்புக்கும், மலர் மணம் வீசாத தன்மையை, படிப்பறிவு வெளிப்படாத தன்மைக்கும் உவமைகளாகச் சொல்லப்பட்டிருக் கின்றன.

மலரின் பயன் மணம் வீசுதலாகும்; அதுபோல படிப்பின் பயன் விரித்துரைத்தலாகும். மக்கள் மனத்தை நுகர்ந்துதான் மலரை மதிப்பார்கள்; அதுபோலப் படிப்பின் கருத்துரையை நுகர்ந்துதான் படித்தவரை மதிப்பார்கள்.

செடியில் மலர் கொத்துக் கொத்தாகப் பூத்திருந்தாலும், மணம் வீசவில்லை என்றால், அதனால் பலன் ஏதும் இல்லை; அதுபோல மனிதன் கட்டுக்கட்டான புத்தகங்களைப் படித்திருந்தாலும், அவற்றை விளக்கிக் கூறும் ஆற்றல் அவனிடம் இல்லை யென்றால் பலன் ஏதும் இல்லை.

மலர் அழகாக இருக்கலாம்; ஆனால், அது மணம் வீசினால்தான் அதனை உலகோர் மதிப்பர். அதுபோல மனிதன் அழகாக இருக்கலாம்; அவனிடமிருந்து அறிவுமணம் வெளிப்படவில்லை என்றால், அவனை உலகோர் மதிக்கமாட்டார்கள்.

கற்றதை வெளியிடவல்ல சொல்வல்லார், மணம் வீசும் மலருக்கு ஒப்பாவர் என்பது பெறப்படும் கருத்தாகும். கற்றவருக்கு மலரை ஒப்புவமை காட்டி வள்ளுவர் கூறியிருக்கும் திறன் போற்றி மகிழ்வதற்குரியதாகும்.

பசுமண்பானையும் வஞ்சகப் பொருளாளனும்

எந்தவொரு செயல் செய்யப்படுவதாக இருந்தாலும், அது தூய்மையோடு செய்யப்பட வேண்டும் என்பதை, அறம் வளர்த்த உலகப் பெரியவர்கள் அத்துணைப் பேர்களும் சொல்லியுள்ளார்கள்.

வினைத்தூய்மை வேண்டும் என்பதை, வள்ளுவப் பெருந்தகையார் மிக அழுத்தந்திருத்தமாகவும், அழகாகவும், அருமையாகவும் பல குறட்பாக்களால விளக்கிக் காட்டியுள்ளார்.

வினை தூய்மையாகச் செய்யப்பட வேண்டு மென்றால், வினையானது வஞ்சம், சூது, சூழ்ச்சி, தந்திரம், பொய், களவு, பொறாமை, அழுக்காறு போன்ற தீய பண்புகளைத் துணையாகக்கொண்டு செயல்படக்கூடாது என்பதாகும். யாவர்க்கும் நன்மை பயக்கும் அன்பு, அருள், ஈவு, இரக்கம், உண்மை, தன்னலமறுப்பு போன்ற சீரிய பண்புகளைத் துணையாகக்கொண்டு செயல்படுவதே வினைத் தூய்மையாகும்.

தமக்கோ, பிறர்க்கோ, நாட்டிற்கோ புகழையும், நன்மையையும் பயக்காத எந்த ஒரு செயலையும் எவரொருவரும் செய்யக்கூடாது என்றும், மதிப்பைக் குறைக்கும் செயல் எதுவாக இருந்தாலும் அது எப்பொழுதும் ஒதுக்கித் தள்ளப்பட வேண்டும் என்றும், அறிவாற்றலுடையவர்கள் எவ்வளவு பெரிய

துன்பத்தில் சிக்கிக்கொள்ள நேர்ந்தாலும் இழிவான செயல்களைச் செய்ய ஒருபோதும் ஒருப்படக்கூடாது என்றும், தம் சொந்தத் தாயின் பசியைக் கண்டு இரங்கும் வறுமையில் ஒருவர் உழன்றாலும், அந்த வறுமையைக் களையவேண்டி, பெரியோர்கள் பழிக்கும் வினை ஏதொன்றையும் அவர் செய்யக் கூடாது என்றும், பழியைத் தரும் செல்வத்தை ஒருவர் கொண்டிருப்பதைக் காட்டிலும், அது அற்ற வறுமையையே கொண்டிருப்பது எவ்வளவோ மேலானதாகும் என்றும், அறநூல்கள் விலக்கிய தீய செயல்கள் அனைத்தையும் அனைவரும் செய்யாது விலக்க வேண்டும் என்றும், அத்தகைய தீய செயல்களைச் செய்து முடித்தால் அவற்றால் துன்பமே ஏற்படும் என்றும், பிறர் அழும்படி ஒருவரால் பிடுங்கிக் கொண்ட செல்வங்கள், அந்த ஒருவரை அழும்படி வைத்து விட்டுப் பிரிந்து போய்விடும் என்றும், நல்ல வழியில் ஈட்டிய பொருளை இழக்கும்படியான நிலைமை ஏற்பட்டாலும், பின் அது நன்மையையே பயக்கும் என்றும் திருவள்ளுவப் பெருந்தகையார் தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளார்.

தீய வழியால் பொருள் தேடிவைத்தால், அந்தப் பொருள் தேடியவரையும் அழித்து விடும், தானும் அழிந்து போய்விடும் என்னும் கருத்தைக் கூற வரும் வள்ளுவனார், ஓர் அழகிய உவமையின்மூலம் அதனை விளக்கிக் காட்டுகிறார். பச்சைப் பசும் மண்பாண்டத்தில் நீரினைச் சேர்த்து வைப்பதை உவமைப்பொருளாகக் காட்டுகிறார்.

சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று. (குறள் – 660)

(வஞ்சத்தாலே பொருள்தேடி வினை செய்தலானது, பசுமட்கலத்திலே நீரை முகந்து வினை செய்தலோடு ஒக்கும். ஏமார்த்தல் - ஏமத்தை அடையப் பண்ணுதல்.)

பசிய மட் கலத்திலே நீரை முகர்ந்து வைத்தால், எப்படி மட்கலமும் கரைந்துபோய், நீரும் பாழ்பட்டுப் போகுமோ, அப்படியே, ஒருவன் வஞ்சகத்தாலே பொருள் தேடி, அதனைத் தன்னிடம் வைத்துக்கொண்டு, வினை செய்ய முற்படுவானே யானால், அந்தப் பொருள் அவனை அழிப்பது மட்டு மல்லாமல், தானும் அழிந்து போகும்.

நீரை வஞ்சகத்தால் தேடும் பொருளுக்கும், பசுமண் கலத்தைப் பொருள் தேடி வைத்துக் கொண்டிருக்கும் மனிதனுக்கும் உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன.

மண்பாண்டத்தில் சேர்த்து வைக்கப்படும் நீர், எந்தப் பயனைக் கருதிச் சேர்த்து வைக்கப்பட்டதோ, அந்தப் பயனையும் நிறைவேற்றாமல், மண்பாண்டத் தையும் பாழாக்கி விட்டு, அதுவும் மண்ணோடு மண்ணாய் மறைந்துவிடுகிறது. அதுபோல, வஞ்சகத்தால் சேர்த்து வைக்கப்படும் பொருள், எந்தப் பயனைக் கருதிச் சேர்த்து வைக்கப்பட்டதோ, அந்தப் பயனையும் நிறைவேற்றாமல், சேர்த்து வைத்த மனிதனையும் அழித்துவிட்டு, அதுவும் அழிந்து போய்விடும் என்பதாகும்.

இக்குறளில் வள்ளுவப் பெருந்தகையார் கையாண்டிருக்கும் உவமநயம் சாலச் சிறந்த தொன்றாகும்.

அச்சாணியும் ஆற்றலுடையாரும்

ஒருவர் தோற்றப் பொலிவு அற்று, அழகற்ற வராக அல்லது அழகான ஆடை அற்றவராக, அல்லது அலங்கோலமான ஆடை அணிந்தவராக அல்லது கூனராக, அல்லது குள்ளராக, அல்லது குறளராகக் காணப்பட்டால், பொதுமக்களில் பலர், அத்தகையவரைக் கண்ட மாத்திரத்தில் எக்கொலி கொட்டி நகைக்கின்றனர். மற்றொருவர் வாட்டசாட்ட மாக வளர்ந்து தோற்றப் பொலிவோடு, மிக்க அழகுடையவராகவும், கவர்ச்சிகரமான ஆடை அணிகலன்கள் உடையவராகவும் காணப்பட்டால், அத்தகையவரைக் கண்ட அளவிலே, பொதுமக்கள் அவரை இமைகொட்டாமல் ஏறெடுத்துப்பார்த்து, மதித்துப் பெருமிதத்தோடு வரவேற்கின்றனர்.

தோற்றமில்லாதவர்களைக் கண்டு எக்கொலி கொட்டி நகைத்தாலும், தோற்றமுடையாரைக் கண்டு பெருமிதங்கொண்டு வரவேற்றலும் கண்ட அளவிலே நடைபெறுகிற காட்சிகளாக இருந்த போதிலும், அடுத்தபடியாக அவர்களுக்குள்ளே மறைந்துகிடக்கும் திறமைகளை ஆராய்வதிலேதான் உலகத்தார் முனைகிறார்கள். திறமையிருக்கக் கண்டால், அத்தகையோரை மதிக்கிறார்கள்; திறமையின்மையைக் கண்டால் அத்தகையோரை வெறுக்கிறார்கள். இது உலகத்து இயற்கையாக இருந்து வருகிறது.

வெளிப்படையாகக் காணப்படும் தோற்றப் பொலிவு கண்ணுக்கு இனிமையாக இருக்கிறது;

உள்ளே மறைந்து கிடக்கும் திறமை காதுக்கு இனிமையாக இருக்கிறது. கண்ணுக்கு இனிமையாக இருக்கும் தோற்றப் பொலிவு மதிக்கப்பட வேண்டியதா? அல்லது காதுக்கு இனிமையாக இருக்கும் திறமை மதிக்கப்பட வேண்டியதா? என்று கேட்டால், தோற்றப் பொலிவைவிடத் திறமையே மதிக்கப்பட வேண்டிய ஒன்று என உலக ஆன்றோரும், சான்றோரும் கூறி வந்துள்ளனர்.

உலக இயற்கைகளில் தோற்றப் பொலிவுக்கும் திறமைக்கும் நேரடித் தொடர்பு உண்டா? என்று பார்த்தால், அப்படி ஓர் இயற்கை விதி இல்லை என்பது புலப்படும். தோற்றப் பொலிவுள்ளவர் களெல்லாம் திறமையற்றவர்கள் என்னும் முடிவுக்கு வந்துவிட முடியுமா? என்றால் முடியாது! தோற்றப் பொலிவுள்ளவர்களில் திறமையுடையவர்களும் இருக்கிறார்கள். திறமையற்றவர்களும் இருக்கிறார்கள். அதுபோலவே, தோற்றப் பொலிவற்றவர்களில் திறமையுள்ளவர்களும் இருக்கிறார்கள், திறமையற்ற வர்களும் இருக்கிறார்கள். உலகச் சான்றோரின் வழிநின்று ஆராய்ந்து பார்த்தால், மதிக்கப்பட வேண்டியது முதலில் திறமை என்பதும், பிற்பாடு தோற்றப் பொலிவு என்பதும் பெறப்படும்.

ஒருவரிடம் திறமையும், தோற்றப் பொலிவும் சேர்ந்திருந்தால், அவர் மிகமிக மதிக்கப்படுவார்; திறமையிருந்து தோற்றப்பொலிவு இல்லாமலிருந்தால், அவர் மிக மதிக்கப்படுவார்; திறமையில்லாதிருந்து தோற்றப் பொலிவு மட்டுமிருந்தால் அவர் மிக வெறுக்கப்படுவார்; திறமையும் தோற்றப் பொலிவும் சேர்ந்து இல்லாமலிருந்தால், அவர் மிகமிக வெறுக்கப் படுவார்.

எதனையும் நன்கு ஆராய்ந்தறியாத மக்கள் சிலர் தோற்றப் பொலிவுள்ளவர்களிடத்தில் திறமையையும், தோற்றப் பொலிவற்றவர்களிடத்தில் திறமையின்மை யையும் எதிர்பார்ப்பார்கள். தோற்றப் பொலிவுள்ளவர் களிடத்தில் திறமையில்லாமலிருக்கலாம், தோற்றப்

பொலிவற்றவர்களிடத்தில் திறமையிருக்கலாம் என்பதை வாக்குண்டாம் ஆசிரியர் அழகான உவமைகளின்மூலம் விளக்கிக் காட்டுகிறார். தாழைமடல் பார்ப்பதற்குத் தோற்றப் பொலிவோடு பெரிதாக இருக்கும்; ஆனால், அதனிடத்துப் பயன் தரும் மணம் இருக்காது. மகிழம்பூ பார்ப்பதற்கு அவ்வளவு தோற்றப் பொலிவில்லாமல் சிறியதாக இருக்கும்; ஆனால் அதனிடத்துப் பயன்தரும் மணம் இருக்கும். இவைபோன்றே, கடல் தோற்றப் பொலிவோடு பெரியதாக இருக்கும். ஆனால், அதனிடத்துக் காணப்படும் உப்பு நீர் குடிக்கச் சிறிதும் பயன்படாது. கடலுக்கு அருகே காணப்படும் ஊற்றுக்கிணறு பார்ப்பதற்கு தோற்றப் பொலிவற்றுச் சிறிதாக இருக்கும்; ஆனால் அதனிடத்துக் காணப்படும் நீர் குடிக்கப் பெரிதும் பயன்படும்.

"மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரும் ஆகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்" (வாக்குண்டாம்)

இந்தக் கருத்தை 'நீதிநெறி விளக்க'ச் செய்யுள் ஒன்று அழகாக எடுத்துக் காட்டுகிறது. சிற்றுளி பார்ப்பதற்கு மிகச் சிறியதாகத்தான் காணப்படும்; ஆனால், அதன் திறமை கற்பாறையைப் பிளக்கும் தன்மைகொண்டது. கொல்லனுடைய உலைக்களத்தி லுள்ள கூடம் பார்ப்பதற்குப் பெரியதொரு இரும்புப் பாறைபோல் காணப்படும்; ஆனால் அது கற்பாறையைப் பிளக்கும் திறமை கொண்டதன்று – என்பதை அச்செய்யுள் உணர்த்துகிறது.

"சிற்றுளியால் கல்லும் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தினால்" (நீதிநெறி விளக்கம்)

உலகில் உருவத்தால் சிறுத்துத் திறமையால் உயர்ந்து காணப்படுபவர்களும் இருக்கிறார்கள். ஆகையால் உருவத்தைக் கண்டுமட்டும் ஒருவரை இகழ்ந்துவிடக் கூடாது என்னும் கருத்தைப் புலப்படுத்த முனைகிற வள்ளுவப் பெருந்தகையார்,

ஓர் அழகான உவமையின்மூலம் அக்கருத்தை விளக்குகிறார். உருவத்தால் சிறுத்துத் திறமையால் உயர்ந்து காணப்படுபவர்களுக்குத் தேரின் அச்சாணியை உவமையாகக் கூறுகிறார்.

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்(கு)
அச்சாணி அன்னா ருடைத்து. (குறள் – 667)

(எவரையும் வடிவுகண்டு இகழ்தலைத் தவிர்த்தல் வேண்டும்; ஏனெனில், உருண்டோடுகின்ற பெரிய தேர்க்குக் காலாய் நடக்கின்ற உருளையைக் கழலாமல் தாங்கும் அச்சின் வெளியே செருகிய சிற்றாணியைப் போலத் திண்ணியாரை இவ்வுலகம் கொண்டிருக்கிறது.)

உருண்டு ஓடுகின்ற பெரிய தேரின் உருளை கழன்றுவிழாதபடி அதனைத் தாங்கும் திறமையை எப்படிச் சிறிய வடிவுள்ள அச்சாணி பெற்றிருக்கிறதோ, அதுபோல, சிலர் உருவத்தில் சிறியராயும், தோற்றப் பொலிவு அற்றவராயும் காணப்பட்டாலும், பெரியதொரு செயலின் பொறுப்பைத் தாங்கும் திறமை அவர்களிடத்திலே இருக்கும் என்பது இக்குறளால் பெறப்படும் கருத்தாகும்.

உருண்டோடும் பெரிய தேரை இயங்கும் பெரியதொரு செயலுக்கும், அச்சாணியைச் சிறிய உருவம் படைத்தார்க்கும், உருளை கழலாமல் தாங்கும் பொறுப்பைச் செயல்குலையாமல் தாங்கும் பொறுப்புக்கும் உவமைகளாகக் கூறியுள்ளார் ஆசிரியர்.

தேர் நின்று கொண்டிருக்கும்போது அச்சாணியின் திறமை வெளிப்பட வழி ஏற்படாது என்னும் காரணத்தால்தான், உருண்டோடும் தேரின் அச்சாணி என்று குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

அச்சாணி பார்ப்பதற்குச் சிறியதாகக் காணப் பட்டாலும் அதன் பயன் பெரியது; அதுபோல, ஆற்றலுடையார் சிலர் பார்ப்பதற்குத் தோற்றப் பொலிவால் மிகச் சிறியவராகக் காணப்பட்டாலும்,

அவர்களால் விளையும் பயன் பெரிதாகவே இருக்கும். அச்சாணி மிகச் சிறிய ஒரு பொருள்தானே என்று கருதி, அதனைப் பொருட்படுத்தாது விட்டுவிட்டால், பெருந்தேர் ஓடாமல் கவிழ்ந்துவிடும்; அதுபோல. மிகச் சிறிய தோற்றமுடையவர்கள்தானே என்று கருதி ஆற்றலுடையாரைப் பொருட்படுத்தாமல் விட்டு விட்டால், பெருஞ் செயல்கள் நிறைவேறாமல் சீர்குலைந்து போகும்.

உருவங்கண்டு அச்சாணியை இகழ்ந்து ஒதுக்குவது எப்படிச் செய்யக்கூடாததொரு செயலோ, அப்படியே சிறிய உருவங்கண்டு ஆற்றலுடையாரை இகழ்ந்து ஒதுக்குவதும் செய்யக் கூடாததொரு செயலாகும்.

ஆற்றலுடைய சிறிய தோற்றமுடையவர்க்கு அச்சாணியை உவமையாகக் கூறியிருக்கும் வள்ளுவப் பெருந்தகையாரின் சிறப்பு, பாராட்டி மகிழ்வதற்குரியதாகும்.

தேவர்

'தேவர்' (குறள் 1073) எனும் சொல் மேலானவர். சிறப்புக்குரியவர். பெருமைக்குரியவர். வான்புகழ் கொண்டவர் என்ற பொருள்களைக் கொண்டதாகும். தெய்வம் - பண்புப்பெயர். தேவன் ஆண்பால் பெயர். தேவி - பெண்பால் பெயர். தேவர் - பலர்பால் பெயர்.

தேவர். உயர்வுபற்றிச் சீரியோரைக் குறிக்கும் ஒரு சொல். அது. அரசரையும் மேலோரையும் குறிக்கக்கூடிய சொல் என்பது. 'இராசராச தேவர்'. 'சோழ தேவர்'. 'திரிபுவன தேவர்'. 'மெய்கண்ட தேவர்'. 'சிறுத்தொண்ட தேவர்'. 'திருத்தக்க தேவர்'. 'தோலா மொழித்தேவர்' எனக் குறிக்கப்பெறுவதால். அறியலாம். வள்ளுவர். 'தேவர்' (குறள் 1073) எனும் சொல்லை மேலானவர் என்ற பொருள் ஏற்படும்படியாகத்தான் பயன்படுத்துகிறார்.

—நாவலர்

தீ எச்சமும் வினைக்குறையும்

எந்தவொரு வினையை மேற்கொள்ளுவதாக இருந்தாலும், அதனை முழுதுறச் செய்து முடிக்க வேண்டுமேயல்லாமல், அதனை அரை குறையாகச் செய்து விட்டுவிடக் கூடாது. அதனால் கோரிய பலனும் கிடைக்காது; விடப்பட்ட குறையும் வரவரப் பெரிதாக வளர்ந்து, செய்து முடித்த செயலையும் அழித்துவிடும்.

எடுத்துக்கொண்ட வினையை வெற்றிகரமாக முடிக்க வாய்ப்பு இருக்கிறது என்றால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு உடனடியாக வினையைச் செய்து முடித்தல் நல்லதாகும். அப்படி வாய்ப்பு ஏற்படவில்லையானால், வெற்றிக்கான வாய்ப்பு ஏற்படும் காலம் வரையில் பொறுத்திருந்து, வாய்ப்பு ஏற்பட்டவுடன் கருதிய வினையை மேற்கொள்வது நலம் பயக்கும்.

ஒரு கட்டடத்தைக் கட்டிமுடிக்க விரும்பி, கட்டடத்தை எழுப்பிக்கொண்டே வந்து, கூரை வேயும் நிலையில் அந்தப் பணியை விட்டுவிட்டால், மழையால் நனையும் சுவர்கள் சேறு கரைந்து, இற்றுப்போய், கீழே சாய்ந்துவிடும். கூரைவேயாமல் விட்டகுறை, கட்டி முடித்த சுவர்களையும் தரைமட்டமாக ஆக்கிவிடக் காரணமாக அமைந்து விடுகிறது.

ஒரு பொறி இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதனை மிகக் கடினமாக உழைத்துச்

செய்து முடிக்கிறோம். அந்தப் பொறி துருப் பிடிக்காமலிருக்க, அதன் மேல் எண்ணெய் வண்ணம் பூசவேண்டியது இன்றியமையாததாகிறது. பொறியைச் செய்து முடித்த நாம், அதன் மேல் எண்ணெய் வண்ணம் பூசாமல் விட்டுவிட்டால், அதனால் என்ன ஆகிவிடப்போகிறது என்று அசட்டையாக இருந்து விடுவோமேயானால், அந்தச் சிறுகுறை பெரிய இழப்பையே உண்டாக்கக்கூடும். எண்ணெய் வண்ணம் பூசாமல் விட்டுவிட்டால், அந்தப் பொறியின்மீது ஈரக்காற்றும், ஈரமும்பட்டு, அது துருப்பிடித்து, அதன் உள்ளுறுப்புக்களெல்லாம் கெட்டு, அது இயங்க முடியாத நிலை ஏற்படும்போது, அந்தப் பொறியையே ஒதுக்கித்தள்ளிவிட வேண்டி நேரிடும். சிறுகுறை பெரிய இழப்புக்கே காரணமாகி விடும்.

வினையை முழுதுறச் செய்து முடிக்காமல் அரைகுறையாக விட்டுவைத்தால், அதனால் எப்படித் தீங்கு உண்டாகிறதோ, அப்படியே பகையை முழுவதும் தொலைக்காமல். அரைகுறையாக விட்டு வைத்திருந்தால், அதனால் பெருந்தீங்கு ஏற்படும் என்பது உறுதி.

பகைவனை எதிர்த்துப் போராட வேண்டிய கட்டம் ஏற்பட்டால், அவனும், அவனது பக்க வலிவும் அடியோடு அழிக்கப்படுகிற அளவுக்கு எதிர்த்து நின்று போராட வேண்டும். பகைவனை முழுவதும் எதிர்க்காமல் அரைகுறையாக எதிர்த்து விட்டு, பகைவனையும் அழிக்காமல் அவனை அழிப்பதற்கான முயற்சியையும் மேற்கொள்ளாமல் ஒருவன் வாளா இருந்து விடுவானேயானால், அரைகுறையாக விடப்பட்ட பகைவன், முழு வலிவை நாளடைவில் தேடிக்கொண்டு வந்து அந்த ஒருவனை முழுமூச்சுடன் எதிர்த்து ஒழித்து விடுவான். பகைவனை அறவே முறியடித்து அழித்தொழிக்க முடியும் என்றால், ஒருவன் பகைவனோடு போரிடப் புறப்படுவதில் பொருள் இருக்க முடியும். பகைவனோடு போரிடப் புறப்பட்டு விட்டு, போரை அரைகுறையாக நிறுத்திவிட்டால், பகைவன் தன்

வலிவைப் பெருக்கிக்கொள்ளவும், மீண்டும் அந்த ஒருவன்மீது போர் தொடுக்கவும் வாய்ப்பு ஏற்பட்டுவிடும். அப்படிப்பட்ட நிலையில் பகைவன் கை ஓங்கியதாகவும் அந்த ஒருவனின் கை தளர்ந்த தாகவுந்தான் இருக்கும். தளர்ந்த அவன், பகைவனின் முன்னால் அழிந்து படுவான் என்பதில் ஐயமில்லை.

ஒருவன் ஒரு வினையைச் செய்வதாக இருந்தாலும், ஒரு பகையை அழிப்பதாக இருந்தாலும், அந்தச் செயல்களை முழுவதுமாக நிறைவேற்றி வைக்கவேண்டும்; அவற்றை அரைகுறையாக விட்டால், அதனால் அந்த ஒருவனின் உடைமைக்கும், உயிருக்கும் அழிவு வந்தே தீரும். இந்தக் கருத்தை விளக்க வந்த வள்ளுவப் பெருந்தகையார் உவமை ஒன்றன்மூலம் நயம்பட விளக்கிக் காட்டுகிறார். பற்றி எரியும் தீயை முழுவதும் அணைக்காமல், அரைகுறையாக அணைத்து விட்டுவிட்டால், எஞ்சியுள்ள தீ வளர்ந்து, மீதமுள்ள பொருள்களை அழித்து விடுவதை உவமையாகக் கூறுகிறார்.

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீஎச்சம் போலத் தெறும். (குறள் – 674)

(செய்யத் தொடங்கிய வினையும், களையத் தொடங்கிய பகையும் எனச் சொல்லப்பட்ட இரண்டையும் அரைகுறையாக விடுவது, ஆராயுமிடத்து அரைகுறையாக விடப்பட்ட தீயைப்போல, பின் வளர்ந்து கெடுக்கும். எச்சம் - மிகுதி; தீ எச்சம் - தீயின் மிகுதி.)

தீயை முழுவதும் அணைக்காமல், அரைகுறையாக விட்டுவிட்டால், அது எப்படி மீண்டும் வளர்ந்து, பெருகிப் பரவி எல்லாப் பொருள்களையும் பாழ்படுத்துமோ, அப்படியே வினையை, பகையை முழுவதுமாக முடிக்காமலும் அழிக்காமலும் விட்டு விட்டால், அவை மனிதனது உடைமையையும், உயிரையும் அறவே அழித்துவிடும் என்பது இக்குறளால் பெறப்படும் கருத்தாகும்.

பொதுவாக ஒரு வைக்கோற் போர் தீப்பிடித்து விட்டது என்று வைத்துக்கொள்வோம். நாம் அதை அணைக்கப் போகிறோம். தீப்பிடித்த இடத்தில் தண்ணீரை ஊற்றுகிறோம், மணலை வாரிக் கொட்டு கிறோம், தடியால் அடித்துத் தணிக்கிறோம். தீயை முழுமையாக அணைக்காமல், பெரும்பாலும் அவிந்து விட்டது என்ற எண்ணத்துடன் அந்த இடத்தை விட்டு அகன்று விடுவோமேயானால், அவிந்து படாமல் எஞ்சி நிற்கும் தீ மெல்ல மெல்ல பரவி, மீண்டும் வைக்கோற் போரை எரிய வைத்து, அதன் மூலம் அக்கம் பக்கத்திலுள்ள வீடு, வாசல்களுக்கும் பரவி, ஊரையே அழித்தாலும் அழிந்து விடும்.

எஞ்சி நிற்கும் தீயை, விடப்பட்ட வினைக்கும், பகைக்கும் உவமைப்பொருளாகக் கூறுகிறார் குறளாசிரியர்.

எஞ்சி நிற்கும் தீ எப்படிப் பெருகி வளரும் தன்மையதோ, அதே போன்று செய்யப்படாமல் விடப்பட்ட வினையின் குறையும், ஒழிக்கப்படாமல் விடப்பட்ட பகையும் பெருகி வளரும் தன்மையன வாகும். இனி ஒன்றும் செய்யாது என்று அசட்டை யாக விடப்படும் தீ எப்படிக் கண்ணுக்குத் தெரியாமல் உள்ளேயே ஊடுருவி வளர்ந்து பரவிக் கொண்டிருக்குமோ, அப்படியே செய்வினையின் குறையும், செருபகையின் எச்சமும் வெளிக்குத் தெரியாமல் வளரும் தன்மை வாய்ந்தனவாகும்.

தீ முழுமையாகத் தணிக்கப்பட வேண்டும்; இல்லையேல் எஞ்சி நிற்கும் தீ எஞ்சிய பொருள்கள் முழுவதையும் அழித்துவிடும். அதுபோல செய்வினை முழுவதுமாகச் செய்து முடிக்கப்பட வேண்டும்; பகை முழுவதும் அழித்தொழிக்கப் படவேண்டும்; இல்லையேல் வினைக்குறை ஒருவனது உடைமையை அழித்துவிடும்; பகை எச்சம் ஒருவனது உயிரையே அழித்துவிடும்.

வினையைச் செய்து முடிப்பதிலும் அரைகுறைப் போக்குக் கூடாது; பகையை ஒழிப்பதிலும்

அரைகுறைப் போக்குக் கூடாது என்பதை எஞ்சி நிற்கும் தீயை உவமைப்பொருளாகக் கொண்டு, வள்ளுவப்பெருந்தகையார், தெளிவாக்கிக் காட்டியிருக்கும் நயப்பாடு வியந்து பாராட்டுவதற்குரியதாகும்.

மெய்ப்பொருள் காண்பதறிவு

பல்வேறுபட்ட காலகட்டங்களில் தோன்றிய நூற்றுக் கணக்கான உரையாசிரியர்கள் திருக்குறளுக்கு. ஒருவருக் கொருவர் மாறுபட்ட பொருள்களையும். வேறுபட்ட கருத்துகளையும் கொண்ட உரைகளை வழங்கி வந்திருக் கின்றனர். எவ்வளவு மிகவான உரைகள் வந்தாலும். அவற்றையெல்லாம் படித்தறிந்து. ஏற்பனவற்றைத் தேர்ந்தெடுக்கும் உரிமை. படிப்போர்க்கு முழுக்க முழுக்க இருக்கிறது. அவற்றை ஏற்பதும். ஏற்காமல் விடுவதும் அவரவர் மனவளத்தையும். மன உறுதியையும். பகுத்தறிந்து பார்க்கும் அறிவுத் தெளிவையும். திட்பத்தையும். புதுமை. பயன்மை. உலகியல் தன்மை. உண்மை ஆகியவற்றை வரவேற்கும் பாங்கையும் பொறுத்தனவாகும். 'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' (குறள் 423) என்றும். 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள். மெய்ப்பொருள் காண்பது அறிவு' (குறள் 355) என்றும் வள்ளுவப் பெருந் தகையார் கூறிய தன்மையில். உரைகளைப் படிப்போர் ஆராய்ந்து பார்க்கவும் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

"ஒருவர் கூறும் பொதுப்படையான கருத்தை மறுக்கவும். ஏற்காமல் கூட இருக்கவும் எவருக்கும் உரிமை உண்டு. ஆனால் அவர் அந்தக் கருத்தைக் கூறக்கூடாது எனத் தடுத்து நிறுத்துகின்ற உரிமை எவர்க்கும் இல்லை" என்று பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டிருப்பது சிந்திக்கத் தக்கதாகும்.

— நாவலர்

மதயானையும் செய்வினையும்

ஒருவர் எந்தவொரு வினையைச் செய்வதாக இருந்தாலும், பொருள், கருவி, காலம், இடம் ஆகியவற்றை ஆராய்ந்து, அவையெல்லாம் தமக்கு ஆதரவாக அமைந்திருக்கின்றனவா என்று பார்த்துச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் எண்ணிய வெற்றியும், கோரிய பலனும் கிட்டும்.

மாற்றாருடன் போட்டி போட்டுக் கொண்டு அல்லது சண்டையிட்டுக் கொண்டு வினை யொன்றைச் செய்ய முற்படும்போது, பொருள், கருவி, காலம், இடம் ஆகியவற்றை மிக்க கவலையோடு ஆராய வேண்டும்.

பொருளைப்பற்றி ஆராய்வதென்றால், வினை மேற்கொள்ளும் பொருள், ஆகும் பொருளா? அல்லது அழியும் பொருளா? தமக்கு ஆதரவாக அமையும் பொருளா? அல்லது மாற்றானுக்கு ஆதரவாக அமையும் பொருளா? என்று கண்டறிய வேண்டும் என்பதாகும்.

கருவியைப்பற்றி ஆராய்வதென்றால், வினை செய்வதற்குத் துணையாக வந்தமையும் கருவிகள், மாற்றானிடம் இருக்கும் கருவிகளைவிட வலிமையும், செய்திறனும் மிக்கவையா? என்று பார்த்தறிய வேண்டும் என்பதாகும்.

காலம்பற்றி ஆராய்வதென்றால், வினைமேற் கொள்ளும் காலம் வினை முடிப்பதற்கு ஏற்ற காலந்தானா? என்பதையும், அந்தக் காலம் தமக்கு ஆதரவாகவும் மாற்றானுக்குத் தொல்லையாகவும் அமையக்கூடிய காலந்தானா? என்பதையும் ஆராய்ந்து அறிய வேண்டும் என்பதாகும்.

இடம்பற்றி ஆராய்வதென்றால், வினை செய்யும் இடம் தமக்கு முற்றிலும் ஆதரவாக அமையக்கூடிய இடந்தானா? என்பதையும், அந்த இடம் மாற்றானால் அவ்வளவு எளிதில் எட்டிப் பிடிக்க முடியாத இடந்தானா? என்பதையும் கண்டு ஆராயவேண்டும் என்பதாகும்.

மேற்கண்டவாறு ஆராய்ந்து, சூழ்நிலை ஆதரவாக இருக்கக் கூடுமானால், உடனே வினையை மேற்கொள்ளத் துணிவுகொள்ளுதல் வேண்டும். அப்படித் துணிந்த ஒன்றை உடனடியாகச் செய்யாமல் காலந்தாழ்த்திச் செய்ய வேண்டிய வற்றைக் காலந்தாழ்த்திச் செய்ய வேண்டும்; விரைந்து செய்ய வேண்டியவற்றை விரைவாகச் செய்ய வேண்டும். சோம்பலின் காரணமாகக் காலத் தாழ்வுக்கு இடமளித்தால், அதனால் தீமைகள்தாம் விளையும்.

எந்தவொரு வினை தொடர்பாக முயலும் போதும், அது முடிவு பெறுதற்கேற்ற வழிவகைகளைக் கொண்டிருக்கிறதா, அதற்கு வரும் இடையூறுகள் எவையாக இருக்கும், முடிவாகக் கிடைக்கும் பயன் என்ன என முன்கூட்டியே எண்ணிப்பார்க்க வேண்டும். அதாவது வினையைச் செய்ய முற்படுபவன் மேற்கொள்ள வேண்டிய முறையாவது, முன்னே முயன்றவன் கையாண்ட வழிவகைகள் என்ன என்பதைத் தெரிந்துகொள்வதாகும்.

பொதுவாக அறிவாற்றல் படைத்த மேலோர்கள் ஒரு வினையை மேற்கொண்டு, அதன்மூலம் மற்றொரு வினையையும் முடித்துக்கொள்ள முற்படுவார்கள். ஒரு கல்லில் இரண்டு மாங்காய் களை வீழ்த்துதல் என்பார்கள். ஒரு மாங்காயை வீழ்த்த முயற்சிக்கும் போதே, இன்னொரு மாங்காய்க்கும் சேர்த்துக் குறிவைத்து, ஒரே வீச்சில், கல் ஒரு மாங்காயைத் தாக்க, அந்த மாங்காய் மற்றொரு மாங்காயைத் தாக்க, இரண்டு மாங்காய்களையும் வீழ்த்தச் செய்யும் முயற்சி உள்ளபடியே பாராட்டப்பெறும், அதாவது ஒரு வினையைச் செய்து முடிக்க எடுத்துக்கொள்ளும் முயற்சியைக்கொண்டே, இன்னொரு வினையையும் செய்து முடித்துக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

'மாடு பார்த்தாற் போலும் இருக்கும் மைத்துன னுக்குப் பெண் தேடினாற் போலும் இருக்கும்' என்றொரு பழமொழி கூறுவதுண்டு. மாடு வாங்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் ஒருவன் ஒரு வீட்டிற்குப் போகிறான். அந்த வீட்டில் மணமாக வேண்டிய பருவப்பெண் ஒருத்தியும் இருக்கிறாள். மாடு வாங்கும் சாக்கில் அந்த வீட்டிற்குப் போய் விட்டால் முதலில் மாடு வாங்குவதுபற்றிய பேச்சைத் துவக்கி, மாட்டை வாங்கிக்கொண்டு, அதன் மூலம் அந்த வீட்டின் உறவைத் தேடிக் கொண்டு, பின் மெல்ல தன் மைத்துனனுக்கு அந்த வீட்டுப் பருவப் பெண்ணை மணம் பேசியும் முடிக்கலாம் என எண்ணுகிறான். அதாவது ஒரு வினையை மேற்கொண்டு, அதன் மூலம் மற்றொரு வினையையும் முடித்துக்கொள்கிறான் என்று பொருள்.

ஒரு வினையின்மூலம் மற்றொரு வினையை முடித்துக்கொள்வதை வள்ளுவப் பெருந்தகையார் பாராட்டுவதுடன் அந்தக் கருத்தை ஓர் அழகிய உவமையின்மூலம் நயம்படக் கூறுகிறார். யானையைக்

கொண்டு யானையைப் பிடிக்கும் செயலை அதற்கு உவமையாகக் கூறுகிறார்.

வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று. (குறள் – 678)

(ஒரு வினையால் பிறிதொரு வினையைச் செய்து கொள்வது, மதத்தால் நனைந்த கபோலத்தினையுடைய ஒரு யானையால் மற்றொரு மத யானையைப் பிணிப்பது போன்றதாகும்.)

ஒரு யானையால் மற்றொரு யானை எப்படிப் பிடிக்கப்படுகிறதோ, அப்படியே ஒரு வினையைக் கொண்டு மற்றொரு வினையையும் முடித்துக் கொள்ள வேண்டும் என்பது இக்குறளால் உணர்த்தப் படும் கருத்தாகும்.

காடுகளில் யானைகளைப் பிடிப்பது ஒரு வேடிக்கைக்குரிய நிகழ்ச்சியாக இருக்கும். பழக்கப் பட்ட யானையைக்கொண்டுதான் பழக்கப்படாத யானையைப் பிடிப்பார்கள். யானை பிடிப்பவர்கள் காட்டின் நடுவில் ஒரு பெரும் படுகுழியை வெட்டு வார்கள். பிறகு அதன்மேல், தரை மட்டத்தில் மெலிந்த நொய்தான கொம்புகளைப் பந்தல் போட்டாற்போன்று பரப்புவார்கள். யானைக்கு மிகவும் பிடித்தமான பசுந்தழைகளைக் கொண்டு வந்து அதன்மேல் பரப்புவார்கள். கீழே குழியிருப்பது தெரியாத அளவுக்கு, மேலே பசுந்தழைகள் பரப்பப் பட்டிருக்கும். காட்டில் திரியும் யானை பசுந்தழை களைக் கண்டு, பேராவலோடு அவற்றைத் தின்ன விரைந்து வரும். யானை தழைகளின்மீது பாய்ந்த வுடன், பந்தல் முறிந்துகொள்ளும். யானை படுகுழியில் விழுந்துவிடும். அது குழியை விட்டு மேலே ஏறமுடியாமல் தவியாய்த் தவிக்கும். கொம்புகளாலும், கால்களாலும் குழியின் பக்கச் சுவர்களைத் தாக்கும்; துதிக்கையைத் தூக்கித் தாவி ஏறப் பார்க்கும்; குழியில் விழுந்த யானை சில

நாட்கள் ஆட்டம் ஆடி அடங்கி, உணவின்றி பசியால் வாடும். அப்பொழுது யானைப் பாகர்கள் யானையின் கொட்டத்தை அடக்க ஈட்டிகொண்டு குத்தித் துன்பப்படுத்துவர். பிறகு கயிறுகள்கொண்டு யானையின் கால்களில் தனித்தனியாகச் சுருக்கு மாட்டிவிட்டு அதன் மறு பகுதியை கரைமேல் நிற்கும் பழக்கப்பட்ட யானைகள் சில பிடித்துக் கொண்டிருக்கும். இறுதியாக ஒரு யானை தன் துதிக்கையை நீட்டிக் குழியில் விழுந்த யானையை மேலே தூக்கிவிடும். பின்னர் பழக்கப்பட்ட யானைகள், பழக்கப்படாத யானையின் கொட்டத்தை அடக்கி நாளடைவில் பழக்கிவிடும். இதுதான் யானையக்கொண்டு யானையப் பிடித்தல் என்பதாகும்.

பழக்கப்பட்ட யானையைப் பழக்கப்பட்ட வினைக்கும், பெற வேண்டிய யானையைப் பெற வேண்டிய வினைக்கும் உவமைகளாகக் கூறியுள்ளார் வள்ளுவப் பெருந்தகையார்.

ஒரு யானையைப் பழக்கப்படுத்துவதன்மூலம் பெறப்படும் அனுபவம், மற்றொரு யானையைப் பழக்க எப்படிப் பயன்படுகிறதோ, அப்படி ஒரு வினையைச் செய்வதன்மூலம் பெறப்படும் அனுபவம், வேறொரு வினைய முடித்துக் கொள்வதற்குப் பயன்படுகிறது.

ஒரு யானையின் துணைகொண்டு மற்றொரு யானையைப் பிடிப்பதைப் போல, செய்து முடித்த ஒரு வினையின் துணைகொண்டு செய்து முடிக்க வேண்டிய வினைய நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்பது பெறப்படும் கருத்தாகும்.

யானையைப் பொருள் - இடம் - கருவி காலம் பார்த்துப் பிடிப்பதைப் போலவே, வினையையும் அத்தன்மைகளைப் பார்த்துச் செய்து முடிக்க வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது.

நனைகவுள் (மதத்தால் நனைந்த கபோலம்) என்பது யானையின் இயல்பு நோக்கிக் கொடுக்கப் பட்ட உவமையாகும். மதயானையைப் பிடித்தல் என்பது மிக அருமைமிக்க செயல் என்பதற்காகத் தான் 'நனைகவுள்' என்ற அடைமொழி கொடுக்கப் பட்டிருக்கிறது.

'முள்ளை முள்ளாலே எடுக்க வேண்டும்', 'திருடனைக்கொண்டு திருடனைப் பிடிக்க வேண்டும்', 'மான் காட்டி மான் பிடிப்பது போல' என வழங்கும் பழமொழிகளும் மேற்கூறப்பட்ட கருத்துக்கு வலிவூட்டுவனவாகும்.

யானையைக்கொண்டு யானையைப் பிடித்தல் என்னும் எளிமையான உவமையைக்கொண்டு, சீரிய கருத்தை நயம்பட விளக்கிக் காட்டியுள்ள வள்ளுவரின் திறன் போற்றி மகிழ்வதற்குரியதாகும்.

மனுவின் தருமமும் வள்ளுவரின் அறமும்

வடமொழியாளராகிய மனு, தமது சாத்திரத்தில் கூறுகின்ற 'தருமம்' என்பது வேறு. வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறளில் கூறுகின்ற 'அறம்' என்பது வேறு. மனுவின்படி, மனிதகுலம் நான்கு வருணத்தாராகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வருணத்திற்கும் ஒவ்வொரு வகையான சட்டவிதியின் கீழ் நீதிகூறும் தன்மையதே 'தருமம்' ஆகும். ஆனால், வள்ளுவரின் கருத்துப்படி, மனித குலம் அனைத்திற்கும் அன்புநெறி, அருள்நெறி, அறிவுநெறி, பண்புநெறி, ஒழுக்கநெறி போன்றவற்றின் கீழ் விதிக்கப்பட்ட கடமையைக் கூறும் தன்மையதே 'அறம்' ஆகும்.

– நாவலர்

தீக்காய்வாரும் அமைச்சரும்

மனிதன் ஈடுபாடு கொள்கிற. எந்த ஒன்றுக்கும் ஓர் அளவு இருக்கிறது. அந்த அளவு .அறிந்து ஒவ்வொருவரும் ஒழுக வேண்டும் என்பது ஆன்றோரின் அறிவுரையாகும். அந்த அளவு எது என்றால், ஆன்றோர்களும், சான்றோர்களும் தம் வாழ்நாட்களில் கண்டறிந்து தக்கதெனச் சொல்ல, வழிவழித் தலைமுறையினராக வருகிற மக்கள் அது தக்கதுதான் என்று ஆராய்ந்து, ஏற்றுக் கடைப்பிடித்து வரும் ஓர் அளவு ஆகும். அந்த அளவைக் கடைப் பிடிப்பதால், துன்பம் குறையும், இன்பம் பெருகும், தீமை குறையும், நன்மை பெருகும் என்பது அந்த ஆன்றோர்களின் கருத்தாகும். அதுபோலவே அந்த அளவு கடைப்பிடிக்கப்படாமல் போனால், நன்மை குறையும் தீமை மிகும், இன்பம் குறையும் துன்பம் மிகும் என்பதும் அவர்கள் கருத்தாகும்.

பொதுவாக உணவு உட்கொள்வதை எடுத்துக் கொள்வோம். எவ்வளவு உணவு உட்கொள்ள வேண்டும் என்பதற்கு ஒவ்வொருவரும் ஓர் அளவு வைத்துக்கொண்டிருக்கிறோம். உணவு அந்த அளவுக்குக் குறைந்தால் பசியால் தவிக்கிறோம்; உணவு அந்த அளவுக்குக் கூடுமேயானால், அசீரணத்தால் தவிக்கிறோம். ஓர் அளவோடு நிறுத்தும்போதுதான் பசியினால் ஏற்படும் தவிப்பும் அகலுகின்றது, அசீரணத்தால் ஏற்படும் தவிப்பும் ஏற்படாமலிருக்கிறது.

வயலிலே உள்ள பயிர்க்கு நீர் பாய்ச்சுவது என்றாலும், ஓர் அளவு இருக்கிறது. குறைந்த அளவு நீரைப் பாய்ச்சினால் போதுமான தண்ணீர் இல்லாமல் பயிர் வாடிப் பட்டுப்போகும். அதிக அளவு நீரைப் பாய்ச்சினால், தண்ணீர் மிகுதியினால் பயிர்கள் ஊறி அழுகிப் போய்விடும். தேவை அறிந்து அளவோடு நீர்ப் பாய்ச்சினால்தான், பயிர் செழித்து வளர வழி ஏற்படுகிறது.

ஒருவரோடு நண்பராகப் பழகுகிறோம் என்று வைத்துக்கொண்டாலும், அதற்கும் ஓர் அளவு இருக்கிறது. அளவுக்குக் குறைவாகப் பழகினால், நட்பால் ஆய பயன் கிட்டுவதில்லை; அளவுக்கு மீறிப் பழகினால், நட்பால் ஆய பயன் கெட்டுப் போய் விடுகிறது. 'அளவுக்கு மீறினால் அமுதும் நஞ்சாகும்' என்னும் பழமொழியும், 'பழகப்பழகப் பாலும் புளிக்கும்' என்னும் பழமொழியும் அளவுக்கு மீறுவதனால் ஏற்படும் கேட்டை இனிது விளக்குவன வாகும்.

நண்பனுக்கு நண்பன் பழகும் போதே அளவோடு பழகவேண்டும் என்னும் நிலைமை யிருக்கும்போது, பெரியவர்களோடு, மேலான வர்களோடு, ஆசானோடு, அரசனோடு பழகும்போது எப்படிப்பட்ட கடினமான அளவு இருக்க வேண்டும் என்பதை ஒருவாறு ஊகித்தறியலாம். அறிவாற்றல் சிறந்த அமைச்சர் அரசனோடு எப்படிப் பழக வேண்டும், எந்த அளவோடு பழகவேண்டும் என்பதை அழகாகச் சுட்டிக் காட்டுவதோடு தமது விளக்கத்தை ஓர் உவமைநயத்தின் மூலம் புலப்படுத்துகிறார் பொய்யாமொழியார். அதற்குத் தீக்காய்வாரை உவமைப்பொருளாகக் கொண்டு விளக்கிக் காட்டுகிறார்.

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். (குறள் – 691)

(கடிதில் வெகுண்டெழும் தன்மையைக் கொண்ட அரசரோடு சேர்ந்தொழுகும் அமைச்சர்,

அந்த அரசரை மிக நெருங்குவதும் நீங்குவதும் செய்யாது தீக்காய்வார் போல இடை நிலத்திலே நிற்க வேண்டும். இகல் - மாறுபாடுடைய.)

குளிர் போவதற்காகத் தீயினருகில் இருந்து தீக்காய்பவர்கள் எப்படித் தீயை விட்டு நீண்ட தொலைவிற்குப் போய்விடாமலும், தீயின் மிக அருகில் வந்து நெருங்கிவிடாமலும், இடையில் ஓர் அளவான தொலைவில் இருந்துகொண்டு தீயின் பயனைப் பெறுகிறார்களோ, அதுபோலக் கடிதில் வெகுளும் தன்மைகொண்ட அரசரோடு பழகுகிற அமைச்சர்கள் அவ் அரசர்களை விட்டு அடியோடு அகன்றுபோய்விடாமலும், அவர்களிடம் மிக நெருங்கிப்போய் நின்றுவிடாமலும், இரண்டு நிலைகளுக்கும் இடைப்பட்ட நிலையில் நிற்க வேண்டும் என்பது இக்குறள்மூலம் உணர்த்தப்படும் கருத்தாகும்.

பொதுவாகக் குளிரால் நடுக்கமுறுபவர்கள், குளிரைப் போக்கிக்கொள்வதற்கு, விறகுக் கட்டைகளை, அல்லது செத்தை, சுள்ளி போன்றவற்றைக் குவித்து, அதற்குத் தீமூட்டி அதன் அருகில் உட்கார்ந்துகொள்வார்கள். எவ்வளவு தொலைவில் உட்கார்ந்திருந்தால் சூடு தாங்கக் கூடியதாக இருக்குமோ அவ்வளவு தொலைவில் உட்கார்ந்து கொள்வார்கள். இந்த நிகழ்ச்சியைத்தான் வள்ளுவர் இங்கு உவமையாகக்கொள்கிறார்.

தீயை இகல்வேந்தர்க்கும், காய்வாரை அமைச்சாகக்கும் உவமைகளாக்க கூறப்பட்டிருக்கின்றன.

தீ எப்படி ஆக்கவும், அழிக்கவும் வல்லதோ, அப்படியே வேந்தனும் ஆக்கவும், அழிக்கவும் வல்லமை படைத்தவனாவான். தீயினால் எப்படி நன்மையும், தீமையும் ஏற்படுமோ, அப்படியே, வேந்தனாலும் தன்மையும், தீமையும் ஏற்படும். குளிரைப் போக்கிக்கொள்ள விரும்புகிறவர்கள் எப்படித் தீயிடத்தில் மிகவும் நெருங்கிவிடாமலும்,

தீயினின்றும் மிகவும் அகன்று போய்விடாமலும், தங்களைத் தாங்களே மிக அக்கறையுடன் பாதுகாத்துக் கொள்கிறார்களோ, அப்படியே மக்களுடைய குறைகளையும், தங்களுடைய குறைகளையும் போக்கிக்கொள்ள விரும்புகிற அமைச்சர்கள், வேந்தனிடம் மிகவும் நெருங்கி விடாமலும், வேந்தனிடத்தினின்றும் மிகவும் அகன்றுபோய் விடாமலும் மிக உன்னிப்போடு பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

தீயினுடைய பண்பை உணராமல் மிக நெருங்கி விட்டால் அது உடன் சுட்டுவிடும்; அதுபோல விரைவில், சினங்கொள்ளக்கூடிய வேந்தனின் பண்பை உணராமல் அமைச்சர்கள் நெருங்கி விட்டால், உடனே அவர்களுக்கு வேந்தனால் தண்டனை கிடைக்கும். தீக்காய்வார் தீயை விட்டு நீண்ட தொலைவுக்கு அகன்று விடுவார்களானால், தீயினால் அவர்களுக்கு ஏற்பட வேண்டிய பயன் எதுவும் ஏற்படாது; அதுபோல, அரசனை அண்டி வாழும் அமைச்சர்கள் அரசனோடு தொடர்பு கொள்ள முடியாத அளவுக்கு விலகி நிற்பார்களாயின், அரசனால் ஏற்பட வேண்டிய நன்மைகள் அமைச்சர்களுக்கும், குடிமக்களுக்கும் கிடைக்காமல் போய்விடக்கூடும்.

அரசர்களோடு அமைச்சர்கள் தொடர்பு கொள்ளுவதைப் போலவேதான், உயர்ந்தவர்களோடு அதுவற்றவர்களும், அறிவிற்சிறந்தவர்களோடு அது அற்றவர்களும், உயர்நிலை அதிகாரிகளோடு கீழ்நிலை அலுவலாளர்களும் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்பது இக்குறளால் பெறப்படுவதாகும்.

தீக்காய்வாரை உவமையாகக்கொண்டு வள்ளுவப் பெருந்தகையார் உணர்த்தியுள்ள கருத்து மிகவும் போற்றி மகிழ்வதற்குரியதாகும்.

அணிகலனும் அமைச்சனும்

அரசனுக்குத் துணையாக அமைச்சன் ஒருவன் இருக்கிறான் என்றால், அவன் பெற்றிருக்க வேண்டிய சீரிய பண்புகள் பலவாகும்.

அரசன் பகை நாட்டின்மீது படையெடுக்க விரும்பினாலும், படையெடுத்து வந்த மாற்றரசனை முறியடிக்க விரும்பினாலும், போர் வினையை மேற்கொள்ளுவதற்கு ஏற்ற படை, பொருள் முதலிய கருவிகளையும், காலத்தையும், செய்யும் முறையையும், செயலையும் எண்ணிப் பார்க்கும் வல்லமை அமைச்சனிடம் சிறப்பாக அமைந்திருக்க வேண்டும், மேலும் உறுதியோடிருத்தல், குடிகளைக் காத்தல், நீதி நூல்களையும், அற நூல்களையும் கற்றறிந்திருத்தல் செய்ய வேண்டியவற்றைச் செய்தல், தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்த்தல், முயற்சியை மேற்கொள்ளல், பகைவர்க்குத் துணையானவர்களைப் பிரிக்க வேண்டிய நேரத்தில் பிரித்தல், தமக்கு வேண்டியவர்கள் பிரிந்து போகாதவாறு பார்த்துக் கொள்ளுதல், முன்னொரு காலத்தில் பிரிந்து சென்றவர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டி நேரிடும்போது சேர்த்துக்கொள்ளுதல், வினைகளை ஆராய்தல், ஆராய்ந்து செய்தல், உறுதியாக உழைத்தல், உலக இயற்கையை அறிந்து நடத்தல், நன்கு முடிவு செய்யப்பட்ட செயல்களையே செய்தல், குறிப்பறிந்து நடத்தல் போன்றவை மிக முக்கியமான பண்புகளாகும். இவற்றில் குறிப்பறிந்து நடத்தல் என்பது மிகமிக முக்கியமான பண்பாகும்.

பொதுவாக மேற்சுட்டிக்காட்டிய பண்புகளும், குறிப்பாகக் குறிப்பறியும் பண்பும் அரசனுக்குத் துணையாக இருக்கும் அமைச்சனுக்கு மட்டுமே இருக்கவேண்டிய பண்புகள் என்று கொள்ளுதல் கூடாது; அரசன் அமைச்சன் போன்ற தன்மையில் தொடர்புகொண்டிருக்கும் எல்லா நிலையினர்க்கும் இருக்கவேண்டிய பண்புகளாகும். எடுத்துக்காட்டாக ஆணையாளர்க்குத் துணையாக இருக்கும் துணை ஆணையாளர்க்கும், மருத்துவருக்குத் துணையாக இருக்கும் துணை மருத்துவருக்கும், கணவனுக்குத் துணையாக இருக்கும் மனைவிக்கும் இருக்க வேண்டிய பண்புகளாகும். அதுவும் குறிப்பறிந்து நடத்தல் என்னும் பண்பு மிகமிக முக்கியமாக எல்லா நிலையினர்க்கும், எல்லா வகையினர்க்கும், எல்லாப் பிரிவினர்க்கும், எல்லாத் தரத்தினர்க்கும் இன்றியமையாது வேண்டப்படுவதாகும்.

குறிப்பறிதல் என்பது, ஒருவர் தம்முடைய உள்ளத்தில் கொண்டிருக்கும் கருத்து இன்னது என்று வெளிப்படுத்துவதற்கு முன்னரே அல்லது வெளிப்படுத்தாமலிருக்கும்போது, அவருடைய கண், முகம், நடை, உடை, நடிப்பு ஆகியவற்றின் மூலமாக அவர்தம் உள்ளக் கிடக்கையை அறிந்துகொள்ளும் தன்மையாகும்.

ஒருவருடைய முகத்தையும், கண்ணையும் உற்று நோக்கினாலேயே, அவர் மகிழ்ச்சியோடிருக்கிறாரா அல்லது துக்கத்தோடிருக்கிறாரா, சினத்தோடிருக்கிறாரா அல்லது அமைதியோடிருக்கிறாரா, கவலையோடிருக்கிறாரா அல்லது மனநிறைவோடிருக்கிறாரா, வஞ்சக உணர்வோடிருக்கிறாரா அல்லது வெள்ளை உள்ளத்தோடிருக்கிறாரா, நன்மை புரியும் எண்ணத்தோடிருக்கிறாரா அல்லது தீங்கு செய்யும் எண்ணத்தோடிருக்கிறாரா, நட்புணர்ச்சி காட்டுகிறாரா அல்லது பகையுணர்ச்சி காட்டுகிறாரா என்பது தெரிந்துவிடும். அப்படிக் குறிப்பால் உள்ளக் கிடக்கையை முன்கூட்டியே அறிந்துகொள்வதன்

மூலம், அப்படிப்பட்டவர்களை எப்படி வரவேற்க வேண்டும், அப்படிப்பட்டவர்களிடத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை எளிதில் தீர்மானித்துக்கொள்ளலாம். குறிப்பறிதலானது, தீங்கைக் குறைத்துக்கொள்ளவும், நன்மையைப் பெருக்கிக் கொள்ளவும் வழிவகை செய்வதாகும்.

குறிப்பறிந்து கூறும் வல்லமை பெற்ற அமைச்சன் எப்படிப்பட்டவன் என்பதை வள்ளுவப் பெருந்தகையார் ஓர் உவமையின்மூலம் விளக்கிக் காட்டுகிறார். அவனை ஓர் அருமையான, அழகான அணிகலனுக்கு ஒப்பிடுகிறார்.

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக் கணி. (குறள் – 701)

(அரசன் சொல்ல வேண்டாமல் அவன் உள்ளம் குறித்ததனை, முன்கூட்டியே அவன் முகத்தினைக் கொண்டும் கண்ணினைக்கொண்டும் நோக்கி அறியும் அமைச்சன், எப்பொழுதும் வற்றாத நீரால் சூழப்பட்ட வையத்துள்ளார்க்கு ஓர் அணிகலனாகும். எஞ்ஞான்றும் – எப்பொழுதும்; மாறாநீர் – வற்றாத நீர்; அணி – அணிகலன்.)

வற்றாத நீரால் சூழப்பட்ட உலகத்திலுள்ளார்க்கு அணிகலன் எப்படி அழகு செய்கின்ற ஒன்றாக அமையுமோ, அப்படியே அரசனின் குறிப்பறிந்து நடக்கும் அமைச்சன் நாட்டிற்கு ஓர் அணிகல னாவான் என்பது இக்குறள் கூறும் கருத்தாகும்.

அணிகலனை அமைச்சனுக்கும், உலகத்தாரை நாட்டிற்கும் உவமைகளாகக் கூறியுள்ளார் ஆசிரியர்.

பொருத்தமாக அணியப்படும் அணிகலன் அணிந்துகொள்பவர்க்கு அழகு உண்டாக்கும்; அதுபோலக், குறிப்பறிந்து நடக்கும் அமைச்சன், அவனை ஏற்றுக்கொண்டிருக்கிற நாட்டிற்கு அழகு செய்பவனாவான். அணிகலன் விரும்பிப் பெறப்படு கின்ற ஒன்று; அதுபோல அமைச்சனும் விரும்பிப் பெறப்படும் ஒருவனாவான். அணிகலன் போற்றிக்

காப்பாற்றப்பட வேண்டிய ஒரு பொருள்; அதுபோல அமைச்சனும் போற்றிக் காப்பாற்றப்பட வேண்டிய ஒருவனாவான். அணிகலன் அணியப் பெறுபவர்களாலும், பிறராலும் மதிக்கப்படுகின்ற ஒன்று; அதுபோல, குறிப்பறியும் அமைச்சன் அவனைக் கொண்டிருக்கிற நாட்டினராலும், பிற நாட்டினராலும் மதிக்கப்படும் ஒருவனாவான். சிறந்த அணிகலனை அணிந்துகொள்பவர்க்கு அதனை அணிந்து கொள்வதில் ஒருவிதப் பூரிப்பும், பெருமையும் ஏற்படுகின்றன; அதுபோலக் குறிப்பறியும் அமைச்சனைக் கொண்டிருப்பதில், ஒரு நாட்டிற்குப் பூரிப்பும், பெருமையும் ஏற்படுகின்றன.

ஒருவற்குப் பொருத்தமான அணிகலன் எப்படி அழகு செய்யுமோ, அப்படிக் குறிப்பறியும் அமைச்சன் நாட்டிற்கு அழகு செய்பவனாவான்.

'வற்றாத நீரால் சூழப்பட்ட' என்பது உலகிற்குக் கொடுக்கப்பட்ட அடைமொழியாகும்.

குறிப்பறியும் அமைச்சனுக்கு அணிகலனை உவமையாகக் கூறிய வள்ளுவப் பெருந்தகையாரின் நயப்பாடு பெரிதும் பாராட்டி மகிழ்வதற்குரியதாகும்.

வானோர்

வானோர் (குறள் 18, 346) - வான்புகழ் கொண்ட மேலானவர்; வானத்தவர் என்று அழைக்கப்படுபவரும் அவரேயாவர். மக்கள் வாழும் உலகத்தை 'நில உலகம்' என்றும், புகழோடு மட்டும் நிலவும் உலகத்தை 'வான் உலகம்' என்றும், 'மேல் உலகம்' என்றும் 'புத்தேள் உலகம்' என்னும் அழைப்பது உண்டு. சிறப்புக்குரிய, பெருமைக்குரிய மேலானவர் நிலைத்துப் பெற்றிருக்கும் புகழை 'வான்புகழ்' என்று சொல்லுவது மரபு. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்ற பாரதியாரின் கூற்று நோக்கத்தக்கது. — நாவலர்

நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை வெளியீடுகள்

டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் எழுதிய நூல்கள்

1. பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு - ரூ. 180-00
   [சிறப்புச் சலுகை விலை] - ரூ. 135-00
2. திராவிட இயக்க வரலாறு - ரூ. 200-00
   [சிறப்புச் சலுகை விலை] - ரூ. 150-00
3. திருக்குறள் தெளிவுரை - ரூ. 180-00

படிகளுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை
7/4, மாசிலாமணி தெரு,
சீத்தம்மாள் குடியிருப்பு,
ஆழ்வார்பேட்டை,
சென்னை - 600 018.
தொ.பே. எண். 2432 7882

பாவேந்தரும் நாவலரும்

டாக்டர் நாவலர் அவர்கள், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பற்றிச் சென்ற இரண்டு மணி நேரமாகப் பேசிய எழுச்சிமிக்க பேச்சை இன்று கேட்டு, நான் மெய்ம்மறந்து போனேன்! நேரம் போனதே எனக்குத் தெரியவில்லை! புரட்சிக் கவிஞரைப்பற்றியும், அவரது கவிதைகளைப்பற்றியும், கூறிய ஒவ்வொரு கருத்தையும் நான் மிக்க மகிழ்ச்சியோடு இரசித்தேன்!

நாவலரின் பேச்சைக் கேட்டவுடன் நான் முப்பது வயதுடைய ஓர் இளைஞனாக ஆகிவிட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும். புரட்சிக் கவிஞரின் கவிதைகளைச் சொல்ல வேண்டிய முறையில் சொல்லி, அவற்றை விளக்க வேண்டிய தன்மையில் விளக்கி, அவற்றைத் தெளிவுபடுத்த வேண்டிய வகையில் தெளிவுபடுத்தும் ஆற்றலை, நாவலரைத் தவிர யாராலும் பெற்றிருக்க முடியாது.

புரட்சிக் கவிஞர் எழுதிய கவிதைகளெல்லாம், ஒருகால் மறைந்துவிட்டாலும்கூட, நாம் நாவலரைக்கொண்டு அவற்றை யெல்லாம் புதுப்பித்துக்கொள்ளலாம். அந்த அளவுக்குக் கவிதை களையெல்லாம், அவர், தம் உள்ளத்தில் பதிய வைத்துள்ளார்.

இப்படிப்பட்ட இலக்கியப் பேச்சுகளை அடிக்கடி கேட்க வேண்டும் என்னும் பேராவல், ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஏற்பட்டிருப்பது இந்த விழாவின்மூலம் பெற்றதொரு பெரும் பயனாகும்.

- டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.

(பாவேந்தர் பிறந்தநாள் விழா - சென்னை - 1983)

"தமிழ் எப்படியெல்லாம்
பேசுவதற்குரியது.
இசைக்கியம் பேச்சுடன் கலந்து
வரும்போது எந்தகைய இன்ப
மளிக்கும் என்றெல்லாம் நான்
பலமுறை எண்ணிப் பார்த்த துண்டு !
என் மனதிலே உருவெடுத்துக்
கொண்டிருந்த ஆசை நடமாடக்
கண்டேன் தோழர் நெடுஞ்செழியன் கழக
மேடைகளில் பேசத் தொடங்கியதும்!

கருவூர்! ஆற்று மணலில்! நினைவிருக்கிறது.
பெரியாரும் இருந்தார்! தோழர் நெடுஞ்செழியன்
இலக்கியக் கருத்துக்களை இனிய முறையில்
தென்னத் தெளிவாக எடுத்துரைத்தார்! தனித் தமிழில்
— செந்தமிழ் நடையில் அவர் பேசினார்! நல்ல
விருந்து! ஆயினும் என்ன செய்வது? பாமர
மக்களுக்கும் புரியக் கூடிய வகையில் நாளா
வட்டத்தில் சொற்களின் அருமையையும், கடுமை
யையும் சிறிதளவு தளர்த்தும்படி கேட்டுக் கொள்ள
வேண்டியிருந்தது. அவர் அளவுக்குச் சாதாரண
மக்கள் வளரவில்லை. எனவேதான் அவரை
வளைந்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்ள
வேண்டி வந்தது!

தரத்தை வளரச் செய்யும் போக்கிலா
ஆளவந்தார்கள் மக்களையெல்லாம் விட்டு
வைத்திருக்கிறார்கள்?
நடை இருக்கட்டும்!

நண்பர் நெடுஞ்செழியனின் நிறம்
இருக்கிறதே,
அதைக் கண்டு தான் வியப்புற்றேன்"

- அறிஞர் அண்ணா.